விலை ரூபா 25.00

பிரியங்காவின் கனவு இல்லம்

பக்கம் 8

அடித்தால் திருப்பி அடிப்போம்

பக்கம் 10

பணம் பெற்றால் அறிவியுங்கள்

பக்கம் 15

தீர்ப்புகள் சரியில்லை

பக்கம் 23

www.onlineuthayan.com ★

பக்கங்கள் : 28

# உதயன்

சுடர் 27
கதிர் 192

வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 23 செவ்வாய்க்கிழமை (05/06/2012) UTHAYAN - A Lively National Tamil Daily



வரலாற்றுப்புகழ் மிக்க வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் திருவிழா நேற்று நடைபெற்றது.

## மன்னார் ஆயரின் பாதுகாப்புக் குறித்து மஹிந்தவிடம் வினவுவார் பாப்பரசர்



ரோம். ஜூன் 5

மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகையின் பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்துப் பரிசுத்த பாப்பரசர் 16 ஆவது பெனடிக்ற், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தனது அதிருப்தியை வெளியிடுவார் என்று வத்திக்கான் வட்டாரங்கள் கூறுகின்றன.

பிரிட்டன் மகாராணியின் வைர விழா நிகழ்வுக்காகப் பிரிட்டனுக்குச் சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்வரும் 7 ஆம் திகதியன்று வத்திக்கானுக்கு செல்லவுள்ளார். இதன்போது அவர் பாப்பரசரைச் சந்திக்கவுள்ளார்.

இந்தநிலையில், மன்னார் ஆயர் மேதகு 04↘



## மகஸின் கைதிகள் இன்று முதல் உண்ணாவிரதம்

கொழும்பு, ஜூன் 5

இரண்டு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து வெலிக்கடை புதிய மகஸின் சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் இன்று முதல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

பல வருடங்களாக சிறைப்பிடிக் 04↘

# லண்டனை விட்டு உடன் ராஜபக்ஷவே வெளியேறு

## ஹீத்ரோ விமான நிலையத்தில் திரண்ட தமிழர் ஆர்ப்பாட்டம்
## கடும் பாதுகாப்புடன் அங்கிருந்து மறைந்து நகர்ந்தார் மஹிந்த



லண்டன், ஜூன் 5

பிரிட்டனுக்கான 4 நாள் பயணத்தை மேற்கொண்டு அங்கு சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் தரையிறங்கியவேளை ஏற்கனவே அங்கு திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் அவரது வருகைக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் கைகளில் புலிக்கொடிகளை ஏந்தியவாறு ஜனாதிபதிக்கு எதிரான கோஷங்களையும் எழுப்பினார்கள். இதனால் சில மணி நேரம் விமான நிலையத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. ஆர்ப்பாட்டத்தினால் ஏற்பட்ட பரபரப்பினால் அங்கு பாதுகாப்பை உறுதிப் 04↘

## 12 தமிழ் அரசியல் கைதிகள் பொதுமன்னிப்பு கோரியுள்ளனர்

கொழும்பு, ஜூன் 5

பயங்கரவாதச் சட்டத்தின்கீழ் சிறையில் உள்ள 12 தமிழ் அரசியல் கைதிகள் தமக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவர்கள் பொதுமன்னிப்பைக் கோரி ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவிடம் கடந்த வாரம் கையளிக்கப்பட்டுள்ளதாக 04↘

## லண்டனில் உயர்மட்டச் சந்திப்புக்கள் ஜனாதிபதி மஹிந்தவுடன் இல்லை

லண்டன், ஜூன் 5

பிரிட்டன் சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் அங்கு உயர்மட்டச் சந்திப்புகள் எதையும் பிரிட்டன் ஏற்பாடு செய்யவில்லை எனத் தெரியவருகிறது.

இலங்கையில் இருந்து புறப்பட முன்னர் ஜனாதிபதி மஹிந்த பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனைச் சந்தித்துப் பேசுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் முயற்சியில் இலங்கை வெளிவிவகார அமைச்சு மேற்கொண்டிருந்தது. எனினும் அதற்குப் பிரிட்டன் வெளி விவகார அமைச்சிடம் இருந்து சாதகமான பதில் 04↘

## அரசியல் கைதிகள் விவகாரம்; கையிலெடுக்கிறது சர்வதேசம்

### வெளிநாட்டுத் தூதுவர்கள் ஆலோசனை

கொழும்பு, ஜூன் 5

தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பில் பிரிட்டிஷ், அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் தமது அதி உச்ச கவனத்தைச் செலுத்தியுள்ளன.

இது தொடர்பில் அந்தந்த நாடுகளின் இலங்கையிலுள்ள தூதுவர்கள் விசேட அவதானம் செலுத்தி வருகின்றனர் என 04↘

## நாடு கடத்தப்பட்டோர் கண்காணிக்கப்படுவர்

கொழும்பு, ஜூன் 5

பிரிட்டனில் இருந்து திருப்பியனுப்பப்பட்ட இலங்கையர்கள் தொடர்பில், தொடர்ந்தும் கவனம் செலுத்தப்படும் என்று இலங்கையில் உள்ள பிரிட்டன் தூதரகம் தெரிவித்துள்ளது

கடந்த முதலாம் திகதியன்று பிரிட்டனில் அடைக்கலம் நிராகரிக்கப்பட்ட 36 பேர் இலங்கைக்குத் 04↘

## சட்டவிரோதக் கருக்கலைப்பு பறித்தெடுத்தது தாயின் உயிரை

### புதைக்கப்பட்ட சிசுவும் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 5

சுன்னாகம் பிரதேசத்தில் முறையற்ற விதத்தில் கர்ப்பம் தரித்த தாயொருவர், சட்டவிரோதக் கருக்கலைப்பினால் அதிக இரத்தப் போக்கு ஏற்பட்டு மரணமானார். அவரது 9 மாதச் சிசு அருகிலுள்ள காணியில் புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் 04↘

## மர்மப் பொருள் வெடித்ததில் நயினாதீவில் மாணவன் சாவு

### கடலில் மிதந்து வந்ததை பரீட்சித்தவேளை பரிதாபம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

நயினாதீவு, 8ஆம் வட்[illegible] மர்மப் பொருள் ஒன்றை எடுத்து பரிசோதித்த 15 வயது மாணவன் அது வெடித்துச் சிதறியதில் உயிரிழந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்த [illegible] வித்தியாலயத்தில் தரம் -10 இல் கல்விகற்கும் தர்மகுலசிங்கம் ரூபன் 04↘

## போருக்குப் பின்னும் பாதுகாப்பை வலுப்படுத்தும் தேவை உண்டு

### அமெரிக்க, இந்திய பாதுகாப்பு அமைச்சர்களிடம் கோத்தபாய, பீரிஸ் சிங்கப்பூரில் விளக்கமளிப்பு

கொழும்பு, ஜூன் 5

இலங்கையின் மூன்று தசாப்த காலப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற போதிலும், பிராந்தியத்திலும், உள்நாட்டிலும் மீண்டுமொரு பதற்ற நிலைமை ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டிய வலுவான தேவை எழுந்திருக்கிறது என்று இலங்கை 04↘

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் அல்குவைதாவா?

## கெஹலிய மழுப்பலான பதில்

கொழும்பு, ஜூன் 5

அல்குவைதா மற்றும் தலிபான்களுடன் தொடர்புடைய தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு தடைகளை விதிப்பதற்கான சட்டங்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என அரசு தெரிவித்தது.

உலக சூழ்நிலைக்கேற்ப நாம் செயற்பட வேண்டியிருப்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இப்புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன என அரச பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல கூறினார்.

இலங்கையில் அல்குவைதா மற்றும் தலிபான் அமைப்புகளுடன் தொடர்புயை சக்திகள் உள்ளன என அரசு நம்புகிறதா என அவரிடம் கேட்டபோது, அமைச்சர் ரம்புக்வெல்ல மழுப்பலாகப் பதிலளித்தார். 'நோயை குணப்படுத்துவதைவிட தடுப்பது சிறந்தது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. உலகின் ஏனைய பாகங்களில் இடம்பெறுவதை நாம் அவதானித்து செயற்படுகிறோம்' என அவர் கூறினார்.

இதேவேளை இந்தச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவது குறித்து சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி கருத்துத் தெரிவிக்கையில், இத்தகைய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான காரணம் எதுவும் இருப்பதாகத் தான் நம்பவில்லை எனக் கூறினார்.

'அல் குவைதா அல்லது தலிபான் இலங்கையில் இல்லை. இது உண்மை. கிழக்கில் கூட இப்பயங்கரவாத குழுக்களுடன் தொடர்புடையவர்கள் இல்லை என்பது தெளிவான விடயம்' என அவர் கூறினார்.

ஐ.நாவுடனான இலங்கையின் கடப்பாட்டுக்கு இணங்க இப்புதிய ஒழுங்கு விதிகள் அமுல்படுத்தப்படவுள்ளன. இதன்படி அல்குவைதா மற்றும் தலிபான்களுடன் தொடர்புவைத்திருத்தல், உதவியளித்தல், நிதியளித்தல் என்பனவற்றுக்கு அபராதம் மற்றும் சிறைவாசம் போன்ற தண்டனைகள் விதிக்கப்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# போர்க்குற்றவாளியான மஹிந்தவுடன் மகாராணி விருந்தில் பங்கேற்பது ஏன்?

## மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கேள்வி

லண்டன், ஜூன் 5

போர்க்குற்றவாளியான மகிந்த ராஜபக்ஷவுடன் ஏன் மதிய உணவில் பங்கேற்க வேண்டும் என பிரித்தானிய மகாராணியிடம் கேள்வி எழுப்பியுள்ளார் மனிதஉரிமைகள் கண்காணிப்பகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கென் ரோத்.

தனது ருவிற்றர் பக்கத்திலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார். இந்தநிலையில், ஜனாதிபதியின் பிரிட்டன் பயணத்துக்கு எதிரான போராட்டங்கள் லண்டனில் தீவிரமடைந்துள்ளன.

ஹீத்ரோ விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவும் பெருமளவில் தமிழர்கள் திரண்டு நின்று மகிந்த ராஜபக்ஷவின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதேவேளை அவர் நாளை மாலை 7 மணியளவில் லண்டனில் உள்ள மன்சன் ஹவுசில் உரையாற்றவுள்ளார். இதன்போது மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, போராட்டங்களை நடத்துவதற்கும் புலம்பெயர் தமிழர்களால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (த)

# தடை செய்யப்படாத நிலையில் ஆபாச இணையத்தளங்கள்

கொழும்பு, ஜூன் 5

ஆபாச இணையத்தளங்கள் தடைசெய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் பல தடவைகள் கூறியுள்ளபோதிலும், ஆபாச இணையத்தளங்கள் எதுவும் இலங்கையில் தடை செய்யப்படவில்லை என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்தவிடயத்தில் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு செயற்படவில்லை என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பொறுப்பதிகாரி புத்திக பாலசந்திர தெரிவித்தார்.

''ஆபாச படங்கள் கொண்ட இணையத்தளங்களைத் தடை செய்வதற்கு உரிய சகல நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டோம். இலங்கை மொடல்களைக் கொண்ட 300 ஆபாச இணையத்தளங்களை தடை செய்வதில் நாம் வெற்றியடைந்தோம். எனினும் இந்த நடவடிக்கைகள் அனைத்தும் முடங்கியுள்ளன. எனினும் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் வினைத்திறனாகத் தடை பிரயோகிக்கப்படாததால் அந்த இணையத்தளங்கள் வித்தியாசமான பெயர்களில் இயங்குகின்றன'' என அவர் கூறினார்.

''ஆபாச இணையத்தளங்களை தடைசெய்வது சாத்தியமானதல்ல எனவும் அது தெரிவுக்கான சுதந்திரத்தைப் பாதிக்கும் எனவும் சுட்டிக்காட்டியபோது, இத்தகைய இணையத்தளங்கள் இயங்குகின்றன என்பதை தெரிவித்து இத்தகைய தளங்களை சிறுவர்கள் அடைவதை தடுக்க வேண்டும் என்பதுகுறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதே தமது நோக்கம்'' என அப்பொறுப்பதிகாரி தெரிவித்தார். (த)

# நுவரெலிய மோதலில் இருவர் சாவு

கொழும்பு, ஜூன் 5

நுவரெலியா மாகாஸ் தோட்ட கீழ் பிரிவில் நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இரண்டு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் இருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதுடன், இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

சண்முகம் கிருஸ்ண சூடாமணி (வயது 50) தங்கராஜ் ஞானசுந்தரி (வயது 25) ஆகிய இருவருமே வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ள அதேவேளை, ராஜமாணிக்கம் தமிழ்செல்வம் (வயது 25), ராசலிங்கம் கிருஸ்ணசாமி (வயது 30) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணியளவில் இரண்டு சிறு வர்த்தகக் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலின்போது இரு சாராரும் கத்திகளை கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மோதலில் படுகாயமடைந்த நால்வரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இருவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் 6 பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஏனைய 5 பேரையும் கைதுசெய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் நுவரெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.எம்.கமல்ரணவீர தெரிவித்தார். (த)

# ஹன்ரர் – மோ.சைக்கிள் விபத்தில் இளைஞர்கள் இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

அச்சுவேலி வளலாய்ப் பகுதியில் இடம்பெற்ற ஹன்ரர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் அச்சுவேலியைச் சேர்ந்த தேவகுமார் பிரசாத் (வயது-21) இரு கால்கள் மற்றும் நெஞ்சுப் பகுதியில் பலத்த காயமடைந்துள்ளார். இவருடன் பயணித்த மயூரன் (வயது-22) கால் மற்றும் கைகளில் பலத்த காயங்களுக்கு இலக்காகினார். வீதிக் கடவையைமாறி வேகமாகப் பயணித்த ஹன்ரர் வாகனமும் அச்சுவேலி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களும் படுகாயமடைந்து மிகவும் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (10-14)

# காணி இழந்த வடக்கு–கிழக்கு மக்கள் அவற்றை உரிமை கோரப் புதிய சட்டம்

## நீதியமைச்சர் ஹக்கீம் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 5

இடம் பெயர்ந்த மற்றும் போரினால் காணிகளை இழந்த வடக்கு-கிழக்கை சேர்ந்தவர்கள் தமது காணிகளுக்கு உரிமை கோரப் புதிய சட்டம் ஒன்று நடைமுறைக்கு வரவுள்ளதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இதன்படி எவ்வித பிரச்சினைகளும் இன்றி சுமார் 10 வருடங்களாக வேறு ஒருவரின் காணியில் குடியிருப்போருக்கு அந்தக் காணியை உரிமை கோர முடியும் என்ற சரத்து நீக்கப்படும்.

30 வருட போர் காரணமாக வடக்கு-கிழக்கில் இடம்பெயர்ந்தவர்களின் காணிகளில் மாற்றார் குடியேறியுள்ளனர். இதன்படி வீடுகள் காணிகள் என்பவற்றையும் அவர்கள் தமது உரிமையாக்கியுள்ளனர். இதனை நீக்கி போரினால் இடம் பெயர்ந்தவர்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் புதிய சட்டம் இருக்கும்.

இதற்கான சட்ட முன் வரைவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இந்த சட்டத்தின் படி 1983 ஆம் ஆண்டு மே முதலாம் திகதி முதல் 2012 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான பகுதியில் காணிகளை இழந்தவர்கள் இடம் பெயர்ந்தோர் அல்லது பாதிக்கப்பட்டோர் என்ற வகுதிக்குள் உள்ளடக்கப்படவுள்ளனர்-என்றார். (த)

# விபத்தில் சிறுவன் படுகாயம்

மோட்டார் சைக்கிளுடன் துவிச்சக்கரவண்டி மோதியதில் பாடசாலைச் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை 6.30 மணியளவில் அராலிப் பகுதியில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த அ.நிலக்ஷன் (வயது-15) என்ற மாணவனே படுகாயமடைந்தவர் ஆவார். (10-14)

# ஈழம் மலர வேண்டும்

## பிறந்தநாள் செய்தியில் கருணாநிதி

கொழும்பு, ஜூன் 5

இலங்கையில் தனித் தமிழீழம் மலர வேண்டும் என்பதே தமது பிறந்த நாள் செய்தி என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருணாநிதியின் 89ஆவது பிறந்த நாள் விழா பொதுக் கூட்டத்தில் அவர் பேசியதாவது:-



தோல்வியைத் தாங்கிக் கொள்ளும் மனபக்குவம் ஆட்சிக்கும், கட்சிக்கும், தலைவருக்கும் வந்தால் தான் உண்மையான வெற்றி பெறமுடியும். தி.மு.க. அரசு 15 ஆண்டு காலம் ஆட்சி நடத்தி உள்ளது. மக்களை எப்படி மதிக்கவேண்டும் என்றும், மக்கள் குரலே மகேசன் குரல் என்றும் நாம் பணியாற்றி உள்ளோம்.

இலங்கையில் சிங்கள இனம் வேறு, தமிழர் இனம் வேறு என்ற நிலை உள்ளது. தமிழர்களுக்குச் சம உரிமையுடன் வாழவேண்டும் என்பதற்காக டெசோ மாநாட்டை மீண்டும் தமிழகத்தில் நடத்தவேண்டும் என்று முடிவெடுத்திருக்கிறோம்.

இதை நான் பிறந்தநாள் செய்தியாகச் சொல்கிறேன். விரைவில் விழுப்புரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம், விடுதலை சிறுத்தைகள் ஆகிய கட்சிகளோடு சேர்ந்து டெசோ மாநாடு ஓகஸ்ட் 5 ஆம் திகதி நடத்தப்பட உள்ளது.

விரைவில் இலங்கையில் தனி ஈழம் உருவாக வேண்டும் என்பதுதான் எனது பிறந்தநாள் செய்தியாகும் என்றார் கருணாநிதி. (த)

# சவூதி சிறையில் சிரமப்படும் இலங்கைப் பணியாளர்கள்

றியாத், ஜூன் 5

சவூதி அரேபியாவில் மலாஸ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைப் பணியாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

சிறு குற்றங்களுக்காக பெருமளவிலான இலங்கையர்கள் அந்த நாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

> சிறு குற்றங்களுக்காக பெருமளவிலான இலங்கையர்கள் அந்த நாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தாம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து இலங்கை தூதரகத்துக்கு அறிவித்துள்ள போதிலும் இதுவரை கவனம் செலுத்தப்படவில்லை என்று இலங்கைப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் அமல் சேனாதிலங்கார கருத்து வெளியிடுகையில், இந்த பணியாளர்களின் பிரச்சினைகள் குறித்து உடனடியாக கவனம் செலுத்தப்படும் என்று கூறினார்.

சவுதியிலுள்ள இலங்கைத் தூதரகம் ஊடாக அதிபர்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த)

# கர்ப்பிணி மீது பிக்கு வன்புணர்வு

கொழும்பு, ஜூன் 5

வலஸ்முல்ல கொலுவார பிரதேசத்தில் 23 வயதுடைய கர்ப்பிணிப் பெண் பௌத்த பிக்கு ஒருவரால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

வீடு வீடாக யாசிக்கும் 17 வயது சிறிய பிக்கு அவ்வீட்டில் தனியாக வசித்த பெண்ணைப்பாலியல்வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய பிக்கு கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், அவரை வரும் 11ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாதகலில் படையினர் அட்டகாசத்தை எங்குபோய் நாம் முறையிடுவது?

## விநாயகமூர்த்தி எம்.பி. வேதனை

*யாழ்ப்பாணம், ஜூன் 5*

*மாதகலில் கடற்படையினர் மேற்கொண்டுவரும் அராஜக நடவடிக்கைகளால் இந்தப் பகுதி மக்கள் பெரும் துன்பத்தை எதிர்நோக்கி வருகின்றனர். மாதகல் மேற்குப் பகுதியில் கடற்படையினர் யாத்திரிகர் விடுதி ஒன்றைத் தனியார் ஒருவருக்குச் சொந்தமான நிலத்தில் அமைத்து வருகின்றனர். இந்தப் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி ஜெயசீலன் என்பவரின் 72 பரப்புகளை உடைய மூன்றரை ஏக்கர் காணியில் இவ்வாறு யாத்திரிகர் விடுதி அமைக்கப்பட்டுவருகிறது.*

இந்தச் செயற்பாட்டை யாரிடம் போய் முறையிடுவது என்று வேதனை தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மாதகல் மேற்கு ஜே/152 கிராம அலுவலர் பிரிவிலுள்ள சம்பில் துறைப் பகுதியிலுள்ள தனியார் காணியில் யாத்திரிகர் மடம் அமைக்கப்பட்டுவருவதுமிகவும்வேதனை தரும் விடயம்.

சம்பில் துறைமுகத்துக்கும் விகாரைக்கும் இடைப்பட்ட பகுதியில் யாத்திரிகர் விடுதி அமைக்கப்பட்டு வரும் காணியைச் சுற்றி தற்போது கம்பி வேலி அடைக்கப்பட்டுள்ளது.

சுமார் இருநூறு மீற்றர் தூரத்துக்கு இவ்வாறு கடற்படையினர் கம்பிவேலி அமைத்துள்ளனர்.

இதை நான் நேரில் சென்று பார்த்தபோது அது எனக்கு வேதனையளிப்பதாக இருந்தது. அராஜக அரசியல் நடக்கும் இந்த நாட்டில் இந்த விடயம் தொடர்பாக யாரிடம் போய் முறையிடுவது என்று தெரியவில்லை.

2001 ஆம் ஆண்டின் பின்னர் சம்பில் துறைப் பகுதியில் சுமார் ஐந்து பரப்புக்கும் மேற்பட்ட காணியில் பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இப்போது யாத்திரிகர் மடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

மாதகல் மேற்கு கிராம அலுவலர் பிரிவின் மூன்றில் இரண்டு பகுதி மக்கள் மீளக்குடியமர்வுக்கு இதுவரை அனுமதிக்கப்படவில்லை.

அந்தப் பகுதியிலேயே விகாரை மற்றும் யாத்திரிகர் விடுதி என்பன அமைக்கப்பட்டு வருகின்றன.- என்றார். (ம-3)

## நடமாடும் நூலக சேவை

தென்மராட்சி, ஜூன் 5

சாவகச்சேரி நகர சபைப் பொது நூலகங்களின் நடமாடும் நூலக சேவை நேற்று முன்தினம் சங்கத்தானை ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளையால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி, மீசாலை, நுணாவில் ஆகிய பொது நூலகங்களின் அபிவிருத்திச் சபையின் தலைவரும் நகர சபைச் செயலாளருமான க.புத்திசிகாமணியின் தலைமையில் தேசிய நூலக விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட நடமாடும் நூலக சேவையில் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

நகர சபையால் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட நூல்கள் நடமாடும் சேவையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இந்த நடமாடும் நூலக சேவையை நகர சபை எல்லைக்குட்பட்ட அனைத்து வட்டாரங்களிலும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## புகைத்தல் எதிர்ப்பு கொடிவார நிதியில் வாழ்வாதார உதவிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 5

வலி. கிழக்கு பிரதேச செயலகத்தில் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு வாரத்தை முன்னிட்டு கடந்த வருடம் கொடிவாரம் மூலம் திரட்டப்பட்ட நிதியில் 4 பேருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வருடந்தோறும் சமுர்த்தி அதிகார சபையால் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு வாரத்தை முன்னிட்டு கொடிவாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

**வருடந்தோறும் சமுர்த்தி அதிகார சபையால் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு வாரத்தை முன்னிட்டு கொடிவாரம் அனுஷ்டிக்கப் படுவது வழமை**

இந்தக் கொடிவாரம் மூலம் திரட்டப்படும் நிதியில் சமுர்த்திப் பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் வலி. கிழக்குப் பிரதேச செயலகர் பிரிவில் கடந்த வருடம் கொடிவாரம் மூலம் திரட்டப்பட்ட நிதியில் 4 பேருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேபோன்று இந்த வருடம் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் கொடிவாரம் மூலம் நிதி திரட்டி, அந்தப் பகுதியிலுள்ள, சமுர்த்திப் பயனாளிகளில் வாழ்வாதார உதவி தேவைப்படுபவர்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சமுர்த்திப் பயனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

## கோட்டைக்கு பறந்தது காசு

*வீதியால் சென்ற ஒருவரின் சேட் பொக்கற்றில் இருந்த ஆயிரம் ரூபா காற்றால் பறந்து சென்றதுடன் குறித்த காசு அதற்குச் சொந்தமான வரையும் ஓடவைத்தது.*

*கடும் காற்றால் பறந்த இந்த ஆயிரம் ரூபாவை பறிகொடுத்த நபர் ஒருவாறு அதனை மீட்டுச் சென்றார்.*

*யாழ். முற்றவெளிப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சைக்கிளில் குறித்த நபர் சென்றுகொண்டு இருந்தபோதே இவ்வாறு இடம்பெற்றுள்ளது. காற்றால் பறந்த இந்த ஆயிரம் ரூபா கோட்டைப் பக்கமாகப் போய் நின்றது. (ம-17)*

## துண்டி இந்து மயானத்தை புனரமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 5

கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்தை புனர்நிர்மாணம் செய்வதற்கு யாழ்.மாநகர சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

கடந்த கால போரால் இந்த மயானம் கடுமையாக சேதமடைந்து துப்புரவுப் பணிகள் இன்றி காணப்படுகின்றது.

இந்த நிலையில் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் தற்போது முதற்கட்ட புனரமைப்புப் பணியாக இந்த மயானத்தை சுற்றி எல்லைவேலி அமைப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஏற்கனவே மயானத்தில் சடலங்களை தகனம் செய்ய செல்லும் மக்கள் அங்கு போதிய வசதிகள் இன்றி சிரமப்பட்டும் வருகின்றனர்.

தண்ணீர் வசதி மற்றும் கிரியைகள் செய்வதற்கான மடம் போன்றவை இங்கு இல்லாத நிலையில் மக்கள் பெரிதும் சிரமங்களுக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த மயானத்துக்கென தற்போது புதிய நிர்வாக அமைப்பு ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## ரிக்கெற் இன்றி தரிப்பிடம்

யாழ்.போதனா வைத்தியசாலையின் பின்புறமாக அமைந்துள்ள தற்காலிக வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு சில சமயங்களில் சிட்டை வழங்காமல் பணம் அறவிடப்பட்டு வருகின்றதுஎன்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். போதனா வைத்தியசாலை விடுதியில் உள்ள நோயாளர்களைப் பார்வையிடுவதற்கான நுழைவாயில் பின்புறமாக மாற்றப்பட்டதைத் தொடர்ந்து யாழ். மாநகர சபையால் வீதியோரத்தில் தற்காலிக வாகனத் தரிப்பிடம் அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது. நாளாந்தம் நூற்றுக் கணக்கான மக்கள் இந்தத் தரிப்பிடத்தை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையிலேயே ரிக்கற் வழங்கப்படாமல் பண அறவீடு நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது பற்றி ஊழியர்களிடம் கேட்டால் ரிக்கற் முடிவடைந்து விட்டது என்றே பதில் வருவதாக மக்கள் கூறுகின்றனர். (ம-130)

## குறிகாட்டுவான் துறைமுகத்தில் அலைமோதும் சுற்றுலாப் பயணிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 5

குறிகட்டுவான் இறங்குதுறையில் கடந்த இரண்டு நாள்களாக சனநெரிசல் அதிகரித்துக் காணப்பட்டது.

தென் பகுதியில் இருந்து அதிக எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தமையே இந்த சனநெரிசலுக்குக் காரணம்.

பொஷன் பண்டிகைக் காலமாகையால் இந்தப் பயணிகளின் வருகை அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பயணிகளின் வருகை அதிகரித்ததை அடுத்து மேலதிக படகுச் சேவைகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

குறைந்தது இருபதுக்கும் மேற்பட்ட படகுகள் சேவையில் ஈடுபட்டிருந்தன.

தற்போதைய காற்றின் தாக்கம் அதிகரித்துக் காணப்பட்டதால் படகுகளில் பயணிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே ஏற்றப்பட்டனர். அத்துடன் படகுகளில் பயணிகளுக்கு பாதுகாப்பு அங்கிகளும் வழங்கப்பட்டன. (ம-17)

## பரு. சத்திரசிகிச்சை விடுதியில் சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு

வடமராட்சி, ஜூன் 5

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை சத்திர சிகிச்சை விடுதியில் தங்கிச் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்த விடுதியில் பல்வேறு சாதாரண, பலத்த காயங்களுக்கு ஆளாவோரும், சத்திர சிகிச்சைகளைப் பெற்றோருமே அதிக எண்ணிக்கையில் தங்கிச் சிகிச்சை பெறுகின்றனர்.

பிரான்ஸ் வைத்தியக் குழுவினரால் பல நவீன கருவிகள் மூலம் நோய்கள், காயங்கள், கண்டறியப்பட்டு சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சத்திர சிகிச்சை பிரிவுக்கென வைத்திய நிபுணராக மருத்துவர் எஸ்.கிரிதரன் பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம- 8)

## வடமராட்சிப் பிரதேசத்தில் வெங்காய விலை உயர்வு

வடமராட்சி, மே 5

வடமராட்சிப் பிரதேசத்தில் வெங்காயத்தின் விலை நாளாந்தம் எகிறிக் கொண்டு செல்வதனால் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

சில மாதங்களுக்கு முன்னர் ஒரு அந்தர் வெங்காயம் சுமார் 3 ஆயிரம் ரூபா வரையிலேயே விலைபோனது. இதனால் உற்பத்திச் செலவையே பெற முடியாமல் விவசாயிகள் திண்டாடி வந்தார்கள்.

எனினும் சில வாரங்களாக வெங்காயத்தின் விலை படிப்படியாக உயர்ந்து இப்போது ஒரு அந்தர் 6 ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

கொழும்பு உள்ளிட்ட தென் பகுதிச் சந்தைகளில் வெங்காயத்தை விற்பனை செய்யவும், புத்தளம் மாவட்ட விவசாயிகள் விதையாக வெங்காயத்தைப் பயன்படுத்தவும் என புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம், சிங்கள வர்த்தகர்கள் தற்போது போட்டி போட்டுக் கொண்டு வடமராட்சிப் பிரதேசத்தில் வெங்காயத்தைக் கொள்வனவு செய்து வருகின்றார்கள்.

இதன் காரணமாக கடந்த பத்துத் தினங்களில் வெங்காயத்தின் விலை எகிறத் தொடங்கி தற்போது 6 ஆயிரம் ரூபாவாக அதன் விலை உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

## யாழில் காதி நீதிமன்று அமைப்பதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 5

யாழ்.மாவட்டத்தில் காதி நீதிமன்றம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று யாழ்.நீதிமன்ற நீதிவான் மா.கணேசராசா தெரிவித்தார்.

முஸ்லிம் சிவில் பாதுகாப்பு அமைப்பு ஞாயிற்றுக்கிழமை யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முஸ்லிம் சமூகத்தில் நிகழக்கூடிய விவாகம், விவாகரத்து, சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடியதாக இந்த நீதிமன்றம் முஸ்லிம் மக்களுக்கு உதவும்.

நீதி அமைச்சர் ஒரு முஸ்லிம் பிரதி நிதியாக உள்ளார். அவருடன் தொடர்பு கொண்டு காதி நீதி மன்றத்தை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதிவான் மேலும் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபை பிரதிமேயர் எம்.ரமீஸ், மாநகர சபையின் சட்டத்தரணி ரங்கன் மற்றும் முஸ்லிம் அமைப்புக்களின் தலைவர்கள், மதத் தலைவர்கள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர். (ம-7)

## நிகழ்வுகள் இன்று

### குருபூசை நிகழ்வு

ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயத்தில் காலை 8 மணிக்கு திருஞானசம்பந்தர் குருபூசை இடம்பெறவுள்ளது. பாடசாலை மண்டபத்தில் மாணவன் சு.அஜிந்தன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ம)

### நினைவுப் பேருரை

பேராசிரியர் சிவபாத சுந்தரம் மகேஸ்வரனின் நினைவுப் பேருரை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதிக் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் 'குழப்பம் ஓர் இடைநிலை இராச்சியம்' எனும் தலைப்பில் இந்திய ஐதராபாத் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இராமகிருஷ்ணா இராமசாமி நினைவுப் பேருரையை நிகழ்த்துவார். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லண்டனை விட்டு உடன் ராஜபக்ஷவே வெளியேறு



01 படுத்துவதற்கு பாதுகாப்பு அதிகாரிகள் கடும் சிரமப்பட்டனர். பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்த போதும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் விமான நிலையப் பயணிகள் வெளியேறும் பகுதியில் ஒன்று கூடியமையால் அங்கு பதற்றம் ஏற்பட்டதுடன் நெரிசலும் நிலவியது. எனினும் பாதுகாப்பு அதிகாரிகள் நிலைமை எல்லை மீறாமல் பார்த்துக்கொண்டனர்.

ஹீத்ரோ விமான நிலையத்தில் தரையிறங்கிய ஜனாதிபதி மஹிந்த குழுவினர் பிரிட்டன் பொலிஸாரின் உதவியுடன் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் அங்கிருந்து பாதுகாப்பான இடம் ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பிரிட்டன் மகாராணி 2 ஆம் எலிசபெத் முடிசூடி 60 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்படும் வைரவிழா நிகழ்வில் கலந்துகொள்வதற்காக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 4 நாள்கள் பயணத்தை மேற்கொண்டு பிரிட்டன் பயணமானார். இலங்கை நேரப்படி நேற்று நண்பகல் 12.30 மணியளவில் ஜனாதிபதி குழுவினர் பயணித்த 'ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ்' விமானம் ஹீத்ரோ விமான நிலையத்தை அடைந்தது. ஜனாதிபதியுடன் அவரது பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் அடங்கலாக 35 பேர் இந்த விசேட விமானத்தில் பயணித்தனர்.

ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஏற்கனவே அங்கு ஆயிரக்கணக்கான தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக விமான நிலையத்தின் பயணிகள் வெளியேறும் பாதைகள் அனைத்திலும் திரண்டிருந்தனர். விமானம் தரையிறங்குவதை அறிந்த இவர்கள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு எதிராக உரத்த குரலில் கோஷங்களை எழுப்பியதுடன் உடனடியாக லண்டனில் இருந்து வெளியேற வேண்டும் என்றும் கூச்சலிட்டனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழர்கள் அனைவரும் புலிக்கொடிகளையும், ஜனாதிபதிக்கு எதிரான சுலோகங்களையும் தாங்கியவாறு விமான நிலையத்தில் பாதுகாப்பு வழங்கிக்கொண்டிருந்த பிரிட்டன் பொலிஸாருக்கு முன்னால் நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக ஜனாதிபதி குழுவினர் விமான நிலையத்தில் இருந்து வெளியேற முடியாத நிலை ஏற்பட்டது. நிலைமையை உணர்ந்த பாதுகாப்பு அதிகாரிகள் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் பிரத்தியேக பாதை ஒன்றில் ஊடாக ஜனாதிபதி குழுவினரை அங்கிருந்து அழைத்துச் சென்று பாதுகாப்பான இடம் ஒன்றில் தங்க வைத்துள்ளனர்.

இதேவேளை ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு பிரிட்டன் தமிழ் அமைப்புக்களால் கோரப்பட்ட அனுமதிக்கு பிரிட்டன் பொலிஸார் அனுமதி வழங்கியிருந்தனர். ஜனாதிபதி மஹிந்தவின் இந்த பயணம் தொடர்பில் பொதுநலவாய அமைப்பின் செயலகத்துக்கு பிரிட்டன் வெளிவிவகார அமைச்சுக்கும் இடையில் நீண்ட வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றன. (த)

## மன்னார் ஆயரின் பாதுகாப்பு குறித்து மஹிந்தவிடம் வினவுவார் பாப்பரசர்

01 இராயப்பு ஜோசப் ஆண்டகை அண்மைக்காலமாக எதிர்நோக்கி வரும் அச்சுறுத்தல்கள் குறித்து, பாப்பரசர் தனிப்பட்ட ரீதியில் தன்து அதிருப்தியை வெளியிடுவார் என்று வத்திக்கான் தகவல்களை மேற்கோள் காட்டி செய்திகள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் ரிசாத் பதியுதீன், நாடாளுமன்றத்தில் வைத்து மன்னார் ஆயரை, பௌத்த பிக்குமாருக்கு ஒப்பிட்டமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னால் ஆயர் அளித்த காணாமல் போனோர் தொடர்பான விடயங்கள் குறித்து இலங்கைக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அவரிடம் வாக்குமூலம் பெற்றமை போன்ற விடயங்கள் வத்திக்கானுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், இந்தச் சம்பவத்தை அடுத்து மன்னார் ஆயருக்கு ஆதரவாக நடத்தப்பட்ட கூட்டத்துக்குத் தடையுத்தரவு விதிக்கப்பட்டமை, கூட்டத்தில் பங்கேற்ற சிரேஸ்ட முஸ்லிம் செய்தியாளர் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் ஆதரவாளர் ஒருவரால் தாக்கப்பட்டமை போன்ற சம்பவங்களும் வத்திக்கானுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை வத்திக்கான் செல்லும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் வத்திக்கான் நியதியின்படி, முதலில் பாப்பரசர் மன்னார் ஆயரின் விடயம் குறித்து ஜனாதிபதியிடம் தன்து அதிருப்தியை நேரடியாக வெளியிடுவார். இதன்பின்னர், பாப்பரசரின் செயலாளரான காருதினால் டார்சிஸ்ஸியோ பேர்டோன், இந்த விடயம் குறித்து இலங்கையின் ஜனாதிபதியிடம் விளக்கம் கோருவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை, 1940 ஆம் ஆண்டில் பிறந்தார். 1967ஆம் ஆண்டு குருத்துவம் பெற்றார். இதன்பின்னர் சுமார் 20 ஆம் ஆண்டுகள் அவர் மன்னார் ஆயராக செயற்பட்டு வருகிறமை குறிப்பிடத்தக் கது. (த)

## 12 தமிழ் அரசியல் கைதிகள் பொதுமன்னிப்பு கோரியுள்ளனர்

01 நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளனர்.

தமது கோரிக்கை தொடர்பாகக் குறித்த அரசியல் கைதிகள் ஜனாதிபதியின் பதிலை எதிர்ப்பார்த்துள்ளதாகவும் சுமந்திரன் குறிப்பிட்டார்.

விடுதலைப்புலிகள் பற்றிய தகவல்களை வழங்கவில்லை, அல்லது விடுதலைப் புலிகளுக்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே பலர் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் பொதுமன்னிப்புக் கோரியோருக்கு மனிதாபிமான அடிப்படையில் மன்னிப்பு வழங்கப்படும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் சுமந்திரன் தெரிவித்தார்.

போரில் நேரடியாக ஈடுபட்டவர்களை இரண்டு வருடகால புனர்வாழ்வின் அடிப்படையில் விடுவித்துள்ள அரசு அவர்களுக்கு உதவியவர்களைச் சிறைகளில் தடுத்து வைத்திருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. இவர்களில் பெரும்பாலானோர் வெலிக்கடை சிறைச்சாலையிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை தற்போது பொதுமன்னிப்பை கோரியுள்ள 12 பேரைத் தவிர ஏனைய பெரும்பாலான அரசியல் கைதிகளும் பொதுமன்னிப்புக் கடிதங்களை ஜனாதிபதிக்கு அனுப்ப தயாராகி வருவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறினார். (த)

## சட்டவிரோதக் கருக்கலைப்பு பறித்தெடுத்தது தாயின் உயிரை

01 தொடர்பில் மேலும் தெரியவருவதாவது-

சுன்னாகத்தைச் சேர்ந்த தாயொருவர் (வயது-47) முறையற்றவிதத்தில் கர்ப்பமாகியுள்ளார். குறித்த தாயின் கணவர் வெளிநாட்டில் உள்ள நிலையில் அவர் வேறொருவர் மூலம் கர்ப்பமாகியதாகத் தெரிவிக்கப்பட்டது.

வயிற்றில் கட்டி ஏற்பட்டுள்ளதாக சொல்லி கடந்த மாதம் 21ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலைக்கு அவர் சிகிச்சைக்குச் சென்றுள்ளார். இதன்போது அவரது வயிற்றில் சிசு உருவாகியமை பரிசோதனைகள் மூலம் அறியப்பட்டது.

இதனையடுத்து குறித்த தாய்க்கு இந்த மாதம் இறுதிப் பகுதியில் குழந்தை பிறக்கும் என்பதால் அவரை எதிர்வரும் 8ஆம் திகதி வைத்தியசாலை விடுதிக்கு வருமாறு வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த தாய் நேற்றுக்காலை தனது வீட்டில் வைத்தே குழந்தையை கருக்கலைப்புச் செய்ய முயன்று பிரசவித்துள்ளார்.

ஒன்பது மாதக் குழந்தை இறந்து பிறந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் கருக்கலைப்புச் செய்தவர் ஒழுங்கான முறையில் நஞ்சுக் கொடியை அகற்றாததால் தொடர் குருதிப் போக்கு ஏற்பட்டு தாயார் சோர்வடைந்த நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டார்.

அதேவேளை பிறந்த குழந்தை அயலில் வளவு ஒன்றில் புதைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. தாயார் வைத்தியசாலைக்கு கொண்டுவரும் வழியில் இறந்துள்ளார். புதைக்கப்பட்ட குழந்தையின் சடலம் கோப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (த-5)

## அரசியல் கைதிகள் விவகாரம்; கையிலெடுக்கிறது சர்வதேசம்

01 அறிவித்துள்ளனர்.

கொழும்பில் கடந்த வாரம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனைச் சந்தித்த மேற்படி நாடுகளின் தூதுவர்கள், குறித்த அவதானம் தொடர்பில் எடுத்துக்கூறியுள்ளனர்.

''இலங்கையில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் முன்னெடுக்கப்படும்ஒவ்வொரு நகர்வுகளையும் மிக உன்னிப்பாக நாம் அவதானித்து வருகின்றோம். அதில் தங்களின் பங்களிப்பு அதிகப்படியாக உள்ளதையும் அறிகின்றோம்'' - என்றும் குறித்த மூன்று நாடுகளின் தூதுவர்களும் மனோ கணேசனிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் சில தரவுகள் தமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும், மேலும் சில விடயங்களைப் பெற்றுக்கொள்ள வுள்ளனர் என்றும் அந்த நாடுகளின் தூதுவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

அதேவேளை, இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தாவுக்கும், ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசனுக்குமிடையில் முக்கிய சந்திப்பொன்று இந்த வாரமளவில் இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது மலையக மக்களின் பிரச்சினை, இனப்பிரச்சினை தீர்வு விவகாரம் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகவும், இந்திய எதிர்க்கட்சித் தலைவியிடம் சமர்ப்பிக்கப்பட்ட மகஜர் தொடர்பிலும் விசேட அவதானம் செலுத்தப்பட்டு கலந்துரையாடப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மகஸின் கைதிகள் இன்று முதல் உண்ணாவிரதம்

01 கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் பூஸா தடுப்பு முகாமிற்கு மாற்றப்படுவது நிறுத்தப்படவேண்டும். அத்துடன், சிறைகளில் வலுத்துவரும் தமிழ் அரசியல் கைதிகள் மீதான கெடுபிடிகளை நீக்க வேண்டும் என்ற இரண்டு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தே மகஸின் சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் இன்றுமுதல் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர் என அறியமுடிகின்றது.

பல வருட காலமாக சிறைப்பிடிக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை பூஸா தடுப்பு முகாமிற்கு மாற்றும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன எனத் தகவல்கள் வெளியானதையடுத்து சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

பொய்யான வழக்குகளை தமிழ் அரசியல் கைதிகள் மீது தாக்கல்செய்து அவர்களைப் பூஸா தடுப்பு முகாமிற்கு இடம் மாற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ் அரசியல் கைதிகள் பூஸா தடுப்பு முகாமிற்கு மாற்றப்பட்டால், அவர்கள் தங்களது உறவினர்களைப் பார்க்க முடியாத நிலை ஏற்படும். அதுமட்டுமல்ல, அவர்கள் மீதான கெடுபிடிகளும் அதிகரிக்கும்.

மகஸின் சிறையிலுள்ள ஜெயபால கிருஷ்ணன் என்ற தமிழ் அரசியல் கைதி பூஸா தடுப்பு முகாமிற்கு இடமாற்றப்பட்டுள்ளார். இவரை மகஸின் சிறைக்கு மறுபடியும் திருப்பி அனுப்ப வேண்டும் எனவும், தமிழ் அரசியல் கைதிகள் எவரையும் பூஸா தடுப்பு முகாமிற்கு இடமாற்றம் செய்யக்கூடாதெனவும் அவர்கள் அரசிடம் கோரிக்கை விடுப்பதாகத் தெரியவருகின்றது.

அத்துடன், மகஸின் சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளுடன் சிறைச்சாலை அதிகாரி ஒருவரான என். நிரஞ்சன் இறுக்கமான போக்கைக் கையாள்வதாகவும் தெரியவருகின்றது. இவர் மகஸின் சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளிடம் தளர்வுப் போக்கைக் கையாள வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுப்பதாகவும் தெரியவருகின்றது.

## லண்டனில் உயர்மட்டச் சந்திப்புக்கள் ஜனாதிபதி மஹிந்தவுடன் இல்லை

01 எதுவும் கிடைக்கவில்லை எனத் தெரிய வருகிறது. இதனால் அங்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பிரிட்டன் உயர்மட்டச் சந்திப்பு எதனையும் மேற்கொள்ளாது என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த உயர்மட்டச் சந்திப்புகளுக்கான ஏற்பாடுகள் எதுவுமே அங்கு மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரியவந்தது.

பிரிட்டன்பிரதமரும்இலங்கை ஜனாதிபதியும் ஏனைய நாடுகளின் அரசுத் தலைவர்களோடு ஒரே அறையில் நடைபெறும் விழாவில் பங்கேற்பர். ஆயினும் தனிப்பட்ட சந்திப்புகள் எதுவும் அங்கு இடம்பெறா. எவ்வாறாயினும் அத்தகைய சந்திப்பு இடம்பெறும் சூழல் ஏற்பட்டாலும் கூட அது கடுமையான தொன்றாகவே இருக்கும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)

## நாடு கடத்தப்பட்டோர் கண்காணிக்கப்படுவர்

01 திருப்பியனுப்பப்பட்டனர்.

இந்தநிலையில் அவர்களின் பாதுகாப்புக் குறித்துப் பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் தமது கரிசனையை வெளிப்படுத்தி வருகின்றன.

இதனையடுத்தே இலங்கையில் உள்ள பிரிட்டன் தூதரகம் குறித்த 36 பேர் தொடர்பிலும் கண்காணிப்பைச் செலுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள பிரிட்டன் தூதரக அதிகாரி ஒருவர்,இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்ட 36 பேரில் 35 பேர் நாட்டுக்குள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனினும் ஒருவர் இலங்கைப் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகிறார். எனவே இந்த விடயங்களை உன்னிப்பாக அவதானித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் கைது செய்யப்பட்டவர் போலியான கடவுச்சீட்டின் மூலம் பிரிட்டனுக்குச் சென்றமை தொடர்பிலேயே கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது. (த)

## போருக்குப் பின்னும் பாதுகாப்பை வலுப்படுத்தும் தேவை உண்டு

01 அரசு அமெரிக்காவிடமும், இந்தியாவிடமும் சுட்டிக்காட்டியிருக்கிறது.

சிங்கப்பூரில் நடைபெற்றுவரும் ஆசிய பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் அங்கு அமெரிக்கக் கூட்டுப்படைகளின் தளபதி ஜெனரல் மார்ட்டின் டெம்ப்ளி, இந்திய பாதுகாப்பமைச்சர் ஏ.கே. அந்தோனி ஆகியோரைத் தனித்தனியே சந்தித்துப் பேச்சு நடத்தினர். இதன்போதே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போருக்குப் பின்னரான இலங்கையின் நிலைமைகள் குறித்து இந்தச் சந்திப்புகளின்போது இலங்கைத் தரப்பினர் விரிவான விளக்கங்களை வழங்கியுள்ளனர்.

மூன்று தசாப்தகாலப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் அமெரிக்காவும் இந்தியாவும் ஆற்றிய பங்களிப்பு கள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் நன்றி தெரிவிக்கப்பட்டிருக்கும் அதேசமயம், அரசியல் தீர்வொன்றை வழங்குவதற்கு அரசு எடுத்துவரும் முயற்சிகள் பற்றியும் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

''இலங்கையின் பாதுகாப்பு மட்டுமல்ல, பிராந்தியத்தின் பாதுகாப்பிலும் நாம் கூடுதலாக அக்கறை செலுத்திவருகின்றோம். இதற்காக இந்தியாவுடனும் நாம் ஒத்துழைத்துச் செயற்படுகிறோம். பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில் நாம் இந்தியாவுடன் பரஸ்பர புரிந்துணர்வுடன் செயற்படுகிறோம். அமெரிக்காவும் இதனை நன்கு புரிந்துகொண்டுள்ளது. இலங்கையின் தற்போதைய நிலை அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது'' - என்று பெயர் குறிப்பிட விரும்பாத மூத்த இலங்கை இராஜதந்திரி ஒருவர் குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் லியொன் பனெட்டா மற்றும் இந்தோனேஷியா, ஆஸ்திரே லியா, கம்போடியா, ஜப்பான், மியான்மர், பிலிப்பைன்ஸ், தாய் லாந்து, திமோர், சீனா, மொங்கோலியா, கொரியா, ஜேர்மனி, பிரிட்டன், மலேசியா, கனடா, நியூஸிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

'தெற்காசியாவில் அதிகரிக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள்' என்ற தலைப்பில் இந்தக் கருத்தரங்கில் இலங்கை சார் பில் ஜி.எல்.பீரிஸ் உரை நிகழ்த்தினார். (த-சி)

## மர்மப் பொருள் வெடித்ததில் நயினாதீவில் மாணவன் சாவு

01 (வயது-15) என்ற மாணவரே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்தவர் ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது-

2009 ஆம் ஆண்டு வன்னியில் இருந்து வந்த இந்த மாணவரின் குடும்பம் நயினாதீவில் மீளக் குடியமர்ந்திருந்தது. நேற்றுக்காலை குறித்த மாணவன் எனைய இரண்டு சிறுவர்களுடன் கடற்கரைப் பக்கமாகச் சென்றுள்ளான். கடற்கரையில் இருந்து 5 மீற்றர் தூரத்தில் கிடந்த மர்மப் பொருளை எடுத்து அவன் அதனைக் குத்தியுள்ளான். அந்தச் சமயமே அது பெரும் சத்தத்துடன் வெடித்துச் சிதறியது.

இதனால் கை, நெஞ்சு, மார்புப் பகுதிகளில் காயமடைந்த நிலையில் நயினாதீவு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டான். நயினாதீவு வைத்தியசாலையில் எவரும் இல்லாததன் காரணமாக கடற்படையினரின் அதிவேகப் படகில் ஏற்றப்பட்டு குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு கொண்டு வரப்பட்டான். அதன் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரும் வழியில் மாணவன் உயிரிழந்ததாக உறவினர்கள் தெரிவித்தனர்.

கடலில் மிதந்து வந்து கரையில் ஒதுங்கிக் கிடந்த மர்மப் பொருளை சிறுவன் எடுத்து [illegible]யதாக தெரிவிக்கப்படுகின்றது. விடுதலைப் புலிகளால் [illegible] ரக வெடிபொருளே வெடித்ததாக இலங்கை இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

நயினாதீவுப் பகுதிகளில் மிதிவெடி மற்றும் கண்ணிவெடி ஆபத்துக்கள் இல்லை. எனவே அவை அந்தப் பகுதியில் இருப்பதற்கு சாத்தியம் இல்லை எனவும் எத்தகைய வெடிபொருள்கள் வெடித்தது என்பதை நேரடியாக இடத்தை ஆய்வு செய்ததன் பின்னரே குறிப்பிடமுடியும் என யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தினர் தெரிவித்தனர். (த-5-3-17-251)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற்றாப்பளையில் பக்திபூர்வ பொங்கல் 3 லட்சத்துக்கு மேல் பக்தர்கள் பங்கேற்பு

முல்லைத்தீவு, ஜூன் 5

வரலாற்று புகழ்மிக்க வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய பெரும் பொங்கல் விழா நேற்று 3 லட்சத்துக்கும் அதிகமான பக்தர்களின் அரோஹரா கோஷத்துடன் சிறப்புற நடைபெற்று முடிந்தது.

வெளிமாவட்டங்களில் இருந்தும் தென்பகுதியில் இருந்தும் 3 லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் நேற்றுக் காலையில் இருந்து ஆலயத்துக்கு வருகை தந்தனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா மாவட்டங்களில் இருந்தும் தென் பகுதியில் இருந்தும் அடியார்கள் கூடினர்.

பரந்தன் முல்லைத்தீவு வீதி, மாங்குளம் ஒட்டுசுட்டான் வீதி நேற்றுப் பகலில் இருந்து இரவு வரை வாகனங்கள் நகர முடியாத அளவுக்கு நிறைந்திருந்தது. வாகன நெரிசல் காரணமாக ஆலயத்தைச் சென்று சேருவதற்கு பலமணி நேரம் தேவைப்பட்டது.

தூர இடங்களில் இருந்து அம்பாளின் சந்நிதி நோக்கி நேர்த்திக் கடன்களை நிவர்த்தி செய்யும் வகையில் தூக்குக் காவடிகள், செடில் காவடிகளை எடுத்துச் சென்றனர்.



ஆலய வளாகத்தில் பக்தர்கள் பொங்கல் வழிபாடுகளிலும் ஈடுபட்டனர். கடும் வெயிலுக்கு மத்தியிலும் ஆலயச் சூழலில் பெருமளவிலான பக்தர்கள் கூடி வழிபாடாற்றுவதை காணமுடிந்தது. பறைமுழங்க ஆலய வளாகத்துக்குள்ளும் செடில் காவடிகள், பாற்காவடிகள், பாற்செம்பு எடுத்தல், கற்பூரச்சட்டி என பக்தர்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கு வசதியாக குடிதண்ணீர் வசதி மற்றும் சுகாதாரவசதிகள்உட்பட அனைத்து ஏற்பாடுகளும் ஆலய நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஆலயத்துக்கு செல்லும் பக்தர்களின் தாகத்தை தீர்க்க வீதியோரங்களில் தண்ணீர் பந்தல் அமைக்கப்பட்டு தாக சாந்திப் பணியிலும் அம்பாளின் பக்தர்கள் ஈடுபட்டிருந்தனர்.

பாதுகாப்புக்கு பொலிஸார் ஆலய வளாகத்துக்குள் நிறுத்தி வைக்கப்பட்டதோடு வளாகத்துக்கு வெளியில் இராணுவத்தினரும் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை நேற்று மாலை 5 மணியிலிருந்து 10 நிமிட இடைவெளிகளில் 3 தடவைகள் ஹெலிகொப்டர் மூலம் கண்ணகை அம்மனுக்கு மலர் தூவி அஞ்சலிக்கப்பட்டதை பெருந்திரளமான பக்தர்கள் பார்த்து மகிழ்ந்தனர்.

நள்ளிரவு அம்பாளுக்கு வழுந்து வைத்து பொங்கல் சிறப்பாக நடைபெற்றதோடு தீ மிதிப்பும் இடம்பெற்றது.

நேற்று நள்ளிரவு வரை ஆலயத்துக்கு எவ்வகையான அசம்பாவிதங்களோ திருட்டுச் சம்பவங்களோ இடம் பெற்றதாக அறிவிக்கப்படவில்லை எனவும், ஆலயத்துக்குள் தவறவிடப்பட்ட பொருள்கள் நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது எனவும் அங்கிருந்து எமது செய்தியாளர் தெரிவித்தார். [10 – 4]

## தமிழகக் கடற்பகுதியில் சிக்கிய இலங்கை மீனவர் படகு விடுவிப்பு

தமிழகக் கடற் பகுதியில் சிக்கிய இலங்கை மீனவர்கள் படகு நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டது.

இலங்கையைச் சேர்ந்த மீனவர்கள் 5 பேர் நாகப்பட்டினம் கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது கடந்த டிசம்பர் மாதம் கடலோரக் காவல் படையால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் புதுச்சேரிக்குக் கொண்டுவரப்பட்டு புதுச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதுகுறித்து முதலியார் பேட்டை பொலிஸ் இன்ஸ்பெக்டர் மாறன் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினார்.

கைதான மீனவர்கள் புதுவை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு காலாப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். மீனவர்கள் தங்களை விடுவிக்கக்கோரி மத்திய உள்துறை அமைச்சகம், வெளியுறவுத்துறை அமைச்சகத்துக்கு மனு கொடுத்தனர். இதைத்தொடர்ந்து அவர்களிடம் விசாரணை நடத்திய உள்துறை அதிகாரிகள் அவர்களை விடுவிக்க உத்தரவிட்டனர். இருந்த போதிலும் அவர்கள் வந்த படகு விடுவிக்கப்படாமல் புதுச்சேரியிலேயே நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

**கைதான மீனவர்கள் புதுவை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு காலாப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். மீனவர்கள் தங்களை விடுவிக்கக்கோரி மத்திய உள்துறை அமைச்சகம், வெளியுறவுத் துறை அமைச்சகத்துக்கு மனு கொடுத்தனர்**

இதற்கிடையே மீனவர்கள் வந்த படகையும் தரும்படி இலங்கை அரசு உள்துறைக்கு கடிதம் அனுப்பியது.

இதற்கும் மத்திய உள்துறை அமைச்சகம் அனுமதி வழங்கியது. அதையடுத்து இலங்கை உள்துறை அதிகாரிகள் நேற்று புதுச்சேரி வந்தனர். அவர்களிடம் இலங்கை மீனவர்களின் படகை தாசில்தார் ரமேஷ், பொலிஸ் அதிகாரி மாறன் ஆகியோர் வழங்கினார்கள். (வ)

## சவூதி சிறையில் சிரமங்களுக்கு மத்தியில் இலங்கைப் பணியாளர்கள்

சவூதி அரேபியாவில் மலாஸ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைப் பணியாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

சிறு குற்றங்களுக்காகப் பெருமளவிலான இலங்கையர்கள் அந்த நாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தாம் எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து இலங்கைத் தூதரகத்துக்கு அறிவித்துள்ள போதிலும் இதுவரை கவனம் செலுத் தப்படவில்லை என்று இலங்கைப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணி யகத்தின் தலைவர் அமல் சேனாதிலங்காரவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது;

இந்தப் பணியாளர்களின் பிரச்சினைகள் குறித்து உடனடி கவனம் செலுத்தப்படும். இதற்காக சவூதியிலுள்ள இலங்கைத் தூதரகம் ஊடாக அதிபர்கள்தொடர்பில் அறிக்கை ஒன் றைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது- என்றார். (ந)

### கைதிகள் பூஸாவுக்கு கொண்டு செல்லப்படுவதைத் தடுக்க

## மனித உரிமை அமைப்புகளுக்கு கைதிகளின் பெற்றோர், உறவினர் அவசர வேண்டுகோள்

சிறைச்சாலைகளில் விளக்கமறியல் கைதிகளாக இருக்கும் எமது பிள்ளைகளை காலி பூஸா தடுப்பு முகாம்களுக்கு கொண்டு செல்வதைத் தடுத்து நிறுத்த அனைத்து மனித உரிமைகள் அமைப்புக்களும் முன்வர வேண்டும்.

இவ்வாறு சிறையில் இருக்கும் அரசியல் கைதிகளின் பெற்றோர்கள் உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.இது தொடர்பாக அவர்கள் விடுத்த வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நீண்ட காலமாக எவ்வித முடிவும் இல்லாமல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எமது உறவுகளை மீண்டும் பூஸா தடுப்பு முகாமுக்குக் கொண்டு செல்கின்றார்கள் என்று செய்தி வெளியாகியுள்ளது. உயர் புலிகளின் அமைப்பில் மிகமுக்கிய பங்கு வகித்த பலருக்கு புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்யும் இந்தச் சூழ்நிலையில் வெறும் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு உயர்நீதிமன்ற வழக்குகளுக்கு முகம் கொடுத்து கொண்டிருக்கும் எங்கள் உறவுகளை ஏன் மீண்டும் பூஸா தடுப்புக்குக் கொண்டு செல்கின்றனர்?

அவசரகால தடைச் சட்டம் நீக்கப்பட்டதும் அதன் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள எங்கள் பிள்ளைகளை விடுவிப்பார்கள் என்று எதிர் பார்த்திருந்தோம். ஆனால் ஒருசில மாதத்தில் அந்தச் சட்டத்தின் கீழ் இருந்த வர்களை அதே சட்டத்தில் சில திருத்தங்களைக் கொண்டு வந்து தொடர்ந்தும் தடுத்து வைப்பதற்காகப் புதிய விதிமுறைகள் உருவாக்கப்பட்டன. இப்படியான செயற்பாடுகளை நீதித்துறை, சட்டத்துறை அதிகாரிகள் செய்ததனால் எமக்கு அரசின் மீது எவ்வித நம்பிக்கையும் வைக்க முடியாமல் இருக்கின்றது.

எமது பிள்ளைகள், உறவுகள் பழி வாங்கப்படுவதும் தண்டிக்கப்படுவதும் நிறுத்தப்படவேண்டும். பூஸா தடுப்பு முகாமுக்கு கொண்டு செல்வதைத் தடுத்து நிறுத்துவதற்கு மனித உரிமை அமைப்புக்கள் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குகளை தாக்கல் செய்ய முன்வர வேண்டும். இவ்வாறு பெற்றோர், உறவினர்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது 17 பேர் வரை பூஸா முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கின்றார்கள். அவர்களின் பெயர், விவரங்கள் வருமாறு:-

அருணாச்சலம் இலங்கேஸ்வரன் (வயது-41)மட்டக்களப்பு வாழைச்சேனை, அசோகராசா நிக்சன் குமார் (வயது -37) யாழ்.பருத்தித்துறை, அருந்தவராசா மயூரன் (வயது-25) திருகோணமலை, விவேகானந்தன் விஜயகாந் (வயது-28) ஈச்சங்குளம், வவுனியா, அன்ரன் டக்ளஸ் ஜோயல் (வயது -23) பேசாலை மன்னார். ஜெகநாதன் வாசுதேவன் (வயது-37) தொண்டமானாறு யாழ்ப் பாணம், இராமர் செல்வரத்தினம் (வயது-33) உடப்பு சலாவை பதுளை, அழகு சிவகுமார் (வயது-27) பூந்தோட்டம் வவுனியா, செல்லையா கிருபாகரன் யாழ்ப்பாணம், கனகரத்தினம் ஆதித்தன்(வயது-35) முள்ளியவளை முல்லைத்தீவு தங்கவேலு நிமலன் (வயது-35) கொழும்பு, இவருடைய மனைவியும் வெலிக்கடை பெண்கள் பிரிவு சிறையில் இருக்கின்றார். முகமட் அலி அன்ஷார் (வயது-32) கொழும்பு, லக்ஷ்மண் குரே (வயது -52) இராஜேந்திரன் கருணாகரன் (வயது-35) யாழ்ப்பாணம், சுப்ரமணியம் சிவகுமார் (வயது-30) கிளிநொச்சி, தனபாலசிங்கம் லிங்கதாஸ் (வயது-30) வவுனியா, கனகரத்தினம் கலீவன் (வயது -35) லண்டன் பிரஜை.

மேற்குறிப்பிடப்பட்ட அனைவரும் ஏற்கனவே உயர்நீதிமன்ற வழக்கில் இருந்தவர்கள். இருந்தும் தற்போது பூஸாவுக்கு இவர்கள் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றார்கள். இன்னும் பலரை சிறையிலிருந்து குறிப்பிடப்பட்ட முகாமுக்குக் கொண்டு செல்ல இருக்கின்றார்கள், இப்படியான அநீதிகளைத் தடுக்க மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், அரசியல் தலைவர்கள் அனைவரும் முன்வர வேண்டும் என அரசியல் கைதிகளுடைய பெற்றோர் மற்றும் உறவினர்கள் கேட்டுள்ளனர்.

## 150 ஈழத்தமிழ் அகதிகள் கேரளாவில் தடுத்து வைப்பு

கேரள மாநிலம், கொல்லம் கடற்பரப்பில் 150 இலங்கைத் தமிழ் அகதிகளை ஏற்றி வந்த படகு தடுத்து வைக்கப்பட் டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆஸ்திரேலியாவுக்கு அழைத்துச்செல்வதாக ஈழத் தமிழர்களை படகில் ஏற்றிச் சென்ற நிலையில் இந்திய கடற் பரப்பில் இறக்கிவிட்டதாகக் கூறப்படு கிறது.

ஒவ்வொருவரிடமும் ஒரு லட்சம் முதல் ரூ5 லட்சம் வரை பணமும் பெறப்பட்டுள்ளது. இவர்களில் பலர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அனைவரும் தமிழகத்தில் உள்ள அகதி முகாம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 19 பெண்கள் மற்றும் 22 குழந்தைகளும் அடங்குவர்.

இலங்கையில் இருந்து ஆஸ்திரேலியாவின் கிறிஸ்துமஸ் மற்றும் கோக்கோஸ் தீவுகளுக்கு ஈழத் தமிழர்களை அகதி.0களாக இறக்கிவிடுவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சில தினங்களுக்கு முன்பும் கூட ஈழத் தமிழர்களை ஏற்றிச் சென்ற படகு ஒன்று ஆஸ்திரேலிய கடற்பரப்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (வ)

## மஹிந்தவின் சுதந்திர நடமாட்டத்தை தடுத்து நிறுத்துவோம் வாருங்கள்

### ஜேர்மன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு அறிக்கை

தமிழினப் படுகொலை புரிந்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுதந்திரமாக நடமாடுவதைத் தடுப்போம் வாருங்கள் என்று ஜேர்மன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு அறிக்கை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது சுதந்திர விடுதலைக்காக ஐ.நாவின் தீர்மானங்களுக்கமைய சுயமாக போராடிய ஓர் இனம் நாம். உலக மனிதாபிமான விழுமியங்களுக்கு மதிப்பளித்து சமாதான வழிமுறையில் எமக்கான தீர்வைக் கண்டு விடலாம் என்று திடமாக நம்பி சர்வதேசங்களுடன் கைகோர்த்து நடந்தவர்கள் நாம்.

எமது தேசியத் தலைவரது தீர்க்கதரிசனமான செயற்பாடுகளோடு இதுவரை கால [illegible] இருந்தவர்கள் நாம்.

இந்தநிலையில் சர்வதேச அரங்கில் சிங்கள அரசின் இனப்படுகொலையை அம்பலப்படுத்தி ராஜபக்ஷ சகோதரர்களின் போர்க் குற்றத்தை வெளிக் கொண்டு வந்து சர்வதேச நீதிமன்றத்தில் தண்[illegible]குவது எமது கடமையல்லவா? பிரிட்டன் மகாராணியின் வைர விழாவுக்கு வருகைதரும்படி ராஜபக்ஷவை அழைத்ததன் மூலம் எமது இனம் அவமானப்படுத்தப்படலாமா? அதற்கு நாம் அனுமதிக்கலாமா? பொதுநலவாய பொருளாதாரப் பேரவையில் உரையாற்றும் தகைமை ராஜபக்ஷவுக்கு உள்ளதா? இங்கு உரையாற்ற அனுமதிக்கலாமா?

காலத்தின் தேவையை உணர்ந்து ஒன்று கூடுங்கள். அனைத்து நாடுகளிலிருந்தும் திரண்டெழுந்து லண்டன் மாநகர் நோக்கி விரையுங்கள் - என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீணைகள் விற்பனைக்கு உண்டு

**நல்ல நிலையில் உள்ள வீணைகள் விற்பனைக்குண்டு.**

தொடர்பு:- K.P.பாலகிருஷ்னன்
இல:1058, K.K.S. வீதி,
பூநாறி மடத்தடி, கோக்குவில் (18978) T.P: 021 222 2940.


# மரண அறிவித்தல்கள்

## பஞ்சரெத்தினகோபால் தீனபந்

(அம்பிஹா ஜூவெலர்ஸ், கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம், கன்னாதிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சரெத்தினகோபால் தீனபந் நேற்று (04.06.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பஞ்சரெத்தின கோபால் மற்றும் ராஜம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஜெகநாதன் - சுப்புலெட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் சாந்தினியின் கணவரும் சுகன்யா, ரிஷியந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான சாந்தாராமன், சம்பத்முராரி, லெட்சுமணப்பிரசாத் (இந்தியா), கஸ்தூரி, கௌரி, ஜானகிராமன், மோகாம்புஜம்(மோகனா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மாணிக்கவாசகம் மற்றும் நாகேஸ்வரி, மோகன் (ஆசிரியர் - யாழ். மத்திய கல்லூரி), மனோகர், மகேஸ்வரன் (பாபு - பிரான்ஸ்), பாஸ்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2012) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணியளவில் நல்லடக்கத்துக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.209/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி சரஸ்வதி மார்க்கண்டு



யார்க்கரு, கரவெட்டி கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி மார்க்கண்டு நேற்று (04.06.2012) திங்கட்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லன் - பார்வதியின் புத்திரியும், மார்க்கண்டுவின் அன்பு மனைவியும்,நல்லையா, காலஞ்சென்றவர்களான செல்வராணி, செல்வராஜா மற்றும் செ.தங்கராசா, காலஞ்சென்ற சிவராசா மற்றும் செ.சிவமலர் ஆகியோரின் சகோதரியும், ஸ்ரீகந்தராசா, ஸ்ரீபத்மநாயகி (ஜேர்மனி), வசந்தநாயகி, சரோசாதேவி, பத்மநாதன், ஸ்ரீரஞ்சனி, ஸ்ரீகணேஷ், ஸ்ரீதரன் (ஆசிரியர், யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தாயும் அனுராதா (பற்சிகிச்சையாளர், வவுனியா), பஞ்சாட்சரம் (ஜேர்மனி), சிவராசசிங்கம், கணேஷ் (சவுதி), சிவாஜினி, சத்தியமூர்த்தி, அம்பிகாவதி ஆகியோரின் அன்புமாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வீரன்களி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யார்க்கரு
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர் (18974)(6-7-8)

## திருமதி பாக்கியரெத்தினம் நல்லையா



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், 59, பொற்பதி வீதி, கொக்குவிலை வாழ்விடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான திருமதி பாக்கியரெத்தினம் நல்லையா அவர்கள் (2012.06.03) ஆம் திகதி கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - நாகம்மா தம்பதியரின் மூத்தமகளும் காலஞ்சென்ற நன்னித்தம்பி நல்லையாவின் அருமை மனைவியும், காலஞ்சென்ற நன்னித்தம்பி - இராசம்மாவின் அன்புமருமகளும், காலஞ்சென்ற கனகரெத்தினம், குணரெத்தினம், பேரம்பலம் மற்றும் வேதநாயகி சண்முகராஜா, செல்வலக்சுமி, கமலாதேவி, இராஜலிங்கம், பஞ்சலிங்கம் ஆகியோரின் அருமைச்சகோதரியும் வரதலக்சுமி, சாந்தினி, ராஜினி, நிரஞ்சினி, நந்தகுமார், பாலகுமார், சிவகுமார், சிவாஜினி ஆகியோரின் அருமைத்தாயும், சண்முகநாதன் , குணசிங்கம், ஜெயரெத்தினம், ஜெகநாதன், சோமமாலினி, தர்சினி, றோகினி, மகிந்தா ஆகியோரின் அன்புமாமியும், இந்துஜா, சர்மிஜா, குருஷாந்தன், பிரசாந்தன், நிரோசன், ஆருஷா, றவித்தா, அஜித்தா, பிரி[illegible], லதுஸன், ஜனனி, சஞ்சீவன்,வைஸ்ணவி,பிரணவன், சகானா ஆகியோரின் அருமைப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடா ரொறன்ரோவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

59, பொற்பதி வீதி,
கொக்குவில்

(18973)(6-7-8)

தகவல்:
நல்லையா குடும்பத்தினர்
(கனடா)

## மண்டபத்தில் விபத்து: இலங்கை அகதி சாவு

தமிழ்நாடு மண்டபம் அருகே நேற்று முன்தினம் நள்ளிரவில் மோட்டார் சைக்கிள் மீது கார் மோதி விபத்து ஏற்பட்டதில் இலங்கை அகதி ஒருவர் உயிரி ழந்துள்ளார்.

இந்த விபத்தில் மேலும் 3 பேர் காயமடைந்துள்ளனர் தாக மண்டபம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மண்டபம் அருகே நள்ளிரவில் 3 இலங்கை அகதிகள் மோட்டார் சைக்கிளில் வீதியைக் கடந்து அகதிகள் முகாமிற்கு செல்ல முயன்றபோது கப்பல் அதிகாரியின் கார் மோதியதில் மூவரில் ஒருவர் உயிரிழந்தார்.

ஏனைய இருவர் மற்றும் கார் சாரதி என மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (வ)

## நீர் நிலைகளில் அவதானமாக இருக்கவும்

நுவரெலியா மாவட்டத்தில் நீர் நிலைகளில் குளிக்கச் செல்கின்றவர்கள் அவதானமாக இருக்குமாறு அந்த மாவட்டச் செயலாளர் டீ.பீ.ஜீ.குமாரசிறி சுற்றுலாப் பயணிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். நீண்ட வார இறுதி விடுமுறையை அடுத்து பெரும் எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் நுவரெலியா மாவட்டத்துக்கு சமூகமளித்துள்ளனர் என்று மாவட்டச் செயலாளர் கூறியுள்ளார். நீர் நிலைகளின் தன் மையை அறிந்து கொள்ளாமல் அவற்றில் இறங்குவதால் உயிராபத்துகளை எதிர்நோக்க நேரிடுகின்றது. இந்த விடயத்தில் இளைஞர்களே கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சிறுவர் பாதுகாப்பு செய்தி மடல்

திருகோணமலை,ஜூன்5

கனேடிய செஞ்சிலுவைச் சங்கம் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான செய்தி மடல் ஒன்றை வெளியிட்டுள்ளது. கல்வி அமைச்சின் அனுசரணையுடன் சிறுவர் பாதுகாப்பு திட்டத்தின் முக்கிய நிகழ்வாக இந்த மடல் வெளியிடப்பட் டுள்ளது. நாட்டில் வன்முறைக்கும், துஷ்பிரயோகங்களுக்கும் உட்படும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்த நிலையில் உள்ளது.

இந்த நிலைமையைக் கருத்தில்கொண்டு சிறுவர் பாதுகாப்பு அதிகார, சர்வோதய இயக்கம் மற்றும் பாடசாலை ஆசிரியர்களின் உதவியுடன் செஞ்சிலுவைச் சங்கத்தினால் சிறுவர் விழிப்புணர்வு செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

## கைத்தொழில் சம்மேளனம்

ஆசிய மன்றத்தின் நிதி அனுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைதொழில் விவசாய சம்மேளனம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக சம்மேளனம் என்பன இணைந்து மேற்கொள்ளவுள்ள உள்ளூர் பொருளாதார ஆளுகைத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு மட்டக்களப்பு பாடுமீன் விடுதியில் நடைபெற்றது.

சிறுகைத்தொழில் முயற் சியாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அவர்களுக்குக் கடனுதவிகளை இலகு வட்டியில் வழங்கி ஊக்கப் படுத்தும் இந்தத் திட்டத்துக்காக ஆசிய மன்றம் மேற்படி இரண்டு அமைப்புகளுக்கும் பத்து இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

இந்த நிகழ்வில் தேசிய கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி, ஆசிய மன்றத்தின் குழுத் தலைவர் திருமதிதினேஸ் ஆர்.டி சில்வா, மட்டக் களப்பு மாவட்டவர்த்தகைத் தொழில் விவசாயசம்மேளனத்தின் தலைவர் வி.ரஞ்சிதமூர்த்தி, மட்டக் களப்பு வர்த்தக சம்மேளனத் தின் தலைவர் எஸ். செல்வ[illegible] உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர். (ச-31)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பையா குணரத்தினம்

(ஓய்வுபெற்ற நூலக ஊழியர், யாழ். பல்கலைக்கழகம்)



சுவாமியார் வீதி, கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், புதுவீதி, கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா குணரத்தினம் நேற்று (04.06.2012) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா-பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற சோமசேகரம் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், தவமலரின் பாசமிகு கணவரும், பிரதீபா, சுதாகர், துஷ்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் மகேந்திரன் (ஆஸ்திரேலியா), பாலச்சந்திரன் (ஓய்வுபெற்ற மிருக வைத்திய ஊழியர்- கொழும்பு) ஆகியோரின் சகோதரனும், அற்புதமலர், கலாமலர், கமலேஸ்வரன் (லண்டன்), விக்னேஸ்வரன் (பிரான்ஸ்), சண்முகேஸ்வரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கந்தசாமி (மிருகவைத்திய ஊழியர்) மற்றும் திருமதி மகேந்திரம், இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், தட்சணேஸ்வரன், கணேசலிங்கம் ஆகியோரின் சகலனும், நிர்மலா, மஞ்சுளா, ரவி, பவா, கௌசலா, மேகலா ஆகியோரின் மாமனும், யோகி, தர்ஷன், தர்ஷினி, ஜனகன், ஜனனி, லக்சினி, நிதர்சினி ஆகியோரின் சிறிய தந்தையும், சபிதாவின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2012) செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

39/2. புதுவீதி,
கொய்யாத்தோட்டம், சுண்டுக்குழி.

தகவல்:
சு.சுதாகர்(மகன்).

## கந்தையா செல்லத்துரை [ஆசாரியார்]



உடுவிலைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்லத்துரை நேற்று (04.06.2012 ) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-இராசமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பேரம்பலம்-பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் கனகமணியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், நடராசா, முத்தையா திருநாவுக்கரசு ஆகியோரின் சகோதரரும் கமலாதேவி, லீலாதேவி பரமேஸ்வரன்(இந்தியா), விக்கினேஸ்வரன்(ஜேர்மனி), கோடீஸ்வரன்(பிரான்ஸ்), ஜெகதீஸ்வரன், சீதாதேவி(ஜேர்மனி), கெங்காதேவி(இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலகிருஷ்ணன், நவரத்தினம், புஷ்பா, சுசீலா, அருந்தவராணி ராதா(கிளி/முருகானந்தா கல்லூரி), மனோகரவாசா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2012) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 3.00 மணியளவில் கட்டைஆலடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாற்பண்ணை வீதி
திருநெல்வேலி

தகவல்
குடும்பத்தினர்.


## மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள்

யாழ் கலாலயா
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்
Yazh **Kalalaya** Academy
Jaffna

கடந்த எமது 26 வருடகால சேவையில் எம்மிடம் பயிற்சிபெற்ற ஆயிரக்கணக்கானோர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இத்துறையில் முன்னணியில் திகழ்கின்றனர். நீங்களும் அவ்வாறே ஆகவேண்டுமா?

**இதோ**

- *கேக் ஐசிங், உணவு தயாரித்தல்* – *முடி சிராக்குதலும் கூந்தல் வடிவமைப்புகளும்* (Hair Dressing & Styling)
- Facials, மணப்பெண் அலங்காரம், Pedicure, Manicure பயிற்சிகள். ஏழு வகையான சாறி உடுத்தும் முறைகள்.

**மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- தையல் தெரிந்தவர்களுக்கான சான்றிதழ் அற்ற சாறி பிளவுஸ், சுரிதார், சட்டை, தைக்கும் பயிற்சிகள்

**ஆரம்பம்: 06.06.2012 புதன்கிழமை காலை 9.30 மணி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஜனாதிபதியின் பொசன் செய்தி: நல்ல எதிர்காலத்தின் அறிகுறி

புத்தபெருமானின் வழிகாட்டலை அரசுகளின் தலைவர்கள் பின்பற்றுவார்களானால் நிகழ்காலத்தில் உலக மக்கள் எதிர்நோக்கியுள்ள உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டத்திலான மோதல்களுக்கு தீர்வுகாண முடியும் என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தாய்லாந்தில் பாங்கொக் நகரில் நடைபெற்ற புத்த ஜயந்தி நிகழ்வொன்றில் எடுத்துக் கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பௌத்த மதத்தை முதன்மைப்படுத்தி நிற்கும் அரசியல் சாசனத்தைக் கொண்ட ஒரு ஜனநாயக நாட்டின் தலைவர் மட்டுமல்ல பௌத்த மதத்தை முழுமையாகப் பின்பற்றுகின்ற ஒருவரும் கூட. அந்த வகையில் தாய்லாந்தில் அவர் தெரிவித்துள்ள கருத்தின் பிரகாரம் தானா நடந்து முடிந்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரையும் அவர் நடத்தி முடித்தார் என்று அங்கு யாரும் கேள்வி எழுப்பினார்களா என்பது தெரியவில்லை. அவ்வாறு கேள்வி எழுப்பியிருந்தாலும் அந்தப் போரில் தங்கள் படையினர் ஒரு கையில் துப்பாக்கியும் மறு கையில் மனித நேயத்தையும் ஏந்தியபடி போர் புரிந்தார்கள் என்றவாறு தமது பழைய பல்லவியை அவர் அங்கும் எடுத்து விளம்பியிருக்க மாட்டார். ஏனென்றால் பான் கீ மூனின் நிபுணர் குழு அறிக்கையும் சனல்- 4 தொலைக்காட்சிப் படங்களும் உலகம் முழுவதும் பரவி போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றதான கொடூரங்கள் - அவலங்களைத் துலாம்பரமாக அம்பலப்படுத்தியுள்ளனவே.

இவைகளை என்னதான் அரசு தரப்பில் மறுத்து அறிக்கைகளை வெளியிட்டாலும் நம்பகமான முறையில் விசாரணைகள் நடத்தியாகவேண்டும் என்பது இப்போது சர்வதேச மட்டத்தில் உறுதியான கோரிக்கையாக வலியுறுத்தப்பட்டு வருகிறது.

அரச சுகபோகங்களைத் தூக்கி எறிந்துவிட்டு மனைவி, குழந்தையைக் கைவிட்டு அரச பரம்பரைக்கே உரிய ஆடம்பர ஆடை அணிகலங்களைக் களைந்து இளம் வயதிலேயே மொட்டையடித்துக் கொண்டு காவியுடை தரித்து துறவியானவர் சித்தார்த்தகுமாரன்.

போதிமரத்தின் நிழலில் தவமிருந்து ஞானம் பெற்று புத்த பெருமானாக உலகுக்கோர் அருஞ்சோதியாக வெளிப்பட்ட அவர் - இனம், மொழி, நாடு என்ற பேதமின்றி உலகம் உய்வதற்காகவே உபதேசங்களை வழங்கியும் நெறிதவறாது வாழ்ந்தும் பரிநிர்வாணம் அடைந்தார். உலகில் பல பகுதிகளிலும் அவர் சிந்தனை பரவியது. பல தேசங்கள் அவர் போதனையை ஏற்றுக் கொண்டு அதன்படி நடக்கத் தலைப்பட்டன. அவைகளில் ஒன்றுதான் இலங்கை. ஆட்சி, அதிகாரம் வேண்டாம் என்று வெறுத்து காவியுடை தரித்துக் கொண்ட அவரைப் பின்பற்றுவதாகக் கூறிக் கொண்டு காவி உடை தரித்துக் கொண்டவர்கள் பலர் இந்த நாட்டில் பெரும் அரசியல்வாதிகளாகக் காணப்படுகிறார்கள். அரசியல் குரோதங்களை, இனக்குரோதங்களைச் சமயக் குரோதங்களை வளர்க்கிறார்கள்.

அரச போகத்தைத் துறந்து புத்தர் வெளியில் வந்தார். இவர்கள் காவி உடை தரித்துக் கொண்டு அரச போகத்துக்குள் நுழைகிறார்கள்.

பள்ளிவாசல்கள் மீது கல் வீசித் தாக்குபவர்களுக்குத் தலைமை வகிப்பவர்கள், தமிழர்கள் தம் இனத்தவர்களின் கீழ்தான் வாழவேண்டும் என்று வற்புறுத்துபவர்கள், அதிகாரப் பகிர்வுக்கு இணங்கினால் ஆட்சி பறக்கும் என்று எச்சரிப்பவர்கள், தமிழர் வாழும் இடமெல்லாம் சிங்களவருக்கு உரித்தானவை என்று அறிவிப்பவர்கள், தமிழ்க் கோயில்களில் புத்தர் சிலைகளை நிறுவுகின்றவர்கள் எல்லாம் இந்த காவியுடை தரித்தவர்களாகவே பெரும்பாலும் காணப்படுகிறார்கள்.

இவ்வாறான சங்கைக்குதவாத கைங்கரியங்களில் ஈடுபடுபவர்கள் நாட்டுக்கும் நாட்டின் நல்லாட்சிக்கும் அபகீர்த்தி ஏற்படுத்துபவர்களே. என்றாலும் நாட்டின் இனங்களுக்கிடையில் நல்லுணர்வை ஏற்படுத்துவதில் அக்கறை கொண்டுள்ள ஜனாதிபதி இவர்களைக் கட்டுப்படுத்துவதில் அக்கறை காட்டாமல் இருப்பதுதான் கவலையளிப்பதாகவுள்ளது. இரண்டு கோடிக்கும் சற்று அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட இந்த நாட்டிலுள்ள அனைத்துக் காவியுடைதாரிகளையும் நாம் இங்கு குறைத்து எடைபோடுவதாக அர்த்தமாகாது. புத்த தர்மத்தை அச்சொட்டாகப் பின்பற்றிப் பிறருக்கும் பிற மதத்தவர்களுக்கும்கூட முன்மாதிரியாக, ஒழுக்கசீலர்களாக, வழிகாட்டிகளாக வாழும் அனேக பௌத்த பெருந்தகைகள் இருக்கிறார்கள். அவர்கள் எமது வணக்கத்துக்குரியவர்கள். சில்லரண்டித்தனமாக அரசியலில் புகுந்து தமக்கும் தம் உடைக்கும் சமயத்துக்கும் நாட்டுக்கும் அவப்பெயரைக் கொண்டு வருபவர்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது கருத்து.

நாட்டிலுள்ள அனைவரும் திருப்தியோடு ஒன்றுபட்டும் அமைதியாக வாழ்வதற்கான தார்மிக சமூகமொன்றைக் கட்டியெழுப்ப நாம் முன் முயற்சி எடுத்துப் பல விடயங்களை நிறைவேற்றியிருக்கிறோம். தார்மிகத்தால் வளப்படுத்தப்படும் ஒரு சமூகத்தால் ஒரு நாடு அல்லது தேசம் பலமடைவதுடன் பாதுகாக்கப்படவும் செய்யும் என்பது எனது பலமான நம்பிக்கை என்று ஜனாதிபதி விடுத்துள்ள பொசன்போயா தின செய்தியில் குறிப்பிட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது. நேர்மையான பௌத்த பெருமகன் என்ற முறையில் இந்த நாட்டை இங்குள்ள சகல இன மக்களும்- சிங்களவர்- தமிழர்- முஸ்லிம்- பறங்கியர் மற்றும் அனைவரும் தம் தம் சமயங்களை, மொழிகளை, கலாசாரங்களை, உரிமைகளைப் பேணிக்கொண்டு அமைதியுடன் வாழ நல்லதொரு எதிர்காலத்தை உருவாக்குவார் என்பதை அவரது இந்த பொசன் செய்தி கோடிட்டுக் காட்டுவதாக எடுத்துக் கொள்வோம்.

# 13 ஆவது திருத்தம் தொடர்பில் ஹெல உறுமய மனமாற்றம்

கொழும்பு, ஜூன் 5

அரச அமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முன்னர் எதிர்த்து வந்த ஜாதிக ஹெல உறுமய இப்பொழுது 13 ஆவது திருத்தத்தின் மீது தேசியப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஆலோசனைகளை நடத்த முன்வந்திருக்கின்றது.

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. அச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

ஜாதிக ஹெல உறுமயவின் உப செயலாளரும் மேல் மாகாண சபை அமைச்சருமான உதயா கமான்பில தெரிவிக்கையில், ''நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆவணம் ஒன்றைத் தாக்கல் செய்ய வேண்டும். ஏனென்றால் தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிவர்த்திசெய்யப்படவில்லையென்று அந்தக் கட்சிதான் கூறி வருகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமிருந்து அவ்வாறு ஆவணமொன்று சமர்ப்பிக்கப்படாது போனால் 13 ஆவது திருத்தச் சட்டம்தான் விவாதத்துக்கான அடிப்படை என்ற நிலைப்பாட்டை எமது கட்சி எடுக்க நேரும்'' என்று கூறினார்.

மஹிந்த சிந்தனையின் 13 ஆவது திருத்தம் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதனை நடைமுறைப்படுத்தும் படியாக மக்கள் ஜனாதிபதிக்கு ஆணைவழங்கியிருக்கிறார்கள். எதுவானாலும் தெரிவுக்குழுவில் விவாதிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது ஆவணத்துடன் கலந்து கொள்வது அவசியம் என்றும் அவர் மேலும் கூறினார்.

மஹிந்த சிந்தனையில் 13 ஆவது திருத்தம் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள பகுதி வருமாறு :

இருபது வருட காலத்தில் மாகாண சபை அமைப்பு முறையில் நாம் அதிக அனுபவங்களைப் பெற்றுள்ளோம். இந்த அமைப்பு முறையின் பொருத்தம் மற்றும் பொருத்தமின்மை குறித்து பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டு வந்துள்ளன;

அவற்றை ஆதரிப்பவர்களும் இருக்கிறார்கள். எதிர்ப்பவர்களும் இருக்கிறார்கள். 13 ஆவது திருத்தத்தில் இது முக்கிய பகுதியாக இருப்பதுடன் அது செயல்படும் ஒரு முறையாகவும் இருக்கிறது. மாகாண சபை அமைப்பு முறை தொடர்பாக வெளிப்படையான ஒரு விவாதத்தை நான் ஆதரிக்கின்றேன். அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளுடன் விவாதிப்பதற்கு இது அடிப்படையாக இருக்கும் என்பதாகும். (ப)

## இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் பெருமஞ்சம்

இணுவில் கந்தசுவாமி ஆலய பெருமஞ்சத் திருவிழா நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை விசேட பூசையைத் தொடர்ந்து சங்காபிஷேகமும் நண்பகல் அன்னதானமும் இடம் பெறும்.

மாலை 6 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து 7 மணிக்கு மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட உலகப் பெருமஞ்சத்தில் ஆறுமுகப் பெருமான் வீதியுலா வருவார்.

இதன்போது விசேட மேளக் கச்சேரிகளும் இடம்பெறவுள்ளன.

இந்த ஆலயத் திருவிழா கடந்த மாதம் 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

அன்றையதினம் ஆலயத்துக்கு பெரும் எண்ணிக்கையில் பக்தர்கள் வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் வாகனத் தரிப்பிட வசதிகள், குடிதண்ணீர், சுகாதார வசதிகள், பொலிஸ் பாதுகாப்பு வசதி போன்றன மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்கள் தங்க நகைகள் அணிந்து வருவதை தவிர்த்துக்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## சுற்றுலாப் பயணிகளை கவரும் இடமாகிறது கரந்தாய் குளம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

பளை பிரதேச சபைக்கு உட்பட்ட ஏ-9 பிரதான வீதியில் அமைந்துள்ள கரந்தாய் குளப் பிரதேசம் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பிரதேசமாகவுள்ளது.

இந்தப் பிரதேசம் தென்பகுதியில் இருந்து வரும் மக்களுக்கும் உல்லாசப் பயணிகளுக்கும் இளைப்பாறுப் பிரதேசமாக உள்ளது.

இதனால் இளைப்பாற்று நிலையம் ஒன்றை அமைத்து வழங்குங்கள் என்று பளைப் பிரதேச சபை தலைவரால், செயலாளர்களிடமும் ஆளுநரிடமும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் குறித்தொதுக்கப்பட்ட மாகாண நிதியின் கீழ் சுற்றுலாப் பிரதேசங்கள் மீள புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாகப் பளைப் பிரதேச சபைக்குட்ப்பட்ட கரந்தாய் குளப் பிரதேசம் சுற்றுலாப் பயணிகள் இளைப்பாறுவதற்கு பொருத்தமான பிரதேசம்.

இந்தப் பிரதேசத்தை இனம் கண்டு அந்தப் பிரதேசத்தை நவீன சுற்றுலாப் பயண பிரதேசமாக மாற்றினால் பிரதேசம் அழகுறும் அதேநேரம்- பளை பிரதேச சபையும் பெரும் வருமானத்தை பெறமுடியும் என்றுஅதிகாரிகளும் சுற்றுலாப் பயணிகளும் சுட்டிக் காட்டுகின்றனர். (ம-50)

## குருநகர் ஆயுள்வேத ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்குச் செல்வோர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4

குருநகர் பிரதேசத்தில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட ஆயுள் வேத வைத்தியசாலையில் நாளாந்தம் நூற்றுக்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

குருநகர் பிரதேசத்தில் அதிக எண்ணிக்கையானோர் கடற்றொழிலை மேற்கொள்பவர்களாக உள்ள நிலையில் இந்தப் பிரதேசத்தில் ஆயுள்வேத வைத்தியசாலை அமைக்கப்பட்டுள்ளது எமக்கு பெரும் நன்மை பெற்றுத் தருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலையில் நாளாந்தம் சிகிச்சை பெறுபவர்களில் முறிவு, நெரிவு வைத்தியத்துக்காக அனுமதிக்கப்படுபவர்களே அதிகமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

குருநகர் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாது தீவகம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பிரதேசங்களில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் சிகிச்சைக்காக இங்கு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.(ம-14)

## தொல்பொருள்களை திருடினால் 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை

கொழும்பு, ஜூன் 5

தொல்பொருள்களை களவாடுதல் மற்றும் அவற்றை அழித்து விடுவது தொடர்பான குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனையாக ஐந்து ஆண்டு கால சிறைத்தண்டனையை கட்டாயமாக்குவது தொடர்பாக ஆராயப்பட்டு வருகிறது.

இது தொடர்பான கட்டளைச் சட்டம் ஒன்று மீளாய்வுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று தொல்பொருள் ஆய்வுப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி செனரத் பண்டார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நடைமுறையிலுள்ள சட்டத்தின் கீழ் குற்றவாளி ஒருவருக்கு 50 ஆயிரத்திலிருந்து இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் வரையிலான அபராதம் விதிக்க முடியும் அல்லது இரண்டு ஆண்டு முதல் ஐந்தாண்டுகள் வரையிலான சிறைத்தண்டனை விதிக்க முடியும்.

> புதிய சட்டத்தின் கீழ் குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகள் முதல் அதிக பட்சமாக ஐந்து ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை கட்டாய மாக்கப்பட்டுள்ளது

புதிய சட்டத்தின் கீழ் குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகள் முதல் அதிக பட்சமாக ஐந்து ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை கட்டாயமாக்கப்பட்டுள்ளது அவர் தெரிவித்தள்ளார்.

கடந்த காலத்தில் தொல்பொருள்களை அழிவுக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் குற்றவாளிகள் சிலர் அபராதத் தொகை செலுத்தி விடுதலை பெற்றுள்ளனர்.

புதிய சட்டத்தின் கீழ் குற்றமிழைத்த எவரும் அவ்விதம் தப்பித்துக் கொள்வதற்கு வாய்ப்புக்கிட்டாது.

தொல்பொருள்களை அகழ்ந்தெடுப்பதற்குப் பயன்படுத்தும் இயந்திரங்கள், சாதனங்கள் அவற்றை எடுத்து செல்வதற்கு பயன்படுத்தப்படும் வாகனங்களும், அனுசரணை வழங்குவோரின் வாகனங்களும் கூட புதிய சட்டத்தின் கீழ் அரசுடைமையாக்கப்படும்.- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றத்திலிருந்து கிடைத்த நிதியை பிரதேச ரீதியில் பயன்படுத்தக் கோரிக்கை

## கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 5

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்கு நீதிமன்றினூடாகக் கிடைக்கப் பெற்ற நிதி அவ்வப் பிரதேசங்களின் அபிவிருத்திகளுக்குச் செலவிடப்பட வேண்டும் எனப் பிரதேச சபை உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்று வரும் சட்டவிரோத மதுபான விற்பனை மற்றும் உற்பத்திகள் என்பவற்றின் மூலம் கடந்த ஆண்டு தண்டமாக அறவிடப்பட்ட ஒரு தொகை நிதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றினூடாகக் கரைச்சிப் பிரதேச சபை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் செப்ரெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் நீதிமன்றினூடாகக் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து அறவிடப்பட்ட 48 லட்சத்து 87 ஆயிரத்து 496 ரூபாவும், கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து அறவிடப்பட்ட 22 லட்சத்து 83 ஆயிரத்து 125 ரூபாவும் என மொத்தமாக 71 லட்சத்து 70 ஆயிரத்து 621 ரூபா நிதி முதற்கட்டமாக இவ்வாண்டு கிடைத்துள்ளது. இந்த நிதியைக் கொண்டு பின்தங்கிய பிரதேசங்களின் அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அதாவது கரைச்சி, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுகளில் விகிதாசார அடிப்படையில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும், சில பகுதி மக்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் பல்வேறு தரப்புக்களாலும் குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றது.

எனவே கிடைக்கின்ற இது போன்ற நிதியின் மூலம் பின்தங்கிய பகுதிகளில் விகிதாசார அடிப்படையில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனப் பிரதேச சபை உறுப்பினர்கள் பலர் கடந்த மாதம் இடம்பெற்ற பிரதேச சபை அமர்வில் சுட்டிக்காட்டியுள்ளனர். (க-6)

## அங்காடி வியாபார நிலையம் வவுனியாவில் திறந்து வைப்பு



வவுனியா, ஜூன் 5

வவுனியா நகரசபையால் 25 லட்சம் ரூபா செலவில் சைவப்பிரகாச மகளிர் கல்லூரிக்கு முன்பாக அமைக்கப்பட்ட அங்காடி வியாபார நிலையத்தைக் கடந்த வியாழக்கிழமை நகரசபையின் பதில் தலைவர் எம்.எம்.ரதன் மக்கள் பாவனைக்கு திறந்து வைத்தார்.

வவுனியா நகரில் நீண்டகாலமாக நடைபாதை வியாபாரிகள் வியாபாரத்தில் ஈடுபட்டனர். இதனால் நகரில் பல அசௌகரியங்கள் ஏற்பட்டன. இதனைக் கருத்தில் கொண்டு நகரசபையின் அதிரடி நடவடிக்கைகள் காரணமாக வவுனியா நகரில் இருந்து நடைபாதை வியாபாரம் முற்றுமுழுதாகக் கட்டுப்படுத்தப்பட்டது.

இதன் பிரகாரம் நடைபாதை வியாபாரிகள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக அவர்களுக்கு எனத் தனியான இடம் ஒதுக்கப்பட்டு அதில் கட்டடத் தொகுதிகள் அமைக்கப்பட்டு வியாபார நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

வாரத்தில் ஏழு நாள்களும் இவ்வியாபார நிலையம் திறந்திருக்கும். ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு நேர சந்தையாகவும் இது செயற்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-400)

### பிராந்திய ஆணையாளர்

கிளிநொச்சியில் ஆளுநரினால் திடீரென மூடப்பட்ட பிராந்திய ஆணையாளர் அலுவலகம் மீண்டும் திறந்து வைக்கப்படவுள்ளது.

ஓய்வுபெற்றமூத்தசிரேஷ்ட கல்வி அதிகாரி ஒருவர் பிராந்திய ஆணையாளராக ஆளுநரினால் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இதேபோன்று யாழ்ப்பாணம், முல்லைத்தீவு பிராந்திய ஆணையாளர் அலுவலகங்களும் மீண்டும் திறந்து வைக்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க)

### சின்னம் சூட்டும் வைபவம்

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் சிரேஷ்ட மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் அண்மையில் இடம் பெற்றது.

இதன் போது சிரேஷ்ட மாணவத்தலைவராக ஏ.டிறோனும்,பிரதம சிரேஷ்ட உதவி மாணவத் தலைவராக எம். லியோபிரஸ்ஸியும் தெரிவு செய்யப்பட்டனர். (க-12)

# வடமாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகள் குழு வவுனியாவுக்கு

**பாதிக்கப்பட்ட மாணவர்கள் கல்வி கற்க அனுமதிக்குமாறு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்.**

வவுனியா, ஜூன் 5

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவொன்று இன்று வவுனியா செல்லவுள்ளது.

வவுனியா பெரிய கோமரசங்குளம் மகாவித்தியாலய மாணவர்கள் சிலர் பாடசாலை நிர்வாகத்தினரால் இடைநிறுத்தப்பட்டமை மற்றும் பாடசாலை அதிபர் ஒருவர் மாணவர்களால் தாக்கப்பட்டமை தொடர்பாக ஆராயவென வடமாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று இன்று வவுனியா செல்லவுள்ளது என வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த 11 ஆம் திகதி கோமரசங்குளம் மகாவித்தியாலயத்தில் தரம் 8 இல் கற்கும் கவிப்பிரியா என்ற மாணவி தற்கொலை செய்து கொண்டார்.

அதற்குக் காரணமானவர்களுக்கு உடந்தையாக இருந்தனர் எனக் கூறப்படும் சில மாணவர்களுக்குத் தற்காலிகக் கல்வித் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஒருவரது பிறப்புச் சான்றிதழில் சிவப்பு மையினால் கீறப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் சிலர் தம்மைப் பாடசாலையில் தொடர்ந்து கல்வி கற்க அனுமதிக்குமாறு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்.


இடைநிறுத்தப்பட்ட மாணவர் பிரச்சினை ஒருபுறமிருக்க அதுபற்றி விசாரணை செய்த இலங்கை ஆசிரியர் சங்க வவுனியா கிளையின் பொருளாளரும் இன்னுமொரு பாடசாலையின் அதிபருமான நேசராஜா பெரிய கோமரசங்குளம் மகாவித்தியாலய மாணவர்கள் சிலரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் இடைநிறுத்தப்பட்ட மாணவர்கள் தொடர்பாக வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகமும் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றது.

இந்த நிலையிலேயே இன்று மாகாணக் கல்வி அதிகாரிகள் குழுவொன்று வவுனியா சென்று விசாரணை நடத்தவுள்ளது.

அதன் பின்னர் ஏனைய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்படும் என வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்தார். (க-4)

## இரவில் உல்லாசம்



வவுனியா வீதிகளில் இரவு வேளையின்போது உல்லாசமாக அலைந்து திரியும் கால்நடைகள். (421)

# தண்ணீரூற்றில் கணவனை இழந்த பெண்களுக்கு உதவி

முல்லைத்தீவு தண்ணீரூற்றில் கணவனை இழந்த பெண்களுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனின் ஏற்பாட்டில் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் முதற்கட்டமாகப் 10 பெண்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நிலக்கடலைப் பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கான உபகரணங்களும், நிலக்கடலை விதைகளும் வழங்கப்பட்டுள்ளன.

லண்டன் ரெட் பிறிச் தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ். றோட்டறிக் கழகத்தின் உறுப்பினர் கே. ஸ்ரீபதி தலைமையில் நேற்றுமுன்தினம் இந்த உதவிகள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.



இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், அனுசரணையாளர் சார்பாக வருகைதந்திருந்த மார்க் கௌரிகரன் ஆகியோர் பயனாளிகளுக்கான உபகரணங்களை வழங்கினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் பயனாளிகளுடன் கலந்துரையாடி அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

அத்துடன் அவர்களின் பிள்ளைகளின் கல்வி நிலை கவனிக்கப்படவேண்டும் என்று தெரிவித்ததுடன், அதற்கான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, இன்னும் 40 பயனாளிகளுக்கு இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன என்று ஈ. சரவணபவன் தெரிவித்துள்ளார். (ம)

### அக்கராயன் பாடசாலைகளில்

# மாணவருக்கு குடிதண்ணீர் பவுசர் மூலம் விநியோகம்

அக்கராயன், ஜூன் 5

அக்கராயன் மகாவித்தியாலயம் மற்றும் ஆரம்ப வித்தியாலயம் ஆகியவற்றுக்கு கரைச்சிப் பிரதேசசபை குடிதண்ணீரை வழங்கி வருகின்றது.

இந்த இரு பாடசாலைகளிலும் கல்வி கற்றுவரும் மாணவர்கள் பயன்படுத்தும் ஒரேயொரு குழாய்க் கிணற்று நீரும் உவராக மாறியுள்ளதால் குடிதண்ணீருக்கு இங்கு பெரும் அவலநிலை தோன்றியுள்ளது.

இந்த நிலையில் கரைச்சிப் பிரதேச சபையினர் மாணவர்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு பவுசர் மூலம் குடிதண்ணீரை வழங்கி வருகின்றனர்.

இந்த மாதத்தில் அக்கராயன் மகா வித்தியாலயச் சூழலில் நீர்த் தட்டுப்பாடு ஏற்படுவது வழக்கமாகும். பாடசாலை நிர்வாகத்தினரும் கரைச்சிப் பிரதேசசபை உறுப்பினர் சு.தயாபரனும் மேற்கொண்ட கடும் முயற்சி காரணமாக இந்த இரு பாடசாலைகளுக்கும் கரைச்சிப் பிரதேச சபையினர் குடிதண்ணீரை வழங்கி வருகின்றனர்.

மேலும் இங்குள்ள கிணற்றின் நீரும் வற்றியமையால் பெரும் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# நடமாடும் ஆயுள்வேத வைத்தியம்

முல்லைத்தீவு, ஜூன் 5

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடமாடும் சேவை மூலமே தற்போது ஆயுள்வேத வைத்தியம் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருவதாக வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சியாமா துரைரட்ணம் தெரிவித்தார்.

போரின் போது அழிவடைந்த ஆயுள்வேத வைத்தியசாலைகளை மீளக்கட்டியெழுப்புவதற்குச் சிறிது காலம் தேவை என்பதால் பொதுமக்களுக்கு நடமாடும் சேவை மூலம் ஆயுள்வேத வைத்தியத்தை முல்லைத்தீவு மாவட்டத்தில் வழங்க வேண்டியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது பொது மக்கள் மீள்குடியமர்ந்துள்ளதால் சிறுவர்கள், மற்றும் முதியவர்கள் மருத்துவத் தேவைக் [illegible] வேண்டியுள்ளது.

எனினும் ஆயுள்வேத வைத்தியம் தற்போது வார நாள்களில் நடமாடும் சேவை மூலம் வழங்கப்படுவதால் பொது மக்கள் பலர் நன்மை அடைந்து வருகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதி மீறிய உணவகங்களால் ரூ.6 லட்சம் வரை வசூல் மழை

## நீதிமன்றுகளில் அபராதமாக செலுத்தப்பட்டது

**உணவு சுகாதார விதிமுறைகளின் கீழ் 35 உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது**

யாழ்ப்பாணம், ஜூன் 5

உணவுச் சட்டம் மற்றும் சுகாதார விதிமுறைகளை மீறிய உணவு கையாளும் நிலைய உரிமையாளர்கள் 205 பேர் கடந்த ஜனவரிக்கும் ஏப்ரல் மாதத்துக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் நீதிமன்றங்களில் 5 லட்சத்து 89 ஆயிரத்து 100 ரூபா அபராதம் செலுத்தியுள்ளனர். இன்னும் 21 பேரின் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினரின் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உணவுச் சட்டத்தின் கீழ் 150 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அவர்களில் 130 பேருக்கு எதிரான குற்றச்சாட்டு ஒப்புக் கொள்ளப்பட்டன.

இதனை அடுத்து அவர்களுக்கு 3 லட்சத்து 68 ஆயிரத்து 800 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. 20 பேர் மீதான வழக்குகள் இடம்பெற்று வருகின்றன.

சுகாதார விதிமுறைகளின் கீழ் 35 உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

அவர்களில் 34 பேர் தம்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டு 95 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்திச் சென்றனர். ஒருவர் மீதான வழக்கு இன்னும் உள்ளது.

ஏனையவகை உணவு கையாளும் நிலைய உரிமையாளர்கள் 24 பேருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவர்கள் தம்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அவர்களுக்கு 80 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்திச் சென்றனர்.

உணவு அடையாளப்படுத்தல் மற்றும் விளம்பரப்படுத்தல் சட்டத்தின் கீழ் உணவு கையாளும் நிலைய உரிமையாளர்கள் 17 பேருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

அவர்கள் தம் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டு 45 ஆயிரத்து 300 ரூபா அபராதம் செலுத்தினர் என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

# நன்னடத்தைப் பாடசாலையில் இருந்த சிறுவன் பெற்றோரிடம்

## ஒரு வருடத்தின் பின் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 5

2011 ஆம் ஆண்டு களவாடப்பட்ட கையடக்கத் தொலைபேசி மற்றும் 11 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைத் தன் உடைமையில் வைத்திருந்த குற்றத்துக்காக நன்னடத்தைப் பாடசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுவன் ஒருவருடத்தின் பின்னர் பெற்றோருடன் செல்ல யாழ். நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

2011 ஜூன் மாதம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் திருடினான் என்ற குற்றச்சாட்டில் அதே பிரிவைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தான்.

யாழ். நீதிமன்றில் சிறுவன் தன் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து ஒரு வருடத்துக்கு நன்னெறிப் பாடசாலையில் இருக்க நீதிமன்றம் உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தது. அதன்படி அவன் நன்னடத்தைப் பாடசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டான்.

ஒருவருடம் கடந்த நிலையில் இந்த வழக்கு யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

சிறுவன் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஜொனி மதுர நாயகம் சிறுவனது நண்பன் எனக் கூறப்படும் ஒருவரால் களவுப் பொருள்களைத் தன் வசம் வைத்திருந்தமை, திருடியமை, பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்காமை, சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்தமை என நான்கு குற்றச் சாட்டுக்கள் சிறுவன் மீது சுமத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சிறுவன் நன்னடத்தைப் பாடசாலையில் ஒரு வருடம் இருந்தார். அவருக்கு வேறு குற்றச்சாட்டுக்கள் இல்லை. அவரது எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டும் பெற்றோரிடம் ஒப்படைக்கக் கோரியிருந்தார். அதனைப் பரிசிலித்த நீதிவான் சிறுவனைப்பெற்றோருடன் செல்ல அனுமதித்தார். (ம-4)

# திருநெல்வேலி பழக்கடைக்காரர்கள் நால்வருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 5

திருநெல்வேலிச் சந்தையில் சந்தை நடைமுறையைக் குலைத்தார்கள் என்று கூறி பழக்கடை வியாபாரிகள் நால்வருக்கு எதிராக நல்லூர் பிரதேச சபையால் யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு எதிர்வரும் 26 ஆம் திகதி விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இந்த வழக்கு யாழ்.நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நான்கு பழக்கடை வியாபாரிகளும் கீழ் மாடியில் வைத்து வாழைப்பழ வியாபாரம் மேற்கொண்டிருந்தனர்.


அவர்களை மேல்மாடியில் கொண்டு சென்று ஏனைய மாம்பழக்கடை வியாபாரிகளுடன் வியாபாரத்தில் ஈடுபடுமாறு பிரதேச சபையால் பணிக்கப்பட்டது. அதனை அந்த நான்கு வியாபாரிகளும் மறுத்த காரணத்தால் அவர்களுக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் தரப்பில் ஆஜராகிய சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் வியாபாரிகளது கருத்தை எடுத்துக் கூறினார்.

வியாபாரிகள் நால்வரும் பல வருடங்களாக வாழைப் பழக்கடை வைத்து வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். சந்தையில் கட்டட வேலைகளின் பின்னர் ஏனைய சில கடைகளுடன் பழக்கடையும்மேல் மாடிக்குக் கொண்டு செல்லப்பட்டது.

வயோதிபர்களானவாழைப் பழ வியாபாரிகள் நால்வரும் மாடிப்படிகளில் வாழைப் பழக் குலைகளுடன் ஏறி இறங்குவது கடினமானது.

எனவே அந்த வியாபாரிகள் கீழ் மாடியில் வைத்து வியாபாரத்தில் ஈடுபடுகின்றமையே பொருத்தம். அதற்கான அனுமதியை இந்த வருட இறுதிவரை என்றாலும் வழங்குமாறு கோரிக்கை விடப்பட்டது. இந்த நிலையிலேயே வழக்கு விளக்கத்துக்கு வைக்கப்பட்டுள்ளது. (ம-4)



துரையப்பா விளையாட்டு அரங்குக்கு முன்பாகவுள்ள பண்ணை வீதியில் உள்ள பிரதான தொலைபேசிக் கம்பங்கள் இரண்டு நேற்று முறிந்து விழுந்ததால் அந்தப் பகுதியூடான போக்குவரத்தில் சிலமணிநேரம் தடங்கல் ஏற்பட்டது. காற்றால் இந்தக் கம்பங்கள் சரிந்து விழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

# பாலைப்பழ சீசன் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ். நகரில் பாலைப்பழத்துக்கு பெரும் மவுசும், கிராக்கியும் ஏற்பட்டுக் காணப்பட்டது.

வன்னிப் பகுதியில் இருந்து கொண்டுவரப்படும் பாலைப்பழம் ஒரு சுண்டு 60 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இந்த பாலைப் பழத்தை பெரும்பாலானோர் விரும்பி வாங்கிச் செல்வதையும் காணமுடிகிறது. (ம-17)

# ஆளணிப் பற்றாக்குறையால் கிளைகள் மூடப்படும் நிலைமை

## மானிப்பாய் சங்கத்தில் இந்த நிலை

வலி.தென்மேற்கு, ஜூன் 5

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையால் சில கிளைகளைத் தற்காலிகமாக மூட வேண்டிய நிலை சங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் பாவனையாளர்களுக்கு மட்டுமல்ல சங்கத்துக்கும் நாளாந்தம் கிடைக்கும் வருமானத்திலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இருபத்தைந்துக்கும் மேற்பட்ட கிளைகளுடன் இயங்கி வந்த மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நாளாந்தம் ஏற்பட்டு வந்த நஷ்டம் காரணமாக பணியாளர்களைக் குறைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இதனால் கிளைகள் குறைக்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட கிளைகளுடன் இயங்கி வருகின்றது. விற்பனையாளர்களுடனும் முகாமையாளர்களுடனும் இயங்கி வந்த கிளைகள் தற்போது முகாமையாளர்களுடன் மட்டும் இயங்குகின்றது.

கிளைகளில் கடமையாற்றி வந்த முகாமையாளர்கள் பதவியிலிருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து வெற்றிடமாக உள்ள முகாமையாளர் பதவிக்கு எவரும் இல்லாத நிலையில் இயங்கி வந்த சில கிளைகள் மூடப்பட்டுள்ளன.

இந்த நிலை ஏற்பட்டுள்ளதால் வாடிக்கையாளர் தனியார் கடைகளை நாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் சங்கத்துக்கு நாளாந்தம் கிடைக்கும் வருமானத்திலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

நாளாந்தம் வேதனத்தில் தற்காலிக முகாமையாளரை கடமையில் அமர்த்தச் சங்கம் நடவடிக்கை எடுத்த போதிலும் வேதனம் திருப்தியில்லாத காரணத்தால் இந்தப் பதவியை ஏற்க எவரும் முன்வரவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம-115)

### சாதாரணதரப் பரீட்சை விண்ணப்பம் 30 ஆம் திகதிக்குள் அனுப்பவேண்டும்

யாழ்ப்பாணம், ஜூன் 5

சாதாரணதரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்பாக பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்ப முடிவுக்கான கால எல்லை நீடிக்கப்படமாட்டாது எனவும் பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் புஸ்பகுமார அறிவித்துள்ளார். சகல பாடசாலைகளுக்கும் விண்ணப்பப் படிவங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிடைக்காவிடின் உடன் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# மீன் சந்தை பாவனைக்கு

வலி.தென்மேற்கு, ஜூன் 5

மீன் வியாபாரிகளதும் பாவனையாளர்களதும் நலன் கருதி வலி.தென்மேற்குப் பிரதேச சபையால் அமைக்கப்பட்ட மீன் சந்தை கடந்த சனிக்கிழமை வியாபாரிகளின் பாவனைக்குவிடப்பட்டுள்ளது.

காக்கைதீவு இறங்குதுறையில் அமைக்கப்பட்டுள்ள கூறுவிலை மண்டபத்தில் வைத்து மீனவர்களிடமிருந்து கடல் உணவுகளைக் கொள்வனவு செய்யும் வியாபாரிகள் இடநெருக்கடிக்கு மத்தியில் மண்டபத்துக்கு அருகில் வைத்து வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தனர். இதனால் வியாபாரிகள் மட்டுமல்ல பொது மக்களும் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வந்தனர்.

சுகாதாரமற்ற முறையில் தரையில் வைத்து மீன்விற்பனைசெய்யப்படுவது குறித்து வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குத் தெரியப்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து சபை நிதியிலிருந்து கூறுவிலை மண்டபத்துக்கு கிழக்குப் பக்கமாக சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்றவாறு மீன்சந்தை அமைக்கப்பட்டு பாவனைக்கு விடப்பட்டது. மீன் சந்தை அமைக்கப்பட்டதால் பிரதேச சபைக்கு நாளாந்தம் வருமானத்தைப் பெறக்கூடிய வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை சைக்கிள் பாதுகாப்பு நிலையமும் அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதால் போக்குவரத்துக்கு இருந்த இடையூறு நீங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-115-86)

# காக்கைதீவு இறங்குதுறையில் கடலரிப்பைத் தடுக்க 80 அடி சுவர்

## 46 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

வலி.தென்மேற்கு, ஜூன் 5

காக்கைதீவு இறங்குதுறையில் ஏற்படும் கடலரிப்பைத் தடுக்கும் நோக்குடன் 46 லட்சம் ரூபா செலவில் 80 அடி நீளமான அணைச் சுவர் கட்டப்படவுள்ளது. இதற்கான நிதியைக் கடற்றொழில் அமைச்சு வழங்கியுள்ளது.

சாவல்கட்டு, ஆனைக்கோட்டை, நவாலி, உயரப்புலம், காக்கைதீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மீனவர் காக்கைதீவு இறங்குதுறையிலிருந்து கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் நாளுக்கு நாள் ஏற்படும் கடலரிப்பால் தரைப்பகுதி கடல் நீரால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகிறது.


இதனால் கடற்றொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர் சிரமங்களுக்கு ஆளாவதுடன் கரையோரங்களில் வள்ளங்களைப் பாதுகாப்பாகக் கட்டிவைக்க முடியாத நிலைக்கும் ஆளாகி வருகின்றனர்.

அத்துடன் பல லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டிருக்கும் கூறுவிலை மண்டபத்துக்கும் பாதிப்பு ஏற்படும் நிலை உருவாகி வருகின்றது.

இந்த நிலை குறித்து கடற்றொழில் அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வந்த யாழ். மாவட்ட கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் என். பொன்னம்பலம், மீனவர்களின் நலன் கருதி அணைச் சுவர் அமைப்பதற்கு நிதியுதவி வழங்குமாறு அமைச்சரிடம் கோரியிருந்தார்.

தலைவரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அமைச்சர் கடலரிப்பைத் தடுக்கும் வகையில் முதற்கட்டமாக 80 அடி நீளமான அணைச்சுவர் அமைப்பதற்கு 46 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார். இதற்கான பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கச்சிராயபாளையம் அருகே அடுத்த வாய்நத்தம் கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் ஏராளமான வீடுகள் முற்றிலுமாக எரிந்து குட்டிச்சுவகள் மட்டுமே உயிர் பிழைத்துக் காணப்படுகின்றன.

## ஆந்திராவில் அதிகரிக்கும் வெப்பம்

# 24 பேர் ஒரே நாளில் சாவு

ஆந்திரா மாநிலத்தில் நிலவிவரும் அதிகரித்த வெப்ப நிலையால் ஒரே நாளில் மட்டும் 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த சில தினங்களாக 112 டிகிரி அளவுக்கு அக்னி வெயில் சுட்டெரிக்கிறது. இதன் காரணமாக கம்மம், கிருஷ்ணா, வாரங்கல், நல்கொண்டா, கிழக்கு-மேற்கு கோதாவரி, விசாகப்பட்டினம், விஜயவாடா, குண்டூர் உட்பட பல்வேறு மாவட்டங்களில் வெயிலின் உக்கிரம் அதிகமாகக் காணப்படுகிறது.

அனல் காற்று அதிகமாக வீசுவதால் பொதுமக்களால் வெளியே வர முடியவில்லை. வீட்டிலேயே முடங்கி இருக்கின்றனர். நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் வெயிலுக்கு 24 பேர் உயிரிழந்தனர். கம்மம் மாவட்டத்தில் 4 பேரும், கிருஷ்ணா மாவட்டத்தில் 3 பேரும், வாரங்கல்லில் 7 பேரும், நல்கொண்டாவில் 4 பேரும், விசாகப்பட்டினத்தில் 6 பேரும் உயிரிழந்தனர். கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் வெயிலுக்கு 10 இற்கும் மேற்பட்டோர் மயக்கம் அடைந்தனர். அவர்கள் அங்குள்ள தனியார் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. (வ)

# அமர்நாத் யாத்திரைக்கு 2 லட்சம் பேர் முற்பதிவு

ஸ்ரீநகர், ஜூன் 5

அமர்நாத் புனித யாத்திரை செல்ல 2 லட்சத்துக்கும் அதிகமானோர் முற்பதிவு செய்துள்ளனர். நேற்று முன்தினம் மாலை வரை 2.55 லட்சம் யாத்திரிகர்கள் முன்பதிவு செய்துள்ளனர்.

ஜம்மு-காஷ்மீரின் 47 கிளைகளில் இணையத்தளம் மூலமாகவும் முற்பதிவுகள் நடைபெற்று வருகின்றன.

இந்த ஆண்டுக்கான அமர்நாத் யாத்திரைகள் எதிர் வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (வ)

# தேர்தல் ஆணையாளர்கள் நியமனத்தில் மாற்றம் தேவை


## இந்தியப் பிரதமருக்கு அத்வானி கடிதம்

டில்லி, ஜூன் 5

தேர்தல் ஆணையாளர்கள் நியமன நடவடிக்கைகளில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்குக்கு, பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் அத்வானி கடிதம் எழுதியுள்ளார்.

பிரதமருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போது, தேர்தல் ஆணையாளர்கள் எல்லாம் பிரதமரின் ஆலோசனையின் பேரில், ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றனர். இது, மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துவதில்லை. இது, ஆளும் கட்சியினர் தனிப்பட்ட முறையில் முடிவெடுக்கும் வகையில் உள்ளது. அதனால், இந்தத் தெரிவு முறைகளில் முறைகேடுகள் நடக்க வாய்ப்பு இருப்பதோடு, பாரபட்சமாக செயற்படவும் வாய்ப்பு உள்ளது.



**தேர்தல் ஆணையர்கள் நியமன நடவடிக்கைகளில், ஒளிவு மறைவற்ற தன்மை உருவாக்கப்பட வேண்டும். எதிர்க்கட்சிகளின் கருத்துக்களும் கேட்கப்படவேண்டும்.**

தேர்தல் ஆணையாளர்கள் நியமன நடவடிக்கைகளில், ஒளிவு மறைவற்ற தன்மை உருவாக்கப்பட வேண்டும். எதிர்க்கட்சிகளின் கருத்துக்களும் கேட்கப்பட வேண்டும். பிரதமர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி, சட்ட அமைச்சர் மற்றும் லோக்சபா மற்றும் ராஜ்யசபா எதிர்க்கட்சித் தலைவர்கள் அடங்கிய குழுவினரால், தேர்தல் ஆணையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்-என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதைய தலைமைத் தேர்தல் ஆணையாளர் எஸ்.வை.குரேஷி, இம்மாதப் பிற்பகுதியில் ஓய்வு பெறுகிறார். இந்தச் சூழ்நிலையில், பிரதமருக்கு அத்வானி கடிதம் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்வானியின் கடிதத்திற்கு, மத்திய நாடாளுமன்ற விவகாரத்துறை இணை அமைச்சர் ஹரீஸ் ரவாத் பதில் அளித்துள்ளார். அவர் அளித்த பதிலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாரதிய ஜனதா கட்சியில், தற்போது கடும் குழப்பமும், உட்கட்சி பூசலும் நிலவுகின்றன. இதிலிருந்து மக்களைத் திசை திருப்பவே, அத்வானி இதுபோன்ற கோரிக்கையை விடுத்துள்ளார்.

தேர்தல் ஆணையாளர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள், சரியான முறையில் நடைபெறுகின்றன என்பது, அத்வானிக்கே தெரியும். நம் நாட்டின் தேர்தல் ஆணையத்தை, உலகமே பாராட்டுகிறது. அதனால், தற்போதையத் தெரிவு முறைகளையே, அனைவரும் விரும்புவர் என்று நம்புகிறேன்-என்றார் அவர். (வ)

## ஆந்திரா இடைத்தேர்தல்:

# ஜெகன்மோகனுக்காக பிரசாரத்தில் கலக்கும் தாயும், சகோதரியும்



ஆந்திராவில் 18 சட்ட சபைத் தொகுதி ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு என்பவற்றுக்கு எதிர் வரும் 12 ஆம் திகதி இடைத் தேர்தல் நடைபெற உள்ளது.

இதில் தற்போது சொத்துக்குவிப்பு வழக்கில் கைதாகி சி.பி.ஐ. கட்டுப்பாட்டில் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகன்மோகன்ரெட்டி வை.எஸ்.ஆர்.காங்கிரஸ் கட்சி போட்டியிடுகிறது. இதனால் அவர் இடைத்தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட முடியவில்லை.

இந்த நிலையில் ஜெகன் மோகனுக்குப் பதிலாக அவரது தாயார் விஜயலட்சுமி, சகோதரி ஷர்மிளா, மனைவி பாரதி ஆகியோர் இடைத் தேர்தல் பிரசாரத்தில் களமிறங்கி கலக்கி வருகின்றனர்.

இவர்கள் செல்லும் இடம் எல்லாம் கட்டுக்கடங்காத அளவுக்கு கூட்டம் கூடுகிறது. அவர்களைப் பார்க்க ஆண்களும், பெண்களும் முண்டியடிக்கின்றனர்.

அவர்கள் பேசும் இடங்களைச் சுற்றியுள்ள மரங்கள், கட்டடங்கள் மீது பொது மக்கள் ஏறி நின்று வேடிக்கை பார்க்கின்றனர். ஜெகன் மோகனுக்கு வந்த கூட்டத்தை விட இவர்களுக்கு பல மடங்கு கூட்டம் அதிகரித்துள்ளது. (வ)

# சிம்லாவில் உருவாகிவரும் பிரியங்காவின் கனவு இல்லம்





காங்கிரஸ் கட்சி பொதுச்செயலாளர் சோனியா காந்தியின் மகள் பிரியங்கா, நாட்டின் பிரதான சுற்றுலாத் தலமான சிம்லாவில் தனது கனவு இல்லத்தைக் கட்டத்தொடங்கியுள்ளார்.

இமாச்சல பிரதேசம், சிம்லாவில் இருந்து 12 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சராப்ரா கிராமத்தில் இயற்கையோடு ஒட்டிய சுற்றுச்சூழலை பாதிக்காது வீடு கட்டிக் குடியேற பிரியங்கா விரும்பினார். இதற்காக இங்கு நிலம் வாங்கிய பிரியங்கா, தனது கனவு இல்லம் எவ்வாறு இருக்க வேண்டுமென்று அவரே வடிவமைத்தார்.

குறைந்தளவில் கொங்கிறீட்டும் அதிகளவில் மரம் மற்றும் பலகைகள் கொண்டு கட்டப்படும் கனவு இல்லத்துக்காக வெளி மாநிலங்களில் இருந்து உயர்ரக மரங்கள், மூங்கில்கள் வரவழைக்கப்பட்டன.

கட்டுமானப் பணி தொடங்கி முக்கால்வாசி முடிந்து விட்ட நிலையில் திருப்தி இல்லாமல் அது இடிக்கப்பட்டது. இரண்டாவது முறையாக வேறு சில காரணங்களுக்காக கனவு இல்லப் பணி பாதியிலேயே நிறுத்தப்பட்டது.

இந்தநிலையில் தனது கனவு இல்ல கட்டுமானப் பணியை பிரியங்கா மீண்டும் ஆரம்பித்துள்ளார். (வ)

# கடலுக்குள் பொங்கிய நீருற்று

## திருச்செந்தூரில் மக்கள் பீதி

திருச்செந்தூர் அருகே, நேற்றுமுன்தினம் கடல் நீர் மட்டத்தில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தால், மீனவர்கள் பீதியடைந்தனர். திருச்செந்தூர் அருகேயுள்ள மணப்பாடு, மீனவர்கள் நிறைந்த கடற்கரை கிராமமாகும். நேற்று முன்தினம் காலை, இங்கு கடற்கரையிலிருந்து சில அடி தூரத்தில், கடலுக்குள், திடீரென பயங்கர வெடிச் சத்தம் போல கேட்டுள்ளது.

பின், அங்கிருந்து ஊற்றுப்போல ஏற்பட்டு, ஓரிடத்திலிருந்து கடல் நீர் அதிக உயரத்திற்கு, மேல் நோக்கி எழுந்துள்ளது. இதைப் பார்த்த மீனவர்கள், கடலுக்குள் நிலநடுக்கம் ஏற்பட்டதாக பீதியடைந்து, கிராமத்தினருக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து, ஏராளமானோர் அந்த கடற்கரையில் கூடினர். இந்த திடீர் மாற்றத்துக்கான காரணம் தெரியவில்லை. (வ)

## ஜம்முவில் இலேசான நிலநடுக்கம்

ஜம்மு-காஷ்மீரில் நேற்று அதிகாலை 5 மணியளவில் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டதால் வீடுகள் குலுங்கின. 4.3 ரிச்டர் அளவில் இந்த நிலநடுக்கம் பதிவானதாக காஷ்மீர் பேரிடர் மேலாண்மை நிறுவனத்தின் தலைவர் அமீர் அலி தெரிவித்துள்ளார்.

இதேவேளை சீனாவின் எல்லையான ஷின்ஜியாங் அருகே மையமாகக் கொண்டு நிலநடுக்கம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கம் ஏற்பட்டு சில நிமிடங்களில் மக்கள் அலறியடித்துக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறி வீதியில் வந்து தஞ்சமடைந்தனர். (வ)

# பிரதமருக்கு எதிராக பொய்குற்றச்சாட்டு

## எதிர்க் கட்சிகள் மீது சோனியா தாக்கு

டில்லி, ஜூன் 5

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு எதிராக எதிர்க்கட்சிகள் எழுப்பும் குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி தெரிவித்தார்.



இதுதொடர்பாக நேற்றுக் கூடிய காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் அவர் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்க்கட்சிகளும் காங்கிரஸுக்கு எதிரான சக்திகளும் பிரதமருக்கு எதிராகப் பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளன. ஏழை, எளியவர்களைப் பாதிக்கும் பொருளாதார பிரச்சினைகள் எம்முன் உள்ள ஒரு சவாலாகும். மத்திய அரசு வகுக்கும் கொள்கைகள் மற்றும் திட்டங்களை நிறைவேற்ற காங்கிரஸ் அல்லாத அரசுகள் ஒத்துழைப்பு அளிப்பதில்லை. வரும் மக்களவைத் தேர்தலுக்காகவும், இதர மாநிலத் தேர்தல்களுக்காகவும் எமது அமைப்பை வலுப்படுத்த வேண்டும்.

கட்சியை வலுப்படுத்தும் நோக்கத்தில் நாம் பணியாற்றும்போது தொண்டர்கள் சோர்வடையக் கூடாது. எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ள அவர்கள் தயாராக இருக்க வேண்டும்-என்றார் அவர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேபாள நீதிமன்றங்கள் மூடப்பட்டன

காத்மாண்டு, ஜூன் 5

நேபாள உயர்நீதிமன்ற நீதிபதி ராணா பகதூர் சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டித்து, நேற்று முன்தினம் அந்த நாட்டு நீதிமன்றங்கள் மூடப்பட்டிருந்தன. நேபாள உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தவர் ராணா பகதூர் பாம்,(64) மூன்று குற்றவாளிகளை விடுவிக்க, இவர் லஞ்சம் பெற்றார் எனக் கூறப்பட்டது.

இது தொடர்பாக, இவர் மீது, அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதுஆனால், இது தொடர்பான விசாரணைக்கு, இவர் முன்னிலையாகாமல் தவிர்த்து வந்தார். தற்போது, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. இதனால்,' இவர் மீதான கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை.

இந்த நிலையில், ராணா பகதூர், காத்மாண்டுவில் சங்கமூல் என்ற இடத்தில் உள்ள பாக்ளாமுகி கோவிலுக்கு, தனது பாதுகாவலருடன் காரில் சென்றார். அப்போது, மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள்,இவர் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.




இதில் படுகாயமடைந்த ராணா பகதூர், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, கடந்த வாரம் சிகிச்சை பயனின்றி இறந்தார். நீதிபதியைச் சுட்டுக் கொன்றவர்கள், இதுவரை கைது செய்யப்படாததைக் கண்டித்து, நேபாளத்தில் உள்ள நீதிமன்றங்கள் நேற்று மூடப்பட்டன.

# பிரிட்டனில் கோலாகலம்

## மகாராணியின் வைர விழா களைகட்டுகிறது





ஆயிரம் படகுகள் அணிவகுத்துவர, மகாராணியார் அவரது அரச படகில் சவாரி செய்யும் அற்புதமான வண்ணமிகு காட்சியை லண்டன் தேம்ஸ் நதிக்கரையில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் பெரும் ஆரவாரத்துடன் கண்டுகளித்தார்கள்.

எலிசபெத் மகாராணியார் முடிசூடி 60 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு பிரிட்டன் முழுவதும் நான்கு நாள்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற கொண்டாட்டங்களின் அங்கமாக நேற்று முன்தினம் இந்தப் படகுச் சவாரி நடந்தது. மகாராணியாரின் வைரவிழாக் கொண்டாட்டத்தைக் குறிக்கும் சங்கு முழங்கிய கையோடு அன்றைய தினம் பிற்பகல் 2:40 மணியளவில் தொடங்கிய படகுச்சவாரி மாலை 5.30 மணியளவில் இறுதிப்படகு அதன் 7 மைல் தூரப் பயணத்தை அடைந்ததும் அதிகாரபூர்வமாக முடிவடைந்தது. அரச குடும்பத்தின் முக்கிய பிரமுகர்கள் சிலரும் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட அரச படகில் மகாராணியாருடன் சவாரி செய்தனர்.

86 வயதான மகாராணியாரின் 60 ஆண்டுகால முடியாட்சியை கௌரவிப்பதற்காக, முன்னதாக அவரது மகனும் முடிக்குரிய இளவரசருமான சார்ள்ஸ் லண்டன் வீதிக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டிருந்ததைக் காணமுடிந்தது.

ஒரு காலத்தில் உலகின் பெரும்பாலான பாகத்தைத் தனது ஒற்றைக் கொடியின்கீழ் வைத்திருந்த பிரிட்டன் முடியாட்சியின் ஒரு அடையாளச் சின்னமாக தமது இன்றைய மகாராணியின் 60ஆவது ஆண்டுப் பூர்த்தியைப் பிரிட்டன் மக்கள் கொண்டாடுகிறார்கள்.

ஐக்கிய இராச்சியத்துக்கும் இன்னும் 15 நாடுகளுக்கும் இன்றளவும் கௌரவ, பெயரளவு அரசியாக விளங்கும் இரண்டாம் எலிசபெத் மகாராணியார், ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலிய கண்டங்களைச் சேர்ந்த 54 சுதந்திர நாடுகள் அங்கம் வகிக்கும் பொதுநலவாயஅமைப்புக்கும் தலைமை தாங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மகாராணியாரின் வைரவிழாக் கொண்டாட்டங்களை எதிர்த்து லண்டனில் ஆர்ப்பாட்டங்களும் நடந்துள்ளன.



சட்டவிரோதமாக கானா நாட்டுக்குள் பிரவேசித்த வேற்று நாட்டவர்கள் அந்த நாட்டுப்பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொது விளையாட்டு அரங்கு ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களில் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை தொழுகையில் ஈடுபட்டிருந்தார்.

# புளோரிடாவில் வாகன விபத்து

புளோரிடாவில் 12 இற்கும் மேற்பட்ட ஹெய்ட்டி பண்ணை தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற வாகனம், டயர் கழன்று ஓடியதால் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 3 பேர் உயிரிழந்தனர். இது குறித்துப் புளோரிடா தேசிய நெடுஞ்சாலை ரோந்து பொலிஸ்அதிகாரி கிம் மான்டெஸ் கூறியதாவது:-

புளோரிடாவிலிருந்து நியூஜெர்சிக்கு பண்ணைத் தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற வாகனம் புளோரிடா தேசிய நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் அதிகாலையில் ரயர் கழன்றதால் தடுமாறி விபத்துகுள்ளானது.

இதில் ஒரு பெண் உள்பட மூவர் உயிரிழந்தனர். காயமடைந்த 11 பேருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.இதில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்றார்.

# ஆஸி. மாட்டிறைச்சி நிறுவனத்தில் இந்திய நாட்டவர்களுக்குப் பணி

மெல்போர்ன், ஜூன் 5

ஆஸ்திரேலியாவில் உள்ள மிகப்பெரிய மாட்டிறைச்சி நிறுவனம், இந்தியர்களைப் பணிக்கு அமர்த்தத் திட்டமிட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் டார்வின் நகரில், ஏ.ஏ., கம்பெனி உள்ளது. மிகப்பெரிய இந்த மாட்டிறைச்சி நிறுவனம், தன்னுடைய இறைச்சிக் கூடத்தில் பணியாற்ற, 260 பணியாளர்களை நியமிக்க உள்ளது.

இது குறித்து, இந்த நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி டேவிட் பார்லே குறிப்பிடுகையில், ஒன்றரை ஆண்டு காலத்துக்கு சோதனை ரீதியாக, 457 பேரை நியமிக்க உள்ளோம்.

இவர்களைச் சேர்த்துக் கொள்ள இந்தியாவுக்கு ,417 விசாக்கள் வழங்க உள்ளோம். இந்தியாவில் உள்ள, இப்கோ நிறுவனம் ஓராண்டில்,35 லட்சத்துக்கும் அதிகமான மாடுகளைக் கொல்கிறது. நிறைய அனுபவம் உள்ள இந்த நிறுவனத்துடன் உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளோம்.

தொழிற்சாலை மற்றும் தொழிற் சங்க பிரச்சினைகளால் பாதிப்பு ஏற்படாதவாறு, பாதுகாப்பான நடைமுறைகளை மேற்கொண்டுள்ளோம் என்றார்.

ஏற்கனவே இந்திய- ஆஸ்திரேலிய உறவுகளில் கலாசாரம் சார்ந்த பிரச்சினைகள் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன. இந்தியர்கள் மாட்டை தெய்வமாக மதிக்கின்றனர். இந்த நிலையில் ஆஸ்திரேலிய நிறுவனத்தின் இந்த நடவடிக்கை சர்ச்சைகளை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இணைய தாக்குதல்கள் நாகரிகமானவை

எதிரிகளுக்கு எதிராக இணையத் தளதாக்குதல்களை நடத்துவது பெரிய இழப்புக்களை ஏற்படுத்தாத ஒன்று என்பதால், அதனை ஓர் அரசு ஒரு நாகரிகமான தெரிவாகக் கொள்ள முடியும் என்று பிரிட்டன் இராணுவ படைகளுக்கான அமைச்சர் நிக் ஹார்வி கூறியுள்ளார்.

சிங்கப்பூரில் வருடாந்த பாதுகாப்பு மாநாடு ஒன்றில் பேசிய அவர், எதிர்கால மோதல்களில் இத்தகைய இணையத் தாக்குதல்களின் பங்கு அதிகரிக்கலாம் என்றும், இராணுவத்துக்கு மாத்திரமல்லாமல், மொத்த சமூகத்துக்கே அதன் மூலம் தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்றும் கூறியுள்ளார்.

கனதியான பாரம்பரிய படைகளைக் கொண்டிருக்கும் நாடுகள் மீது இணையத் தாக்குதல்கள் மூலம், குறைந்த செலவில் தாக்குதல்களை நடத்த முடியும் என்றும் ஹார்வி கூறியுள்ளார்.

இணைய ஆயுதங்கள் மூலம் இணைய ஆயுத போட்டியை ஏற்படுத்த முடியும் என்று மலேசிய பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார்.

# மனைவியின் சடலத்தை மறைத்த ஜப்பானிய முதியவர் கைது

டோக்கியோ , ஜூன் 5

ஜப்பானில் 80 வயது முதியவர் தனது மனைவியைக் கொன்று சடலத்தை 10 ஆண்டுகளாக குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. ஜப்பானில் மசைசி யமாதா என்பவர் மீன் பதப்படுத்தும் கம்பெனி நடத்தி வருகிறார். இவரது வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசுகின்றது என அயலவர்கள் கூறினர்.

சந்தேகம் அடைந்த பொலிஸார், மசைசி வீட்டில் திடீரென சோதனை நடத்தினர். அப்போது, வீட்டில் இருந்த குளிர்சாதனப் பெட்டியில் பெண்ணின் உடல் பாதுகாக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. அதிர்ச்சி அடைந்த பொலிஸார் மசைசியைக் கைது செய்தனர். முதல் கட்ட விசாரணையில், கணவன் மனைவிக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகக் கொலை நடந்துள்ளது தெரிய வந்துள்ளது. சடலத்தைக் கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்குப் பொலிஸார் அனுப்பி வைத்தனர்.

கடந்த 2008ஆம் ஆண்டு மனைவியைக் கொலை செய்தார் என ஒப்புக்கொண்டுள்ளார். இதுகுறித்து அவரிடம் தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது.

# பஸ்ஸில் மோதியது விமானம்

அக்ரா,ஜூன் 5

ஆபிரிக்க நாடான கானாவில், பஸ் மீது விமானம் மோதியதில், பயணிகள் 10 பேர் கொல்லப்பட்டனர்.

நான்கு பேர் படுகாயமடைந்தனர்.நைஜீரியாவின் லாகோஸ் நகரிலிருந்து புறப்பட்ட சரக்கு விமானம் ஒன்று, கானா நாட்டின் அக்ரா நகர விமான நிலையத்தில், நேற்று தரையிறங்கியது.

அவ்வேளை விமானம் ஓடுபாதையை விட்டு விலகி, அந்த வழியாகச் சென்ற பயணிகள் பஸ் மீது, மோதியது.

இதில், மினி பஸ் பலத்த சேதமடைந்தது. பஸ்ஸில் இருந்த பயணிகள், 10 பேர் கொல்லப்பட்டனர். நான்கு பேர் படுகாயமடைந்தனர். இதில், விமானமும் சேதமடைந்துள்ளது.

கானா துணை ஜனாதிபதி ஜோன் ட்ரமானி, விபத்து நடந்த இடத்தை நேரில் பார்வையிட்டார். இந்த சம்பவம் குறித்த விசாரணைக்கு, அவர் உத்தரவிட்டுள்ளார்.

# முபாரக் தூக்கிலிடப்படவேண்டும்

கெய்ரோ, ஜூன் 5

எகிப்து முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கை தூக்கிலிட வேண்டுமென்று வலியுறுத்தி அந்த நாட்டில் பெரும் போராட்டம் நடைபெற்று வருகிறது.

எகிப்தில் மக்கள் புரட்சியால் கடந்த ஆண்டு ஆட்சியை இழந்தவர் முபாரக். புரட்சியின் போது இராணுவத்தை ஏவி விட்டு 850 பேரைக் கொலை செய்த வழக்கில், அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவரது எதிர்ப்பாளர்கள் இந்த தண்டனையால் திருப்தியடையவில்லை.

ஈவு இரக்கமின்றி தனது நாட்டு மக்களையே கொன்று குவித்த அவருக்கு மரண தண்டனைக்குப் பதிலாக குறைந்தபட்சமாக ஆயுள் தண்டனையே வழங்கப்பட்டுள்ளது என்று குற்றம்சாட்டி நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடந்து வருகிறது. முக்கியமாக முபாரக்குக்கு எதிரான புரட்சியின்போது மக்கள் பெருமளவில் கூடி கெய்ரோவில் உள்ள தெஹ்ரி சதுக்கத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் குவிந்துள்ளனர்.



சுமார் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அங்குகூடி முபாரக்குக்கு மரணதண்டனை வழங்க வேண்டுமென போராடி வருகின்றனர். இதே போல நாடு முழுவதிலும் ஏராளமானோர் போராட்டத்தில் குதித்துள்ளனர். அப்போது ஏற்பட்ட வன்முறை, மோதல்களில் 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

முபாரக்கின் மகன்மாரான ஆலா, காமல் ஆகியோர் குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டதும் மக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கில், அவர்கள் குற்றவாளிகள் இல்லையென அறிவிக்கப்பட்டாலும் இப்போதும் தடுப்புக் காவலில்தான் உள்ளனர். ஏனெனில் பங்குச் சந்தையில் முறைகேடு செய்த வழக்கும் அவர்கள் மீது உள்ளது.


எகிப்தில் 30 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆட்சியில் இருந்தவர் முபாரக். கடந்த ஆண்டு மக்கள் புரட்சி வெடித்து, 18 நாள்களில் ஆட்சியை இழந்தார்.

அதிகார துஷ்பிரயோகம், ஊழல், வேலையின்மை, உணவுப் பொருள்களின் விலை உயர்வு, தேர்தல்களில் முறைகேடு போன்ற காரணங்களால் முபாரக் மீது எகிப்து மக்கள் வெறுப்படைந்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் அடித்தால் திருப்பி அடிப்போம்

## ஈரான் கர்ஜிப்பு



எங்கள் மீது இஸ்ரேல் ஏதாவது தாக்குதல் நடத்தினால், அதற்குப் பதிலடியாக இஸ்ரேல் மீது இடி விழுவது போன்ற தாக்குதல்கள் நடத்தப்படும் என ஈரான் நாட்டுத் தலைவரான அயதுல்லா டோலா அலி கொரேனி கூறியுள்ளார்.

ஒரு பொய்யான தகவலை அடிப்படையாகக் கொண்டு, ஈரான் அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபடுகின்றதென சர்வதேச சமூகம் சந்தேகிப்பதாகவும், தங்கள் நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை விதித்தது, தங்கள் மனத்துணிவை மேலும் பலப்படுத்துகின்றது எனவும் அயதுல்லா மேலும் கூறியுள்ளார்.

இதுபற்றி தொலைக் காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அயதுல்லா, ஈரான் அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட்டதற்கான எந்த அடையாளமோ, ஆதாரமோ இல்லாததால், ஈரானுக்கு எல்லா சலுகைகளும் வழங்கப்பட வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக எங்கள் பரம எதிரிகளான அமெரிக்காவும், இஸ்ரேலும் எங்களை அவமதித்து வருகின்றன.

இஸ்ரேலியர்கள், ஈரான் மீது தாக்குதல் நடத்த முனைந்தால், அது இஸ்ரேல் மீது இடியாக விழும். சர்வதேச அரசியல் வட்டாரங்களும், ஊடகங்களும் ஈரானிடம் அணு ஆயுதங்கள் இருக்கின்றன எனவும், ஈரானை ஓர் ஆபத்தான நாடாகவும் சித்திரித்து வருகின்றன.

இது ஒரு பொய்யை அடிப்படையாகக் கொண்டது. இத்தகைய பொய்யான தகவல்களால் அவர்கள் ஈரானுக்கு துரோகம் செய்கின்றனர் எனவும் கூறினார். ஈரான் மீதான பொருளாதாரத் தடையால் ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்துப் பேசிய அயதுல்லா, ஈரான் மக்கள் இதயங்களில் சர்வதேச சமூகம் மீதான கசப்பு மற்றும் வெறுப்புணர்வு ஆழமாகி வருவது மட்டுமே பொருளாதாரத் தடையால் ஏற்பட்டுள்ள தாக்கம் எனவும் குறிப்பிட்டார்.

> ஈரான் அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட்டதற்கான எந்த அடையாளமோ, ஆதாரமோ இல்லாததால், ஈரானுக்கு எல்லா சலுகைகளும் வழங்கப்பட வேண்டும்.

# மேற்கு நாடுகள் சதி செய்கின்றன சிரிய ஜனாதிபதி புலம்பல்



சிரியாவை அழிக்க வெளிநாடுகள் சதி செய்கின்றனள என அந்த நாட்டின் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த மே 7ஆம் திகதி நடைபெற்ற தேர்தலுக்கு பின் முதன் முறையாக அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதி அசாட் மேலும் கூறியதாவது:

சிரியாவில் ஏற்பட்டுள்ள பிரச்சினையில் சர்வதேச நாடுகளின் பங்கு குறித்த விவரம் வெளிப்படையாகத் தெரியவந்துள்ளது. அவர்களது முகமூடி கிழிந்துவிட்டது.

சிரியாவை அழிக்க நிதியுதவி அளித்து வருபவர்களுக்கு, நடந்து முடிந்த தேர்தலின் முடிவு சரியான பதிலடியை அளித்துள்ளது. உள்நாட்டில் நடைபெற்று வரும் மோதலில் உயிரிழந்த இராணுவத்தினர் மற்றும் பொதுமக்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். உயிரிழந்தவர்கள் சிந்திய ரத்தம் வீண்போகாது.

நாம் இப்போது எதிர்கொண்டிருப்பது அரசியல் ரீதியான பிரச்சினை அல்ல; நாட்டை அழிக்க நினைக்கும் சக்திகளின் சதித் திட்டத்தைத்தான்.

வெளிநாட்டுதலையீட்டை வலியுறுத்தும் எதிர்ப்பாளர்களுடன் எந்தவிதமான பேச்சு நடத்தவும் முடியாது. அரசியல் நடைமுறையில் தீவிரவாதத்துக்கு இடமில்லை; நாட்டைக் காக்க தீவிரவாதத்தை ஒழிப்போம். நாட்டின் பாதுகாப்புக்காக பலவற்றை இழந்துள்ளோம் என்றார் அசாட்.

சில அரபு நாடுகளில் ஏற்பட்டு வரும் அரசியல் மாற்றங்கள் குறித்து அவர் குறிப்பிடுகையில், சிரியாவைச் சேர்ந்த பொதுமக்கள் புத்திசாலிகள். மற்ற இடங்களில் நடப்பதை அப்படியே பின்பற்ற விரும்பமாட்டார்கள் என்றார்.

கடந்த 15 மாதங்களாக சிரியாவில் நிகழ்ந்துவரும் வன்முறையை முடிவுக்குக் கொண்டு வருமாறு ஐக்கிய நாடுகள் சபையை அரபு நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இதை ஏற்று அமைதித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த ஐ.நா. முயற்சித்து வருகிறது. இந்த நிலையில், அசாட் சிரியாவுக்கு எதிராக வெளிநாட்டு சதி என்று குற்றம்சாட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# காதலை எதிர்த்ததால் 5 ஆண்டு சிறை

பிரிட்டனில் காதலை எதிர்க்கும் பெற்றோருக்கு ஐந்தாண்டு கால சிறைத் தண்டனை விதிக்கப்படும் வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது.

பிரிட்டனில் வாழும் சில வகை இனச் சமூகங்களில் நிலவி வரும் மனிதாபிமானமற்ற மரபுகளைத் தடுக்கும் நோக்கிலேயே இந்தப் புதிய சட்டம் கொண்டு வரப்படவுள்ளது. பிள்ளைகளின் விருப்பத்துக்கு மாறாகக் கட்டாயத் திருமணம் செய்து கொள்ளுமாறு பலவந்தப்படுத்தும் பெற்றோருக்கு இவ்வாறு தண்டனை விதிக்கப்பட உள்ளது.

இந்தப் புதிய சட்டம் தொடர்பில் பிரதமர் டேவிட் கமரூன் விரைவில் அறிவிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிள்ளைகளின் விருப்பத்துக்கு மாறாகக் கட்டாயத் திருமணம் செய்து வைக்கும் நடவடிக்கையானது குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் தண்டனை விதிக்கப் படக் கூடிய குற்றச் செயலாகக் கருதப்படுகின்றது.

பிரிட்டனில் ஆண்டு தோறும் 5000 முதல் 8000 வரையிலான கட்டாயத் திருமணங்கள் நடைபெற்று வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பங்களா தேஷ், ஈராக், வட கிழக்கு ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்களே அதிக எவில் பிள்ளைகளுக்குக் கட்டாயத் திருமணம் செய்து வைக்கின்றனர். சில பெற்றோர் காதல் தொடர்புகளைப் பேணும் பிள்ளைகளை கௌரவக் கொலை செய்யும் சந்தர்ப்பங்களும் பதி வாகியுள்ளன.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.கு.பிறேமகாந்தன்
(S.L.E.A.S.I)
இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு I இற்கு பதவி உயர்வு பெற்ற எமது வலயக் கல்விப் பணிப்பாளர்
திரு.கு.பிறேமகாந்தன் அவர்கள்
மேலும் மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று கல்வி உலகிற்குத் தம் பணி வழங்கிட வேண்டுமென உளம் மகிழ வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்:–
சகல உத்தியோகத்தர்களும்.
வலயக் கல்வி அலுவலகம்,
தென்மராட்சி, சாவகச்சேரி.
(18838) (2-9-7)

## சட்டறிங் அடித்துக் கொடுக்கப்படும்

கட்டடத்திற்கு சட்டறிங் உடன் அடித்துக் கொடுக்கப்படும். ஒரு ஸ்குயர் ரூபா 7000/= மட்டும்

தொடர்புகளுக்கு : 077 8167864

(18955)(6-7-8)

## காணி விற்பனைக்கு

இணுவில் புகையிரத நிலையத்திற்கு முன்பாகவும் இராமநாதன் நுண்கலை பீடத்திற்கு அருகாகவும் உள்ள 7 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 4734953

(18931)(-7-8)



வரணி - சிட்டிவேரம்
## அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலய
## வருடாந்த அலங்கார உற்சவம் - 2012

3 ஆம் திருவிழா நாளை (06.06.2012) புதன்கிழமை
பிரபல தவில் நாதஸ்வர வித்துவான்கள் பங்கு பற்றும் மேளக் கச்சேரிகளைத் தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட முத்துச் சப்பரத்தில் கண்ணகை அம்பாள் வீதியுலா வருவார். அதனைத் தொடர்ந்து இந்தியத் திரைப்படப் **பாடகர்கள் நித்திய ஸ்ரீ மகாதேவன் குழுவினர்** இணைந்து வழங்கும் இன்னிசை விருந்து இடம்பெறும்.
அடியார்கள் மேற்படி நிகழ்வுகளைக் கண்டுகளித்து அம்பாளின் தெய்வீக அருளைப் பெற்றுய்யுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி/451) (2.6.7) **3 ஆம் திருவிழா உபயகாரர்.**

75 ஆவது பிறந்த நாள் வாழ்த்தும்
50 ஆவது திருமண நாள் வாழ்த்தும்



HAPPY BIRTH DAY
05.06.2012
நயினை
உயர்திரு விசுவலிங்கம் சபாநாதன்
(சமாதான நீதிவான், இறைபணியாளர்)
அவர்களையும்

அவர்களது அன்புத்துணைவியார்
திருமதி தவமணி சபாநாதன்
(ஓய்வு நிலை அதிபர்) அவர்களையும்

பல்லாண்டு பல்லாண்டு பணிகள் பல செய்து வாழ்க என வாழ்த்துகின்றோம்

குளப்பிட்டி றோட்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்
T.P.: 077 1130032
(சி/429)(6-7-8)

வாழ்த்துபவர்கள்: அன்புச்சகோதரர்கள், சகோதரி, மைத்துனர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள்

## பாராட்டி வாழ்த்து



திருமண பந்தத்தில் இணைந்து 30 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து இன்று (05.06.2012)
அக மகிழும் எம் பெற்றோர்
திரு.க.அருள்லிங்கம் (J.P)
(ஓய்வுபெற்ற, சீமெந்துக் கூட்டு ஸ்தாபன உத்தியோகத்தர், காங்கேசன்துறை)
திருமதி அ.இராசபூபதி
தம்பதியரை மேலும் பல ஆண்டுகள் இந்த வையகம் போற்ற வாழ வேண்டும் என எல்லாம் வல்ல கீரிமலை நகுலேஸ்வரப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்:–
பிள்ளைகள், மருமகன்:
திருமதி தவக்குமார் நித்தியா
அ.நிரோஜா, அ.அகல்யா, அ.நிதர்சன்
தேவாலய வீதி, சங்கானை.
021 4905670 (18934) (2-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலைகளுக்கு விடை கொடுங்கள்

(26)

நாம் முதலில் மாற்றிக் கொள்ள வேண்டியது நம்மைத் தான். அடுத்தவரை மாற்ற முனையாதீர்கள். அவர்கள் மாறவில்லையே என்று கவலைப்படாதீர்கள். மாற்றம் என்பது முதலில் நம்மிடம் இருந்தே தொடங்க வேண்டும்.

ஒரு மனிதன் ரொம்பவே கவலைக்குள்ளாகிவிட்டிருந் தான். கடவுளிடம் ''பகவானே என்னுடைய அண்டை அய லாருக்கு என் மீது பொறாமை. அடிக்கடி ஏதாவது காரணத்தை வைத்துக் கொண்டு என்னிடம் சண்டைக்கு நிற்கிறார்கள். அவர்களுடைய குணத்தை மாற்றிவிடுங்கள்''

''என் மேலதிகாரி எடுத்ததற்கெல்லாம் என்னிடம் குறை கண்டு பிடிக்கிறார். அவருடைய குறைகாணும் போக்கை மாற்றி விடுங்கள்''

''என் மனைவி நான் சொல்வதைக் கேட்க மாட்டேன் என் கிறாள். அவளை இணக்க சுபாவம் உள்ளவளாக்குங்கள்.''

''எனக்குப் பிறந்த பிள்ளைகள் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கிறார்கள். அவர்களை என்னை மதித்து கீழ்ப்படி கிறவர்களாக மாற்றுங்கள்.''

''இவர்களையெல்லாம் மாற்றி என் கவலையைப் போக்கிவிடுங்கள்'' என்று வேண்டிக் கொண்டான்.

கடவுள் சொன்னார் ''உனக்காக இத்தனை பேரை மாற்ற வேண்டுமா? நீ உன்னை மாற்றிக் கொண்டாலே உன் கவ லைகள் தீர்ந்துவிடும்'' என்று. நீங்கள் முன்னேற விரும்பி னால் மாறித்தான் ஆகவேண்டும். நீங்கள் மாறத் தயாராக இருந்தால் நடப்புகள் உங்களைக் கவலைக்குள்ளாக்காது.

நீங்கள் தொழிலில் வெற்றிபெற விரும்பினால் உங்கள் அணுகுமுறைகளை, செயல் முறைகளை மாற்றுங்கள். புதிய உத்திகளைப் புகுத்துங்கள். உங்கள் தொழிலில் பொருள் களை உற்பத்தி செய்வதாயின் மக்களின் எதிர்பார்ப்புகளுக் கேற்ப பொருளின் பயன்பாடுகளை அதிகரியுங்கள்.

உங்கள் அலுவல் சிறந்த முறையில் நடக்க வேண்டு மெனில் ஊழியர்களின் மனோபாவத்தை மாற்றுங்கள். (ஊழியர்களை மாற்ற வேண்டாம்)

நான் மாறத் தயாரில்லை என்பவர் எதிர்மறை மனோ பாவம் கொண்டவர். அவர் தனக்கு மட்டுமல்ல சமூகத் துக்கே விரோதியாகி விடுவார். மாற்றங்களை வரவேற்றுக் கொண்டு தன்னையும் மாற்றிக் கொள்பவரே விரும்பத் தக்கவர்.

**முதுமை வரும்போது**

முதுமை குறித்த கவலை தவிர்க்க முடியாததுதான். ''வாழ்க்கை ஏழு கட்டங்களைக் கொண்டது'' என்பார் ஷேக்ஸ்பியர். எல்லாக் கட்டங்களிலும் கவலை உண்டு. மகிழ்ச்சி உண்டு. ஆனால் ஒவ்வொரு கட்டத்துக்கும் ஏற்ப கவலையின் தன்மையும் மகிழ்ச்சியின் தன்மையும் வேறுபடும்.

குழந்தைப் பருவத்தில் தாய் அருகில் இல்லை என்றால் கவலைப்படுவோம். இளமையில் வெற்றி, சாதனை குறித்து கவலைகள் இருக்கும். நடுத்தர வயதில் முதுமை குறித்தும் முதுமையில் நோய்கள் பற்றியும் கவலை இருக்கும். மகிழ்ச் சியும் அப்படித்தான்.

குழந்தைப் பருவத்தில் பொம்மைகளிலும் விளையாட் டிலும் மகிழ்ச்சி. இளமையில் காதல் மகிழ்ச்சியளிக்கும். நடுத்தர வயதில் குழந்தைகளால் மகிழ்ச்சி. முதுமையில் வாழ்ந்த காலத்தை அசைபோடுவோம். நோய், மரணம் பற்றிய அச்சத்தில் மகிழ்ச்சி சரிவுக்குள்ளாகும்.

வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்துக்கும் ஏற்ப நம்மை நாம் மாற்றிக் கொண்டால் கவலையில்லை.

ஓர் இளைஞன் குழந்தைத்தனமாக நடந்து கொள்வதும் ஒரு கிழவர் தன்னை இளைஞனாகக் கருதிக் கொண்டு ரொமான்ஸ் செய்வதும் மற்றவர்களைக் கவலைக்குள் ளாக்கிவிடும்.

முதுமை வாழ்வின் இயல்புகளில் ஒன்று. அதலால் நமக்கு வயதாகிக் கொண்டிருக்கிறதே என்கிற கவலையில்லாமல் அதனை இயல்பாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மனிதத் தொடர்புகளில் எத்தனையோ மாற்றங்கள். குடும்பத்திலும் சிநேக வட்டத்திலும் சமூகத்திலும் மதிப் புகள் மாறிக் கொண்டேயிருக்க நாம் மட்டும் மாறாதி ருந்தால் எப்படி? நம்மைச் சுற்றியிருப்பவர்களோடும் சூழ்நிலைகளோடும் நாம் பொருந்திக் கொண்டுவிட்டால் நம்முடைய கவலைகள் வெகுவாய்க் குறைந்துவிடும்.

தொழிலிலும் அலுவலகத்திலும் வேலை முறை மாறிக் கொண்டிருக்கிறது. குழுவாகச் செயற்படுதல், அதிகாரப் பகிர்வு, ஒட்டுமொத்த தர நிர்வாகம், பன்முகத்திறன் என்று பல மாற்றங்கள். குறிப்பாக தொழில்நுட்ப மாற்றம். மாற்றங்களைக் கண்டு மருட்சி அடையாதீர்கள். உங்களை மாற்றிக் கொள்ளுங்கள். எல்லாமே எளிதாகிவிடும்.

**மகிழ்ச்சியைத் தேர்ந்தெடுங்கள்**

மகிழ்ச்சி பொருளில் இல்லை. நம்முடைய நோக்கு முறையில், கண்டுணர்தலில் இருக்கிறது.

மகிழ்ச்சி நிகழ்வில் இல்லை. நடப்புகள் தொடர்பான நம்முடைய எதிர்வினையில் இருக்கிறது. மகிழ்ச்சி அல்லது வருத்தத்தை நாம் தான் தெரிவு செய்து கொள்கிறோம்.

மகிழ்ச்சியும், வருத்தமும் நம்முடைய எண்ணத்தில் இருந்தே தொடங்குகின்றன. நம் எண்ணத்தை, மனநிலையை நாம் தான் தேர்ந்து கொள்கிறோம். வேறொருவரல்லர்.

ஒரு மோசமான எண்ணம், மோசமான செயலையும் செயலின் விளைவையும் தந்து விடும். நாம் இப்படித்தான் கசப்பான அனுபவங்களுக்குள்ளாவது.

-சி.எஸ்.தேவநாதன் (தொடரும்)

# பிள்ளைகளின் கற்றலை முன்னிலைப்படுத்தி வழிகாட்டலை பெற்றோர் வழங்க வேண்டும்

## குற்றத் தடுப்பு பொலிஸ் அதிகாரி கருத்து

யாழ்ப்பாணம், ஜூன் 5

பெற்றோர்கள் பிள்ளைகளின் கற்றலை முன்னிலைப்படுத்தி அவர்களின் கற்றலுக்குத் தேவை யான வழிகாட்டலை வழங்க வேண்டும்.

பிள்ளைகளின் எதிர்காலம் சிறந்ததாக அமைய இந்தக் கற்றல் நடவடிக்கைகளே கைகொடுக்கும் என மானிப்பாய் பொலிஸ் பிரிவின் குற்றத்தடுப்பு பொலிஸ் அதிகாரி ஐ.பி.திலீப்டி.சில்வா தெரிவித்தார்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவின் ஏற்பாட்டில் சாவற்கட்டுப் பிரதே சத்தில் அண்மையில் இடம்பெற்ற நடமாடும் சேவை நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற போரின் பின்னர் பொதுமக்களின் நன்மை கருதி பல அபிவிருத்தித் திட்டங் கள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. இந்த அபிவிருத்திப் பணி களில் இனமத வேறுபாடின்றி அனைவரும் ஒன்றிணைந்து சேவை யாற்றி வருகின்றனர்.

போரின் போது அழிவடைந்த, இழந்ததை பொதுமக்களுக்கு மீளப்பெற்றுக் கொடுக்கும் நோக் குடன் இந்த அபிவிருத்திப் பணி கள் இடம்பெறுகின்றன. இவை மக் களுக்கு பயன்தரக் கூடியதாக இருக்கும். இவற்றில் ஒரு செயல் திட்டமாகவே இந்த நடமாடும் சேவையை நடத்திக் கொண்டிருக் கிறோம்.

மாணவர்கள் சிறந்த கல்வி யைப் பெறவேண்டும் என்பதே இதன் நோக்கமாக உள்ளது. இதனைப் பெற்றோர் உணர்ந்து கொள்ள வேண்டும். தமது குடும்ப வறுமைக்கு அப்பால் மாணவர் களின் கற்றலுக்கு வழிகாட்ட வேண்டும்.

நல்ல நல்ல சிந்தனைகளை அவர்கள் மனதில் உருவாக்கி நற்பிரஜைகளாக வாழ வழிகாட்ட வேண்டும் - என்றார். (எ-14-100)

# பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

நூலக வலுவூட்டல் செயற் திட்டத்தின் கீழ் வலிகாமம் வடக்கு பிரதேசசபை நடத்திய உலக புத்தக தினமும் நூலக வாரமும் தொடர்பான பொது அறிவுப் போட்டியில் வெற்றி யீட்டியவர்களின் பெயர் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

**மேற்பிரிவு**

1ஆம் இடம்-சொ.தருமதன்- உதய சூரியன் ச.ச.நிலையம், 2ஆம் இடம்-செ.டனுசியா- மல்லாகம் சன்மார்க்க ச.ச. நிலையம், 3ஆம் இடம்-ஜெ.நன் தொயா-மல்லாகம் சன்மார்க்க ச.ச.நிலையம்.

**ஆறுதல் பரிசு**

மு.தயாபரன்-கணேசா ச.ச. நிலையம், த.ஜெயவாணன்- உதயசூரியன் ச.ச.நிலையம், கு.கீர்த்தனா-அளவெட்டி கிழக்கு முற்போக்கு இளைய நிலா ச.ச.நிலையம், ஆ.கடம் பன்-இளையநிலா ச.ச.நிலை யம், வி.நஜீதரன்-இளைஞர் ச.ச.நிலையம், ப.பிரதர்சன்- அளவெட்டி கிழக்கு முற்போக்கு இளைஞர் ச.ச.நிலையம், யு. கிரிசா-கலைவாணி ச.ச.நிலை யம், ஜெ.ஜெகதீஸ்வரி-கூவில் சிவானந்தா ச.ச.நிலையம், சோ.வனஜா-கணேசா ச.ச.நிலையம், ச.வசந்தகுமார்- துர்க்கா ச.ச.நிலையம்.

**கீழ்ப்பிரிவு**

1ஆம் இடம்-த.கோபிகன்- கலைவாணி ச.ச.நிலையம், 2ஆம் இடம்-3 பேர்-யோ.டியோன்- மல்லாகம் சன்மார்க்க ச.ச. நிலை யம், சி.ஜெயதரன்-இளையநிலா ச.ச.நிலையம், சிவகஜன்- அள. கிழ.முற்.இளை.ச.ச.நிலையம்.

**ஆறுதல் பரிசு**

சி.தாகீசன்-கலைவாணி ச.ச. நிலையம், பா.சாம்பவி- உதய சூரியன் ச.ச.நிலையம், வை.அஸ் வினி-அறிவொளி ச.ச.நிலையம், ச.சஜனிக்கா- காந்திஜி ச.ச.நிலை யம், தி.மணிமோகன்-கணேசா ச.ச.நிலையம், ஸ்ரீ.திலக்ஷி- கணேசா ச.ச.நிலையம், ஜே.பபி ஜனா- கூவில் சிவானந்தா ச.ச. நிலையம், வி.கௌசிகா-கூவில் சிவாணந்தா ச.ச.நிலையம், ம.நிராஜ்- முற்போக்கு இளைஞர் ச.ச.நிலை யம், கே.விஸ்ணுகா-முற்போக்கு இளைஞர் ச.ச.நிலையம், அ.திலக் சனா-முற்போக்கு இளைஞர் ச.ச.நிலையம்.

(எ-5)

## புனித ஹென்றியரசர் முதலாமிடம்

பண்டத்தரிப்பு, ஜூன் 5

மாகாண மட்டத் தமிழ்த் தினப் போட் டிகளின் நாடகப் போட்டியில் இள வாலை புனித ஹென்றியரசர் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது. இந்தப் போட்டி கடந்த சனிக்கிழமை வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் வடமாகா ணத்தைச் சேர்ந்த 5 மாவட்டங்களி லிருந்தும் மாவட்ட மட்டத்தில் முதலி டம் பெற்ற பாடசாலை நாடகக் குழுக் கள் பங்குபற்றியிருந்தன.

இதில் இளவாலை புனித ஹென் றியரசர் கல்லூரி முதலிடத்தையும், மன் னார் சித்திவிநாயகர் தேசிய பாடசாலை இரண்டாம் இடத்தையும், முல்லைத் தீவு புதுக்குடியிருப்பு மகாவித்தியா லயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (எ-130)

## மாணவர்கள் கௌரவிப்பு

அரியாலை அபிவிருத்திச் சங்கத் தின் ஏற்பாட்டில் க.பொ.த.(சா.த) பரீட் சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியா லயத்தில் அபிவிருத்திச் சங்கத் தலை வர் எஸ்.ரி. பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சித்திய டைந்த 11 மாணவர்கள் கௌரவிக்கப் பட்டனர். (எ-135)

# ஆயிரக்கணக்கான குடும்பங்களின் ஒளிவிளக்கு சமுர்த்தித் திட்டம்

## யாழ். மாவட்ட இணைப்பாளர் தெரிவிப்பு

தென்மராட்சி,ஜூன் 5

சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டமா னது பலநோக்குத் தன்மைகளுடன் ஏழை மக்களுக்கு ஒளி கொடுக்கும் செயற் திட்டமாக இயங்கி வருகி றது.

இந்தத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து வேலைத் திட்டங்களும் அதன் அங்கத்தவர்களின் முழுமையான பங்களிப்புடனேயே மேற்கொள் ளப்படுகின்றன. சமுர்த்தி சமூக மன்றங்களினால் மேற்கொள் ளப்பட்டு வரும் நலனோம்பு திட்டங்களால் பயன்பெறுவோர் அதன் அங்கத்தவர்களே என யாழ்.மாவட்ட சமுர்த்தி இணைப் பாளர் ஆ.இரகுநாதன் தெரிவித்தார்.

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாணவர் களுக்கான புலமைப் பரிசில் வழங் கும் நிகழ்வில் கலந்துகொண்டு இரகுநாதன் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் அங்கு மேலும் தெரி வித்ததாவது:-

**இந்தப் பணி தொடர மாணவர்கள் வழிகாட்டியாக திகழ வேண்டும்.**

வறுமையில் வாடிய மக்களுக்கு விடிவெள்ளியாக திகழ, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவால் உரு வாக்கப்பட்ட சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம், இன்று ஆயிரக் கணக்கான குடும்பங்களின் ஒளி விளக்காகக் திகழ்கிறது.

அவர்களது விடா முயற்சிக்கும், உழைப்புக்கும் ஊதியமாக கிடைப் பதை சிறுகச் சிறுகச் சேமித்து அதன் மூலம் சுயதொழில் உதவிக் கடன்களைப் பெற்று பலரின் வாழ்வாதார நிலை உயர்ந்துள்ள தைக் காணலாம்.

நாட்டில் இன்றைய காலத்தில் ஆயிரக்கணக்கானோர் மது மற்றும் புகைத்தல் போன்ற போதைப் பழக்கங்களுக்கு அடிமையான நிலையில் வாழ்கின்றனர். புகைத் தல் எதிர்ப்பு தினத்தை மையமாக வைத்து மே 31 ஆம் திகதி தொடக் கம் ஜூன் 10 ஆம் திகதி வரை புகைத்தல் எதிர்ப்பு கொடிவாரமாக பிரகடனப்படுத்தப்பட்டு அந்த வாரத்தில் உண்டியல் மூலம் திரட் டப்படும் நிதியே மாணவர்களின் கல்வித் தேவைக்குப் பயன்படு கிறது.

கல்வியில் சிறந்து விளங்க பயன்படுத்தப்படும் இந்த நிதியின் மூலம் திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டியது அவசிய மாகும். இது இங்கு புலமைப் பரி சில் நிதி பெறும் அனைவரினதும் கடமையுமாகும்.

இந்தப் பணி தொடர மாணவர் கள் வழிகாட்டியாக திகழ வேண் டும். கல்வியுடன் நின்றுவிடாது மது மற்றும் புகைத்தல் போன்ற போதைப் பொருள்களுக்கு அடி மையானவர்களை அதில் இருந்து மீட்டு சமூகத்தில் ஒன்றிணைக் கவும் பாடுபட வேண்டும் - என்றார். (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் ; 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# கொல்லைக்குப் போகும் சுதந்திரத்தையாவது.....

2009 மே மாதத்தில் விடுதலைக்கான தமிழர்களின் ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு வந்தபோது இலங்கை என்ற நாட்டில் அமைதி திரும்பும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. அந்த எதிர்ப்பார்புடனேயே பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் இரத்தம் வன்னி மண்ணெங்கும் பரவிப் பாய்ந்தபடி இருக்கையில் இந்தியாவும் ஏனைய நாடுகளும் அதனைக் கண்டும் காணாமல் இருந்தன.

ஆனால் எதிர்பார்த்தபடி எதுவும் நடக்கவில்லை. இலங்கை அரசு தனது பௌத்த சிங்கள மேலாதிக்கத்தை வடக்கு கிழக்குக்கு விரிவுபடுத்துவதற்குத் தான் போர் முடிவுக்கு வந்தமை உதவியது.

வடக்கு கிழக்கில் பௌத்த சிங்கள மேலாதிக்க விரிவுபடுத்தலுக்காக இராணுவத்தினரைத் தக்க வைத்திருக்க வேண்டிய தேவை இலங்கை அரசுக்கு அத்தியாவசியமானது. எனவேதான் போர் முடிவுக்குப் பின்னரும் பெரும் எண்ணிக்கையிலான படையினரை அரசு தமிழர் நிலங்களில் நிறுத்தியிருக்கிறது.

கடந்த மூன்று வருடங்களாக வடக்குக் கிழக்கில் உள்ள அளவுக்கு அதிகமான படையினரைக் குறைக்கும்படி தமிழ் மக்கள் காட்டுக் கத்தல் கத்தியிருக்கிறார்கள். ஆனால் அது எவரது காதிலும் விழவில்லை.

இப்போது தெற்கில் சிங்களக் கட்சிகளிடம் இருந்தும் இது தொடர்பான குரல்கள் வெளிக்கிளம்பியுள்ளன. ஜே.வி.பியின் மாற்றுக் குழு மற்றும் ஜே.வி.பி. போன்ற ஒரு சில கட்சிகள் முன்னரும் இது தொடர்பில் குரல் கொடுத்திருந்தன. எனினும் அதுவும் அரசால் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

இப்போது கூட்டு எதிர்க் கட்சிகள் இணைந்து இந்த விடயத்தை கையில் எடுத்திருக்கின்றன. வடக்கு – கிழக்கில் படையினரின் அளவுக்கு மீறிய குவிப்பு மக்களின் இயல்பு வாழ்க்கையைக் குலைக்கிறது என்று அவை குரல் எழுப்பியுள்ளன. ஒருபடி மேலே போய், ஹிட்லரின் ஆட்சிக் காலத்தில்கூட இப்படி நடந்ததில்லை என்று அவை வர்ணித்துள்ளன. ''வடக்கில் சந்திக்குச் சந்தி இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஹிட்லரின் ஆட்சிக் காலத்தில்கூட இவ்வளவு இராணுவ முகாம்கள் இருந்தனவா என்பது சந்தேகம். வடக்கு மக்களின் அன்றாட வாழ்க்கையில் இராணுவத்தின் தலையீடு அதிகமாக இருப்பதால் மக்கள் நிம்மதியாக வாழ முடியாதுள்ளனர்'' என்று கூட்டு எதிர்க் கட்சிகள் கூறியுள்ளன.

மக்களின் இயல்பு வாழ்க்கையில் இராணுவத்தின் தலையீடு என்பது 'பூப்புனித நீராட்டு விழா'வுக்கும் அனுமதி பெற வேண்டும் என்ற நிலைவரைக்கும் செல்கிறது என்பதை இந்த எதிர்க் கட்சிகளின் கூட்டு புரிந்து கொண்டிருக்கிறதா என்பது தெரியவில்லை. ஆனாலும் சிங்களப் பெரும்பான்மை மக்களின் ஆதரவைக் கொண்டிருக்கக் கூடிய கட்சிகள் கூடி தமிழர்களின் பரிதாப நிலையை ஏற்றுக் கொண்டிருப்பது பாராட்டுக்குரியதே.

அதேவேளை, சுமார் ஒரு வடத்துக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் ஆணைக்குவின் ஏற்பாட்டில் நடந்த கூட்டத்தில் பாதிரியார் ஒருவர் கூறிய, ''மலசலகூடத்திற்குப் போவதற்கும் இனி இராணுவத்தின் அனுமதி பெறவேண்டிய நிலை வரும்'' என்ற கூற்று தவிர்க்க முடியாமல் ஞாபகத்துக்கு வருகிறது. அந்த நிலை வராமலிருக்கவாவது இந்தக் கட்சிகள் உதவினால் நல்லது.

## எம் சந்திகளுக்கும் பூமி

எம்மைச் சூழவுள்ள உயிருள்ள உயிரற்ற மூலக் கூறுகளைக் கொண்டமைந்ததே சூழல் எனப்படும். இவ்வாறு வரையறுக்கப்படும் சூழலுக்கு இன்று சர்வதேச ரீதியில் மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளமைக்கு காரணம் மனித மற்றும் உயிரினங்கிகளின் வாழ்நாளை நிர்ணயிக்கும் முக்கிய அம்சம் சூழலாகிவிட்டது. தூய்மையான சுற்றாடல் இல்லையேல் மனிதன் சுவாசிப்பதற்குத் தூய சுவாசக் காற்றின்றி இறக்க வேண்டிய நிலை ஏற்படும்.

சூழல் ஆதிக்கவாத கொள்கைகளுக்கமைய மனிதன் இயற்கைச் சூழலிற்கு அஞ்சிப்பயந்து கடல், நதி, பூமி, ஆகாயம் போன்றவற்றை தெய்வமாக வழிபட்ட காலம் ஒன்றிருந்தது.ஆனால் இன்று மனிதன் நவீன விஞ்ஞான தொழில்நுட்ப உலகை நோக்கி நகரமுற்பட்ட தனால் அதிகரிக்கும் மனித சனத்தொகையின் தேவைகளை நிவர்த்தி செய்ய சூழலை அழிக்கத் தலைப்பட்டுள்ளான். நகரமயமாக்கல், அபிவிருத்தி போன்றவற்றுக்காக, சூழல் ஆதிக்கவாத கொள்கையில் இருந்து விடுபட்டு தனது தேவைகளை இயற்கைச் சூழலில் இருந்து பெற்றுக்கொள்ளமுற்படுகின்றான். ''மானிட ஆதிக்கவாதக் கொள்கை''யின் கீழ் இயற்கை வளங்களின் மீதான மனித தலையீடுகள் ஆரம்பித்த நாள் முதல் இயற்கைச் சூழலுக்கும் மனிதனுக்கும் இடையிலான முரண்பாடுகள் வளர ஆரம்பித்துவிட்டன.

படிப்படியாக வளர்ச்சியடைந்த மனித செயற்பாடுகளான அணுவாயுத உற்பத்தி, அணுஉலை அனர்த்தங்கள், பாரியளவிலான காடழிப்புகள், இரசாயன ஆயுதப் பயன்பாடுகள், கைத்தொழில்சாலைகள் மூலமான கழிவு வெளியேற்றங்கள், தொழிற்சாலை அனர்த்தங்கள், எண்ணெய்க்கசிவுகள், அபிவிருத்திக்கான வள அகழ்வுகள் மற்றும் காபன்வெளியேற்றம் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக மனிதனுக்கு நேரடியான மற்றும் மறைமுகமான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. ஓசோன் படையில் ஏற்பட்ட துளையினால் புறஊதாக் கதிர்களின் வெளியேற்றம், பனிப் பாறைகள் உருகுதல், கடல் நீர் மட்டம் அதிகரித்தல், சிறிய தீவுகள் நீரில் அமிழும் அபாயம், தரைக்கீழ் நீர் மாசடைதல், புதிய வகை வியாதிகள் ஏற்படல், சூழல் சமநிலை பாதிக்கப்படல், இயற்கை அனர்த்தம் என மனிதச் சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இத்தகைய பாதிப்புக்களைக் கண்டு விழிப்படைந்த மனிதகுலம் இந்தப் பாதிப்புக்களில் இருந்து விடுபடவும், பாதிப்புக்களை குறைப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. மனிதனால் மாற்றமடைந்து வரும் இயற்கையினை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவர இன்று கடும் போராட்டம் சர்வதேச, தேசிய ரீதியில் இடம் பெற்று வருகின்றது. இதற்காக றியோடி, ஜெனிவா போன்ற இடங்களில் உச்சி மாநாடுகள் நடைபெற்று வந்துள்ளன. இவற்றின் மூலம் இயற்கைப் பாதுகாப்புச் சட்டங்களை நடைமுறைப்படுத்தல், கொள்கைப் பிரகடனங்களை முன்வைத்தல் எனப் பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்காக பல சர்வதேச அமைப்புக்களும் இயங்கி வருகின்றன.

எழில்கொஞ்சும் எமது அழகிய குட்டித் தீவான இலங்கையில் கூட போரின் பின்னரான அபிவிருத்தியினை நோக்காகக் கொண்டு இயற்கை வளங்கள் அகழ்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இவை அபிவிருத்திக்கும் இயற்கைச் சூழலிற்கும் இடையே நேர் எதிரான தொடர்பை ஏற்படுத்துகின்றன. அபிவிருத்தியானது இயற்கை வளங்களில் தங்கி இருப்பினும் கண்மூடித்தனமாகவும், குறுகிய கால இலாப நோக்கத்திலும் சட்டவிரோதமாகவும் செயற்படுவது சுற்றாடல் ஆர்வலர்களின் கவனத்தினை ஈர்த்தது மட்டுமின்றி மிகுந்த கவலையையும் ஏற்படுத்தி உள்ளது. குறிப்பாக வடபகுதியில் இன்று வேகமாக வீதி அபிவிருத்தி இடம்பெற்று வருகின்ற அதே வேளை இதற்கான வளங்களும் அதிக அளவில் அகழ்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. சட்ட விரோதமாக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிகள் இன்றி இடம்பெறும் அகழ்வினால் சுற்றாடல் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

சுற்றாடல் பாதுகாப்பில் அனைவரின் கவனத்தினை ஈர்க்கும் பொருட்டு சர்வதேச ரீதியில் 'ஜூன் 5' ஐ சர்வதேச சுற்றாடல் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதன் நோக்கம் அனைத்து வித சுற்றாடல் அழிப்பு நடவடிக்கைகளையும் தடுத்து நிறுத்துவது ஆகும். இப்போது எஞ்சியிருக்கும் சூழல் சார் விடயங்களை எதிர்கால சந்ததியினருக்கும் வழங்குதல் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**எஸ்.விஜயகுமார்,**
*சுற்றாடல் உத்தியோகத்தர்*



ஐக்கிய நாடுகள் அமைப்பு, கடந்த 1974ஆம் ஆண்டு முதல் ஜூன் 5ஆம் திகதியை பல்வேறு கருத்துக்களை வலியுறுத்தி கொண்டாடியுள்ளது. அதன் விபரம் வருமாறு

1974 - ஒரே ஒரு பூமி
1975 - மனித வாழ்விடம்
1976 - தண்ணீர் : வாழ்க்கையின் ஆதாரம்
1977 - ஓசோன் படலம், சுற்றுச் சூழல் முக்கியத்துவம் : நிலம் இழப்பு மற்றும் மண் சீர்கேடு
1978 - இழப்பில்லாமல் வளர்ச்சி
1979 - நம் குழந்தைகளுக்கு ஒரே எதிர்காலம் : இழப்பில்லாமல் வளர்ச்சி
1980 - பத்தாண்டுக்கான புதிய சவால் : இழப்பில்லாமல் வளர்ச்சி
1981 - நிலத்தடி நீர்: மனித உணவுப் பழக்கத்தில் நச்சு வேதிப் பொருள்கள்
1982 - பத்தாண்டுகளுக்குப் பின்னர் சுற்றுச் சூழல் முக்கியத்துவத்தை புதுப்பித்தல்
1983 - நச்சுக் கழிவு நிர்வாகம் மற்றும் அகற்றுதல் : இரசாயன மழை மற்றும் ஆற்றல்
1984 - பாலைவன மேலாண்மை
1985 - இளமை : மக்கள் தொகை மற்றும் சுற்றுச்சூழல்
1986 - அமைதிக்கு ஒரு மரம்
1987 - சுற்றுச் சூழல் மற்றும் வசிப்பிடம் : ஒரு கூரையையும் தாண்டி
1988 - சுற்றுச் சூழல் முதலேனில் மேம்பாடு தழைக்கும்
1989 - புவி வெப்பமயமாதல், புவி எச்சரிக்கை
1990 - குழந்தைகள் மற்றும் சுற்றுச் சூழல்
1991 - வானிலை மாற்றம். தேவை உலகளாவிய ஒற்றுமை
1992 - ஒரே பூமி. பராமரிப்பு மற்றும் பங்களிப்பு
1993 - ஏழ்மை மற்றும் சுற்றுச் சூழல் - வளையத்தை உடைத்தல்
1994 - ஒரு பூமி, ஒரு குடும்பம்
1995 - மக்களாகிய நாம் : உலக சுற்றுச் சூழலுக்கு ஒன்றுபடுவோம்
1996 - நம் பூமி, நம் வசிப்பிடம், நம் வீடு
1997 - பூமியில் வாழ்க்கைக்கு
1998 - பூமியில் வாழ்க்கைக்காகக் கடல்களை பாதுகாப்போம்
1999 - நம் பூமி - நம் எதிர்காலம், காப்போம்
2000 - சுற்றுச்சூழல் நூற்றாண்டு - செயல்படும் நேரம்
2001 - வாழ்க்கையை இணைப்போம்
2002 - பூமிக்கு ஒரு வாய்ப்பு
2003 - தண்ணீர் - அதற்காக இரண்டு மில்லியன் மக்கள் இறப்பு
2004 - தேவை ! கடல்கள் மற்றும் சமுத்திரங்கள் - இறப்பு அல்லது வாழ்வு ?
2005 - பசுமை நகரங்கள் - கிரகத்திற்காக திட்டமிடுவோம்
2006 - பாலைவனங்கள் மற்றும் பாலைவனமயமாக்கல் - தரிசு நிலங்களை கைவிடாதீர்
2007 - உருகும் பனி - ஒரு சூடான விஷயம்
2008 - பழக்கத்தை உதறுவோம் - குறைந்த காபன் பொருளாதாரத்தை நோக்கி
2009 - வானிலை சவாலை எதிர்கொள்ள ஒன்றுபடுவோம்
2010 - பல இனங்கள்.ஒரே கிரகம்.ஒரே எதிர்காலம்
2011 - காடுகள். உங்கள் சேவைகளின் இருப்பிடம்
2012 - பசுமைப் பொருளாதாரம்.உங்களையும் உள்ளடக்கியதா?

# உலக சுற்றுச் சூழல் தினம்





*நேற்றைய உதயனில் வெளியான வற்றாப்பளை கண்ணகை அம்பாள் ஆலய வைகாசிப் பொங்கல் சிறப்பு மலரில் வெளியான வற்றா நீரில் விளக்கெரியும் வற்றாப்பளை அம்மன் என்ற கட்டுரையை முல்லைத்தீவைச் சேர்ந்த கு.சிவபாலராஜா அவர்களும் 13 ஆம் பக்கத்தில் பிரசுரமான கட்டுரையை நல்லூர் வடக்கைச் சேர்ந்த வே.ம.இந்திரநாதன் அவர்களும் எழுதியிருந்தனர். அவர்களது பெயர்கள் தவறியமைக்கு மிகவும் மனம் வருந்துகிறோம்.*

*-ஆசிரியர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னுத்துரை சிவகுமாரன். தமிழர் விடுதலைப் போராட்டத்தின் முதல் விதையானவன். ஆயுத ரீதியான விடுதலைப் போராட்டத்துக்கு அடித்தளம் இட்டவனும் அவனே. மாணவ நிலை அரசியலை கூர்மையாக்கி அதனை வலுவான ஆயுதமாகவும் பயன்படுத்தி சாதித்துக் காட்டிய ஒரு மாணவப் போராளி. அவனின் போராட்டம் உயிர் பறிப்போடு முற்றுப் பெற்ற நாள் இன்றாகும். அவன் உயிரோடு போராடும் போது திரளாத போராட்ட சக்தி அவனின் மரணத்தின் பின்புதான் சூடுபிடித்தது. அதனாலேயே சிவகுமாரன் எனும் தமிழர் விடுதலையின் பொறி இன்னமும் நினைவுகளில் உலாவுகின்றது.



# விடுதலையின் முதல் வித்து

*தில்லாலங்கடி*

மாணவர் சக்தி மாபெரும் சக்தி. இந்தச் சக்தியின் முன்னால் எந்தவொரு சக்தியாலும் - ஆளும் வர்க்கத்தாலும் - எதுவும் செய்ய முடியாது. இளமைத் துடிப்பு, சாதிக்கத் துடிக்கும் வெறிக்கு முன்னால் ஏனைய சக்திகள் தோற்றுப் போய்விடும். இதனால்தான் மாணவர்களது போராட்டங்கள் என்றைக்கும் தோற்பதில்லை.

ஈழத் தமிழ் இனத்தைப் பொறுத்த வரையில் அவர்களது ஆயுதப் போராட்டம்கூட மாணவர் எழுச்சியுடனேயே ஆரம்பமானது. இந்த மாணவர் போராட்டத்துக்கு வித்திட்டவன் உரும்பிராய் மண்ணின் மைந்தன் பொன்னுத்துரை சிவகுமாரனே.

1970களில் இலங்கையை ஆண்ட பேரினவாத அரசு - ஸ்ரீமாவோ - தமிழ் மாணவர்களது கல்விக்கு உலை வைக்கும் பொருட்டு, தரப்படுத்தலை நடைமுறைப்படுத்தினார். தமிழர்களது அழியாச் சொத்தாகிய கல்வியை இல்லாதொழிக்கவே இந்த தரப்படுத்தலை நடைமுறைப் படுத்தினார். இந்த நடைமுறையால் பெரும்பாலான இளைஞர், யுவதிகள் உயர் கல்வி வாய்ப்பை இழந்து நடுத்தெருவில் நின்றனர். அவர்களது மேல் படிப்பு வாய்ப்புக்களை அரசு திட்டமிட்டுத் தடுத்தது.

சிவகுமாரன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உயர்தரப் பிரிவிலே கற்றுக் கொண்டிருந்த போதே, இந்த தரப்படுத்தல் நடைமுறைப்படுத்தப்பட்டது. உயர்தரப் பரீட்சையால் மாணவர்கள் பாதிக்கப்படுவதைக் கண்ணுற்ற வேளையிலேயே சிவகுமாரனது தன்மான உணர்வு தலைகாட்ட முனைந்தது.

இதுவே தமிழரின் போராட்ட எழுச்சியை உருவாக்கியது. தரப்படுத்தலால் பாதிக்கப்பட்ட இளைஞர்களை இணைத்துக் கொண்டு தமிழ் மாணவர் பேரவை என்கின்ற அமைப்பை உருவாக்கினான். இதனூடாக இலங்கை அரசுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்தான்.

போராட்டங்களை வெவ்வேறு வடிவங்களில் முன்னெடுத்தான். இவனது போராட்டங்களை அரச படைகள் அடக்க முயன்றபோது, ஆயுதத்தை தனது கையில் எடுத்தான். தமிழ் மாணவர் எழுச்சியை, ஆயுதப் போராட்டமாக மாற்றியமைத்தது சிங்களப் பேரினவாத அரசியல்.

சிவகுமாரன் தான் தயாரித்த குண்டுகளையே தாக்குதல்களுக்கு பயன்படுத்தினான். பல வேளைகளில் கைது செய்யப்பட்டான். கைது செய்த சிங்கள இராணுவத்தினரின் சித்திரவதைகளில் இருந்து சிவகுமாரன் படிப்பினை பெற்றான். எந்த வலிமையுள்ளவனும் இராணுவத்தினரிடம் உயிருடன் பிடிபட்டால் தனது இராணுவ ரகசியங்களைக் கக்கி விடுவான்.

ஆனால் தான் நேசிக்கும் தமிழ் மக்களுக்காக தனது இன்னுயிரை ஈய்வதற்கு ஓர் இணையற்ற முறை கழுத்தில் சயனட்டை மாட்டுவதுதான் என்று எண்ணி, நங்கையரைக் கவர்வதற்காய் கழுத்தில் தங்கச் சங்கிலி மாட்டி சுற்றித் திரியும் வயதில் - இனத்தின் விடுதலைக்காய் -அந்தக் குப்பியை ஏற்றுக் கொண்டான்.

## 1974 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி

நண்பகல் வேளையிருக்கும். சிவகுமாரன் தனது வீட்டில் சாப்பிடத் தயாராகிக் கொண்டிருந்தான். கையைக் கழுவிக் கொண்டு சோற்றுக்குள் கை வைத்து முதலாவது பிடியை வாய்க்குக் கொண்டுபோய்விட்டான். அப்போது அவரது வீட்டு வாசலில் நண்பர்கள் சிலர் வந்து நின்றனர். தீடீரென எழுந்த சிவகுமாரன், சாப்பிட்ட சாப்பாட்டை அப்படியே வைத்து விட்டு, நண்பர்களுடன் போய்விட்டு உடன் வருவதாக கூறிவிட்டுச் சென்றான். அவன் தன்னிடமிருந்து - இந்த உலகத்திலிருந்து - விடைபெறுகின்றான் என்பதை அவனது தாய் அப்போது அறிந்திருக்க வாய்ப்பில்லை.

கோப்பாய் பொலிஸாருடன் நடந்த போராட்டத்தில் - இராச பாதை வீதியில் அமைந்துள்ள வெங்காயத் தோட்டத்தின் ஊடாக ஓடுகையில் சிவகுமாரன் சுற்றி வளைக்கப்பட்டான். எதிரியின் கையில் பிடிபடக் கூடாது என்ற உயரிய எண்ணத்தில் தன் கழுத்தில் மாட்டியிருந்த சயனைட் குப்பியை கடிக்கின்றான்.

பொலிஸாருடன் நடந்த மோதலின் பின்னர், யாழ் .போதனா வைத்தியசாலையில் அவன் அனுமதிக்கப்பட்டிருக்கின்றான் என்ற செய்தி மட்டும் அவன் அன்னைக்கு கிடைத்தது. தாய் வைத்தியசாலைக்குச் செல்ல, ஆயுதமேந்திய பொலிஸார் அவளை மறித்தனர்.

''என் மகனைப் பார்க்கச் செல்லும் என்னைத் தடுக்க யாரடா நீ'' என்று உறுமிக் கொண்டு உள்ளே சென்ற அந்தத் தாய், தனது மகனைப் பார்த்துத் திகைத்தாள். செத்த பாம்பை அடிக்கும் சூரர்கள் போல், சிவகுமாரனை உயிருடன் பிடிக்க முயன்று மூக்குடைபட்ட பொலிஸார் - சயனைட் - அருந்திய இன்னும் சில மணித் துளிகளில் உயிர் விடப் போகின்ற அந்த மாவீரன் கைகளில் சங்கிலிகளைப் பிணைத்திருந்தனர்.

தனது தாயைக் கண்டதும் சிவகுமாரனது கண்கள் பனித்தது. பாசத்தை அடக்கி தனது இனத்தின் - தமிழ் மாணவர்களின் - விடிவுக்காய் போராடிய அவனது நா தழு தழுத்த குரலில் சில வசனங்களைச் சொல்லியது. ''அம்மா! தமிழ் இனத்தின் விடுதலைக்காகத்தான் போராடினேன். ஆனால் இதே இனத்தைச் சேர்ந்த துரோகியொருவனால் தான் நான் காட்டிக் கொடுக்கப் பட்டேன். இந்தத் தமிழினம் ஒரு போதும் திருந்தப் போவதில்லையம்மா!'' அன்று சிவகுமாரன் சொன்ன வார்த்தைகள் இன்றும் நடந்து கொண்டிருக்கின்றன. தமிழரின் ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் முடிவுறுவதற்கும், எமக்குள் இருந்த சில எட்டப்பர்கள்தான் காரணம். இன்றும் எம்மினத்தின் மீட்பர்களாய் காட்டிக் கொள்ளும் பலரும் - எட்டப்பர்களாக இருந்து கொண்டு - தமிழினத்தை வேரறுக்க நினைக்கின்றனர்.

மாணவர் எழுச்சியின் வடிவமாய் போராட்டம் ஆரம்பித்த அதே சூழலிலேயே இன்றைய தமிழினமும் தடம் பதித்துக் கொண்டிருக்கின்றது. ஆயுதப் போராட்டம் எத்தகைய சூழலில் ஆரம்பமானதோ , எந்த ஆரம்பப் புள்ளியிலிருந்து தொடங்கியதோ, அதே ஆரம்பப் புள்ளியிலேயே நாங்கள் நின்று கொண்டிருக்கின்றோம்.

அன்றைக்கு சிவகுமாரன் காலத்தில் - கட்சி அரசியலும், வாக்கு வேட்டைகளும் நடந்து கொண்டிருந்தன. அப்போதும் உரிமைகள் மறுக்கப்பட்டுக் கொண்டே இருந்தன. அன்றைக்கும் சிலர் இணக்க அரசியல் நடத்திக் கொண்டேயிருந்தனர்.

இன்றும் அதே நிலைமையே இருக்கின்றது. ஆயுதப் போராட்டம் இல்லை. கட்சி அரசியல் தாராளமாகத் தலை விரித்தாடுகின்றது. இணக்க அரசியல் செய்பவர்கள் இனத்தை விற்றுப் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

ஆனாலும் அன்று தொடர் பாடல் இருக்கவில்லை. ''பேஸ் புக்'' இருக்கவில்லை. இந்த ஆடம்பர வாழ்வு இருக்கவில்லை. இன்று எல்லாம் இருப்பதனால் உரிமைகள் மறுக்கப்படுவது - ஒடுக்கப்படுவது - எங்களின் கண்களுக்குத் தெரியவில்லை.

பல்கலைக்கழக மாணவர்கள் நடு வீதியில் வைத்து ''இனந் தெரியாதோரால்'' தாக்கப்படுகின்றனர். அந்த விசாரணைகள் கிடப்பில் போடப்படுகின்றன. மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி என்ற பெயரில் இராணுவ முகாம்களுக்குள் வைத்து, மூளைச் சலவை செய்கின்றனர். இராணுவ வெற்றி விழா கொண்டாட்டத்தில் எங்களது தமிழ் மாணவர்கள், இராணுவத்தினருக்கு பூச்செண்டு கொடுக்கின்றனர்.

இவையெல்லாம் எங்களைச் சுற்றி நடந்தேறிக் கொண்டிருக்கின்றன. எங்களுக்கு இவை தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் ''பேஸ்புக்கில் சற்றிங்'' செய்வதற்கே இந்த 24 மணி நேரமும் போதாமல் மறு நாளில் ஒரு மணி நேரம் கடனெடுத்து ''சற்றிங்'' செய்து கொண்டிருகின்றோம்.

மாணவர்கள் தாக்கப்படுவதற்கு அறிக்கைகள் மட்டும் விடுக்கப்படுகின்றது. ஆனால் போராட்டங்கள் மறக்கப்படுகின்றன. மீண்டும் தாக்கப்படுகையில் அறிக்கைகளில் காரம் கூடுகின்றது. ஆனாலும் போராட்டங்கள் எனவும் நடந்தபாடில்லை.

சிவகுமாரனைப் போல் போராட முன்வருவதற்கு யாரும் தயாரில்லை. பூனைக்கு யார் மணி கட்டுவது என்கின்ற போராட்டம் எங்களுக்குள். அதனை விட எங்களுக்குள் யார் எட்டப்பர் ? என்ற கேள்விகளுக்கு விடை தேடிக் கொண்டு காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கின்றோம். இன்றைய நிலையில் தமிழர்களின் எதிர்கால இருப்பைத் தக்க வைப்பதற்கு, தமிழர்களுக்கு விடிவைப் பெற்றுக் கொடுப்பதற்கு மாணவர் சக்தியாலேயே முடியும். அந்தச் சக்தி மீண்டும் திரண்டு வர வேண்டும்?

### சிவகுமாரன் தன் நண்பர்களுக்கு எழுதிய இறுதிக் கடிதம்

*15.01.1974*

*அன்புமிகு நண்பா,*

*எனது கண்ணீர் நிறைந்த பொங்கல் வாழ்த்துக்கள்.*

*10.01.1974 இல் நடந்த சம்பவமும் பொலிஸ் அட்டூழியமும் அதனால் ஏற்பட்ட தாக்கமும் இன்னும் நெஞ்சை விட்டகலவில்லை. காங்கேசன்துறை இடைத் தேர்தல் நடக்க வேண்டுமென்பதற்காகப் பொறுமையுடன் இருக்கச் சொன்னீர்கள். இருந்தும் என்ன பயன்? பொலிஸார் தாங்களாகவே குழப்பத்தை உண்டு பண்ணுகின்றனர். அடுத்த பொங்கல் வரை நான் உயிருடன் இருப்பது நிச்சயமில்லை. அதற்கிடையில் நான் இறக்க நேரிடின் தயவு செய்து இந்தக் கடிதத்தில் போதிய பிரதிகள் எடுத்து முக்கியமானவர்களுக்கு அனுப்பி வைக்கவும்.*

*இங்ஙனம் தங்கள் இனிய நண்பன்,*
*பொன்னுத்துரை சிவகுமாரன்.*

### முக்கியமானவர்கள் பார்வைக்கு அனுப்ப வேண்டிய கடிதம்

*இதை எழுதும் சிவகுமாரனாகிய நான் எச் சமயத்திலும் உயிர் விடலாம். அமைதியாக இருந்தால் காங்கேசன்துறை இடைத்தேர்தல் நடத்துவோம் என்று பிரதம மந்திரி வாக்குறுதியளித்ததால் இதுவரையில் அமைதியாக இருந்தோம். என்னால் மேலும் பொறுக்க முடியவில்லை.*

*தமிழர் ஒரு போதும் தாங்கள் வேறு ஒரு மொழி பேசும் இனத்தினால் ஆளப்படுவதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். பிரிட்டிஷ்காரரே காலமறிந்து எல்லா நாடுகளுக்கும் சுதந்திரம் கொடுத்தனர். அப்போது சுந்தரலிங்கம் போன்று எமது தலைவர்கள் விட்ட பிழையால் எமது தலைவிதியை சிங்கள இனம் நிர்ணயிக்கும் தவறு ஏற்பட்டது. தற்செயலாக ஏற்பட்ட இத்தவறுக்காக தமிழினம் நீண்டகாலம் அடிமையாக இருக்க வேண்டுமா? சிங்கள இனத்துக்கு இருக்கும் ஆசை எங்களுக்கு இருக்கக் கூடாதா? போராடி அழிவேற்படுத்திய பின்னர்தான் எமக்கு சுயநிர்ணய உரிமை கிடைக்குமா? அல்லது நிலைமை அறிந்து அரசே நமது தலைவர்களுடன் பிரச்சினையை தீர்த்துக் கொள்ளுமா ?*

*அரசின் முற்போக்கு நடவடிக்கைகளை ஆதரிக்கும் நாம், அதே நேரத்தில் படுபிற்போக்கு நடவடிக்கைகளையும் சர்வாதிகாரத்தையும் எதிர்க்கிறோம். வாழு: வாழ விடு என்பதே எமது கொள்கை. சிங்கள மக்களை ஏமாற்றி அவர்கள் மனதில் வகுப்புவாதத்தைத் தூண்டிவிட்டு, ஆட்சியில் நீடிக்க எண்ணுகிறது அரசு, அதனால்தான் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முயற்சி செய்யவில்லை.*

*சோசலிச நாடுகளில் சிறுபான்மை இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. சர்வாதிகார பாசிச ஆட்சியில்தான் இப்படியான கொடுங்கோல் நடக்கும்.*

*காசி ஆனந்தனை ஏன் வீணே அடைத்து வைத்திருக்கிறது அரசு. அவரைவிடப் பயங்கரவாதியான யாம் வெளியே இருக்கிறோம். பாவம் அவர் அஹிம்சைவாதியாயிற்றே. அவருக்கா இந்தக் கொடுமை ? [illegible] முட்டாள்தனத்துக்கும் பெயர் போனது. உங்களோடு சேர்ந்து எதற்குத் [illegible] வேண்டும். எமக்குச் சுதந்திரம் பெற வழி விடுங்கள். பின்னர் பாருங்கள் உங்களுடைய பொருளாதாரப் பிரச்சினையையும் நாம் தீர்ப்போம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்க்க வேண்டுமா? வளர விடுவதா?

பிள்ளை வளர்ப்பில் இரண்டு கோணங்கள் உண்டு. ஒன்று, பிள்ளைகள் அபிப்பிராயப்படி சுதந்திரமாக வளர, சுயமாகச் சிந்திக்கப் பெற்றோர் அனுமதித்து வளர்க்க வேண்டும். இன்னொரு கோணம்... அவர்களுக்கு என்ன தெரியும்? அனுபவம் உள்ள பெற்றோர்தாம் தம் எதிர்பார்ப்பின்படி அவர்களை உருவாக்க வேண்டும் என்பது மற்றொன்று. இரண்டு கோணங்களும் பிழையல்ல. பெற்றோரின் திறன், பிள்ளைகளின் திறன் இரண்டையும் பொறுத்துத்தான் சரி, தவறுகளை முடிவு செய்யமுடியும்.

வித்தியாசமான தனித்திறன் மிக்க பிள்ளைகளைச் சில சராசரிப் பெற்றோர்கள் தங்கள் போக்கில் வளர்த்தால் சமூகத்துக்கு நஷ்டம். பிள்ளைகளை அவர்கள் போக்கில் பெற்றோர் வளரவிட்டாலும் சமூகத்துக்கு கஷ்டம். அதேபோல் நல்ல திறமைமிக்க பெற்றோர் ஆதரவில், அவர்களைப் போலவே பிள்ளைகள் வளரும் என்றால் முன்னேற்றம் சுலபம். மூடப் பெற்றோர்கள் எதிர்பார்ப்பின்படி பிள்ளைகள் வளரும் என்றால் அவர்கள் வீழ்ச்சியும் சுலபம். எனவே இருதரப்பிலும் விழிப்பும் எச்சரிக்கையும் பரிசீலனையும் கவனமும் இருக்க வேண்டும்.

பாரதியார் வாழ்வை எடுத்துக் கொள்ளுங்கள். மெலிந்த ஆரோக்கியமற்ற உடல். அதை மறைக்கத்தான் கனமான கோட்டு. தன் பிள்ளைப் பருவத்தில் ஆட, ஓட, தன்னை விளையாட அனுமதிக்காத பிராமண ஆசாரத்தின் மீதும் பெற்றோர் மீதும் பாரதிக்கு எத்தனை கோபம்? எத்தனை வருத்தம். பாரதியின் சுயசரிதையில்

''ஆண்டோர் பத்தினில் ஆடியும் ஓடியும்
ஆறுகுட்டையில் நீச்சினும் பேச்சினும்
ஈண்டு பன்மரத் தேறி யிறங்கியும்
என்னொ டொத்த சிறியர் இருப்பரால்
வேண்டு தந்தை விதிப்பினுக் கஞ்சியான்
வீதியாட்டங்கள் எதிலும் கூடிலேன்
தூண்டு நூற்கணத்தோடு தனியனாய்த்
தோழமை பிறிதின்றி வருந்தினேன்''
என்று பாடுகிறார்.

ஆட்டம் பாட்டம் இல்லாமல் தோழமை இன்றி வருந்தினேன் என்பது மகாகவி பாரதியின் வாக்கு மூலம். நீந்தி விளையாட, நண்பர்களோடு பேச வீட்டில் அனுமதி இல்லையாம். நீச்சும் இல்லை; பேச்சும் இல்லை, அந்தக் கோபம்தான்.

''ஓடி விளையாடு பாப்பா-நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா-ஒரு
குழந்தையை வையாதே பாப்பா''

என்று பாப்பாக்கள் அரசவையில் குடியுரிமை சட்டமாகப் பிரகடனம் ஆகிறது.

அக்கம் பக்க வீடுகளில் நம் பிள்ளைகள் ஏதாவது தவறு செய்துவிட்டு வந்தால் அவர்கள் வந்து குற்றம் சொல்லும்போது சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை விட்டுக்கொடுக்க மாட்டார்கள். விட்டுக் கொடுக்காமல் குற்றம் சொல்பவர் வாயை அடைப்பதுதான் பாசம் மிக்க பெற்றோரின் கடமை என்பார்கள். ஆனால் இவர்கள் பிள்ளைகளை நாசமாக்கும் பெற்றோர்கள். 'தன் பிள்ளை' என்பதாலேயே அதன் எல்லாச் செயல்களையும் நியாயப்படுத்துவது அன்பு ஆகாது. அக்கிரமம், அயோக்கியத்தனம். எது தவறு, எது சரி என்கிற நேர்மை உணர்வுதான் பிள்ளைகளுக்கு ஏற்பட வேண்டும். ''என்ன தப்பு செய்தாலும் நாம் காப்பாற்றப்படுவோம்'' என்கிற எண்ணம் பிள்ளைகளுக்கு உண்டாவது நல்லதல்ல.

ஒரு கதையைக் கூறலாம்:

வெள்ளைக்காரர்கள், கொலைகாரனைத் தூக்கில் இடும்முன் உன் கடைசி ஆசை என்ன என்று கேட்கிறார்கள். அவன் ''என்னை அன்போடு வளர்த்த அம்மாவிடம் இரண்டு வார்த்தைகள் இரகசியமாகப் பேசவேண்டும். அவரை அழையுங்கள்'' என்றான். அம்மா அருகில் வந்தாள். தூக்கு மேடையில் இருந்து குனிந்து தாயின் காதருகே ஏதோ இரகசியம் பேசியவன் யாரும் எதிர்பாராதபடி வெடுக்கென்று அவள் காதைக் கடித்துத் துப்பினான். ''ஐயோ...ஐயோ'' என்று தாய் அலறினாள். ''ஏன் இப்படிச் செய்தாய்?'' என்று நீதிபதியும் காவலர்களும் அவனைக் கடிந்து கொண்டனர்.


''முதன் முதலாக நான் ஒரு சிறுவனின் பென்சிலைத் திருடிவிட்டு வந்து அம்மாவின் இதே காதுகளில்தான் இரகசியமாகச் சொன்னேன். அன்றே என்னை அடித்துத் திருத்தி இருந்தால் இன்று இவ்வளவு பெரிய திருடனாகி இருக்கமாட்டேன். மரண தண்டனை பெறும் குற்றவாளியாகி இருக்கமாட்டேன். இதைக்கேட்டுக் கொண்டு சும்மா இருந்த காது அவளுக்கு இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன?'' என்றான் தண்டனை பெற்ற திருடன். பெற்றோர்களே! உங்கள் காதுகள் பத்திரம். முதலிலேயே முந்திக் கொள்ளுங்கள். பிள்ளைகளின் தவறுகளை மூடப் பாசத்தால் நியாயப்படுத்தாதீர்கள்.



சுகி.சிவம்

# தஞ்சையிலிருந்து தருவிக்கப்பட்ட விக்கிரகத்தை மூலமூர்த்தியாகக் கொண்ட கைலாசநாதர்

(கடந்தவாரத் தொடர்ச்சி)



யேசுதாஸ்

யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிய தமது ஆட்சியை ஏற்படுத்திய போர்த்துக்கீசர் ஆலய அழிப்பில் ஈடுபடத் தொடங்கினர். இதனால் அச்சமடைந்த அந்தண சிவாச்சாரியர்கள் கோயில் சூறையாடப்படுதலைத் தவிர்க்கும் முயற்சியில் ஈடுபட்டனர். மூல மூர்த்தியையும், பரிவாரத் தெய்வங்களையும் தள்ளுவண்டியில் ஏற்றி தனது சொந்த ஊரான மட்டுவிலுக்குக் கொண்டு செல்ல பிரதம சிவாச்சாரியார் புறப்பட்டார். இவற்றைக் கொண்டு செல்லும் போது வழியில் பல சிரமங்கள் ஏற்படவே அம்மன் திருவுருவத்தை ஒரு கிணற்றில் போட்டுவிட்டு சிவலிங்கத்தை மட்டுவிலுக்கு எடுத்துச் சென்று அதனை ஒரு கோயில் கிணற்றுக்குள்ளே போட்டுவிட்டார்.

பல ஆண்டுகளின் பின் அங்குள்ள பெரியார் ஒருவரின் கனவில் தோன்றி தனது இருப்பிடத்தை வெளிப்படுத்தினார் சிவனார். மக்களால் மீட்கப்பட்ட திருவுருவம் அங்குள்ள ஒரு சிவாலயத்தில் சந்திர மௌலீஸ்வரர் எனும் நாமத்துடன் பிரதிட்டை செய்யப்பட்டது. இவருக்குச் சக்தியாக சாந்தநாயகி என்னும் பெயருடன் அம்மன் திருவுருவம் அமைக்கப்பட்டு இன்றும் வழிபடப்பட்டு வருவதாக ஐதீகக் கதைகள் நிலவி வருகின்றன. மேலும் முன்னைய கைலை நாயகியின் திருவுருவம் மீட்கப்பட்டு யாழ்ப்பாணத்திலுள்ள பிறிதொரு சிவாலயத்திலே வணங்கப்பட்டு வருவதாக அறியப்படுகிறது.

1619 ஆம் ஆண்டு முதல் 1948 ஆம் ஆண்டு வரையான 329 ஆண்டுகள் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆக்கிரமிப்புக்கு யாழ்ப்பாணம் உட்பட்டிருந்த போதும் 18 ஆம் நூற்றாண்டிலே ஐரோப்பாவில் தாராண்மைவாதம், மதசுதந்திரம் போன்ற மறுமலர்ச்சிக் கருத்துக்கள் மேலோங்கியதன் விளைவாக கீழைத்தேச நாடுகளிலுள்ள தமது நிர்வாக ஆட்சி ஆள்புலங்களிலும் மதச் சுதந்திரம் அளிக்கத் தொடங்கினர். இதனால் அழிவுற்ற ஆலயங்களின் புனரமைப்பும் புதிய ஆலயங்களின் கட்டுமானங்களும் படிப்படியாக ஆரம்பிக்கப்பட்டன.

கைலாசநாத மானியம் என்னும் நூலில் ''கைலாச கணபதிக்கோர் கோபுரம் காணீர் கைலாச நாதருக்கோர் கோபுரம் காணீர், கைலாச நாயகிக்கோர் கோபுரம் காணீர், கைலாச கோபுர மூன்றுள்ள திதுதானே'' என்பதற்கமைய தனித்தனி மூன்று கோபுரங்களுடன் விளங்கியதாகவும் அவை அழிக்கப்பட்டதாகவும் நம்ப இடமுண்டு.

யாழ்.கோட்டை புனரமைப்புக்காகவும், வேறு தேவைகளுக்காகவும் அழிவுற்ற கோயில்களின் கற்களை மக்களைக் கொண்டு அந்நிய ஆட்சியாளர்கள் எடுத்துச் செல்லும் முயற்சியில் ஈடுபட்ட போது இடிபாடுகளுக்கிடையிலே, பற்றைக்குள்ளே மறைந்திருந்த பிள்ளையார் விக்கிரகமொன்றைக் கண்டெடுத்து மிக மகிழ்வடைந்து பக்தியுடன் அதனை ஒரு வில்வமரத்தடியில் வைத்து வழிபட்டு வரலாயினர்.

1987 ஆம் ஆண்டு இந்தியப் படை நடவடிக்கையால் ஆலயத்துக்குப் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டன. பின்னர் புனரமைப்புச் செய்யப்பட்டு 1988 இல் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

சூறையாடப்பட்டு சிதைவுற்றிருந்த கைலாசர் ஆலயப்பகுதியில் 1850 ஆம் ஆண்டிலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மக்களின் உதவியுடன் ஓலையினால் மண்டபம் அமைத்து அங்கே பிள்ளையாரை பிரதிட்டை செய்தார். முன்னைய கைலாசநாதர் ஆலயம் அமைந்திருந்த நிலத்துடன் மேலும் பல நிலப்பரப்புக்கள் வாங்கப்பட்டன. மேலும் இந்த ஆலயப் பராமரிப்பு நிதிக்காக செம்மணி, சரசாலை போன்ற இடங்களில் நெற்காணிகள் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பின்னர் நாவலரது மருகர் கைலாசபிள்ளை என்பவர் கற்கோயிலை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். சிதைந்திருந்த கைலாசர் ஆலயத்துடன் விநாயகர் ஆலயத்தையும் கற்கோயிலாக அமைத்தனர். தொடர்ந்து மேலும் பல மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1911 ஆம் ஆண்டு குடமுழுக்கு நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு கைலாசப் பிள்ளையாரை மூல மூர்த்தியாக ஸ்தாபித்து அமைக்கப்பட்டதே இன்றைய கைலாயப் பிள்ளையார் கோயிலாகும்.

தொடர்ந்து சிவாச்சாரியார், அடியார்களின் பெரும் முயற்சியினால் ஒரு சிவலிங்கமும், அம்பாள் விக்கிரகமும் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டு பிரதிட்டை பண்ணி கும்பாபிஷேகம் நடைபெற்றது. மதுரை அப்பா சுந்தரம் என்பவர் கோயில் நிலத்திற்கு கருங்கல் பதித்து அழகு படுத்தினார்.

அவருக்குப் பின் அவரது சகோதரி மாணிக்க அம்மையார் கோயில் கட்டடப் பணிகளை 1944 ஆம் ஆண்டு ஆரம்பித்து 1946 ஆம் ஆண்டு மஹாகும்பாபிஷேகத்தினை மூலமூர்த்திக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் முறைப்படி செய்து வைத்தார். மேலும் பழைய கைலாசநாதர் ஆலயத்தைச் சேர்ந்த சந்திரசேகரர், அம்பாள் வள்ளி தேவசேனாசமேத சுப்பிரமணியர் ஆகியோரின் தாமிர விக்கிரகங்களும் வைரவரின் கற்சிலையும் மீளப் பெற்று பிரதிட்டைகளை செய்யப்பட்டுள்ளன. மரபுவழிப் பிரதான சிவாச்சாரியாரான குமாரசாமிக் குருக்களும், அக்காலகட்டத்திலே முகாமையாளராக இருந்த பொன்னம்பலமும் மக்களுடன் இணைந்து இவற்றை நிறைவேற்றினார்.

1963 ஆம் ஆண்டு ஆலயத்திருப்பணிகள் ஓரளவு நிறைவுற்ற பின்னர் மாணிக்க அம்மையாரால் ஆரம்பிக்கப்பட்ட சித்திரத் தேர் அமைக்கும் பணிகள் அவரின் சகோதரர் சோமசுந்தரம் மற்றைய பக்தர்களால் முற்றுப்படுத்தப்பட்டன. இதற்கான தேர் முட்டியை சிவபக்தரும் கணிதப் பேராசிரியருமான சி.சுந்தரலிங்கமும் வேறு சிலரும் அமைத்துக் கொடுத்தனர்.

அத்துடன் தஞ்சாவூரிலே செய்யப்பட்ட பஞ்சமுகப் பிள்ளையார், திருவுருவத்தைத் தருவித்து தென்மேற்கு மூலையில் பிரதிட்டை செய்வித்தார். இத்தகைய விக்கிரகம் இலங்கையில் இங்கு தான் முதலில் வைக்கப்பட்டதாகப் பேசப்படுகிறது.

1970 இல் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது. பிள்ளையாருக்கு மட்டும் நடைபெற்று வந்த மஹோற்சவம் 1971 முதல் கொடியேற்றத் திருவிழாவாக கைலாய நாதருக்கும் ஆரம்பித்து நடைபெறுகிறது. வைகாசி விசாகத்திற்கு முன்வரும் 10 தினங்கள் பிள்ளையாருக்கும், ஆனி உத்தரத்திற்கு முன்வரும் 10 தினங்கள் கைலாயநாதருக்கும் மஹோற்சவங்கள் நடைபெறுகின்றன.

1987 ஆம் ஆண்டு இந்தியப் படை நடவடிக்கையால் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டன. பின்னர் புனரமைப்புச் செய்யப்பட்டு 1988 இல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 2000 ஆம் ஆண்டு கைலாசநாதருக்கு ஆலயகுருக்களும் அடியார்களும் இணைந்து சித்திரத்தேர் அமைத்தனர்.

இந்த ஆலயத்தின் தலவிருட்சமாக பல நூற்றாண்டுகள் பழைமைவாய்ந்த பவள மல்லிகையும் தீர்த்த சிறப்புமிக்க கைலாச தீர்த்தமும் விளங்குகின்றன. திருக்கைலாசத்தில் உள்ள 1008 மண்டபத்தில் ஒன்றை நினைவுபடுத்தும் சௌபாக்கிய கௌரி மண்டபம் அழகிய வேலைப்பாடுகளுடன் 2003 இல் அமைக்கப்பட்டது. திருக்கோபுரம் அமைப்பதற்கு அடிக்கல்லும் நடப்பட்டுள்ளது.

இந்தக் கோயில் அமைப்பிலே அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஸ்தம்பமண்டபம், நடராசசபை என்பவற்றுடன் மூன்று பலிபீடங்களும், இரண்டு கொடித்தம்பங்களும் உள்ளன. இடபம், கைலாசம், மூஷிகம், காராம்பசு, மயில், யானை முதலிய வாகனங்கள் உள்ளன. கோயிலின் உட்பகுதியிலும் திரைச்சீலைகளிலும் பல அழகிய ஓவியங்கள் காணப்படுகின்றன.

இந்தக் கோயிலிலே வழிவழியாக வேதாகமப் புலமை, சமய அனுட்டானங்கள் வாய்ந்த சிவாச்சாரியர்கள் இருந்து வந்துள்ளனர். குமாரசாமிக் குருக்களைத் தொடர்ந்து அவரின் மகன் குருசாமிக் குருக்களும் தற்போது அவரின் மகன் மணிக் குருக்களும், ஆனந்தன் ஐயாவும் ஆலய பூஜை வழிபாட்டுக் கடமைகளைச் செய்து வருகின்றனர். இவர்கள் 28 ஆவது தலைமுறை என்பது குறிப்பிடத்தக்கது. ஆலய அழிவுக்குப் பின் நாவலரும், வழித் தோன்றல்களும் பின்னர் பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் குழுவும் ஆலய பராமரிப்பில் ஈடுபட்டன. தற்போது பிரதம சிவாச்சாரியாரே பொதுவாக நிர்வாகத்தைக் கவனித்து வருகிறார்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டதாரி அரச நியமனத்துக்கு பணம் பெற்றால் அறிவியுங்கள்

## பிரதி அமைச்சர் முரளிதரன் கோருகிறார்

**நேர்முகப் பரீட்சைகளில் ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் எனக்குத் தெரியப்படுத்துங்கள். நேர்முகப் பரீட்சை முடிவுற்றதும் அது தொடர்பிலும் எனக்குத் தெரியப்படுத்துங்கள்.**

மட்டக்களப்பு,ஜூன்5
கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள பட்டதாரிகளுக்கான தொழில் நியமனம் தொடர்பில் அரசியல்வாதிகளோ அல்லது முகவர்களோ பணம் பெறும் முயற்சியில் ஈடுபட்டால் அது தொடர்பில் எனக்குத் தெரியப்படுத்துங்கள் என்று மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் வி.முரளிதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

முரளிதரன் மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகளை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை சந்தித்து கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பில் முறைகேடான நியமனங்கள் இடம்பெறக்கூடாது, மூப்பு அடிப்படையில் நியமனம் வழங்கப்பட வேண்டும், மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகள் கோரிக்கைகளை விடுத்திருந்தனர்.

இதற்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தத் தொழில் நியமனத்தில் எந்தவிதமான அரசியல் பலமும் பயன்படுத்தப்படமாட்டாது. ஆண்டு அடிப்படையிலேயே நியமனங்கள் வழங்கப்படும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கமைவாக திறைசேரிக்கு விடுத்த அறிவுறுத்தலுக்கமைவாக இந்த நியமனங்கள் வழங்கப்படுகின்றன. பட்டதாரிகளாகிய உங்களது நீண்ட கால முயற்சிக்கு தற்போது பயன் கிடைத்திருக்கிறது. உங்களது சங்கம் பலமானது. இது தொடர்ச்சியாக இயங்க வேண்டும்.

பட்டதாரிகள் யாரும் எந்த ஓர் அரசியல்வாதிக்கும், முகவருக்கும் சிறு தொகையைக் கூட வழங்கி பிரச்சினைகளை ஏற்படுத்தி விட வேண்டாம். அவ்வாறானவர்கள் தொடர்பான விவரங்களை எனக்கு அறியத்தரவும். பரீட்சைகள் மூலம் பட்டதாரிகளை அரச நியமனங்களில் உள்வாங்கும் முறைமை நிறுத்தப்பட்டுள்ளது. நீங்கள் அனைவரும் நேர்முகப் பரீட்சைகளின் மூலம் அரச நியமனங்களில் உள்வாங்கப்படுவீர்கள். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேர்முக பரீட்சைகளில் ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் எனக்குத் தெரியப்படுத்துங்கள்.

நேர்முகப் பரீட்சை முடிவுற்றதும் அது தொடர்பிலும் எனக்குத் தெரியப்படுத்துங்கள். நாட்டின் பொருளாதார நிலை மிகவும் மோசமாக உள்ளது. தொடர்ந்து ஏற்படும் பணவீக்கத்துக்கு ஏற்றால் போல் உற்பத்திகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

இந்த நேர்முகப் பரீட்சையில் அனைத்துப் பட்டதாரிகளும் பங்கு கொள்ளுங்கள். உங்களுடைய நியமனங்களை வழங்குவதற்காக அரசு சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றுச் செயற்படுத்துகிறது. அதன் மூலமும் பண வீக்கம் அதிகரிக்கப் போகிறது.

பொருளாதாரத்தை வளப்படுத்துவதற்காக பெரும் சர்வதேச முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்வதற்கான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது- என்றார். (ச)



சம்மாந்துறையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றொருவர் காயமடைந்துள்ளார். (ச)

## அம்பாறை அரந்தலாவ பகுதி புனித பூமியாகப் பிரகடனம்

அம்பாறை,ஜூன்5
கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் அரந்தலாவ பிக்குகள் படுகொலை செய்யப்பட்டு 25 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு அந்தப் பிரதேசம் புனித பூமியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் படுகொலையை நினைவுகூர்ந்து கடந்த சனிக்கிழமை பல விசேட சமய நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இதன் போதே குறித்த பிரதேசத்தை புனித பூமியாக பிரகடனப்படுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1987ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2ஆம் திகதி 33 பௌத்த பிக்குகள் கொல்லப்பட்டனர்.

இந்தப் படுகொலைகளுக்கு அந்நாள் புலிகளின் கிழக்குத் தளபதி கருணா அம்மான் தலைமையேற்றிருந்தார் என குற்றச்சாட்டுக்கள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டிருந்தன.

எனினும், அந்தக் குற்றச்சாட்டுக்களை முழுமையாக அவர் மறுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## குளவி கொட்டி 18 பேர் வைத்தியசாலையில்

தம்புள்ள,ஜூன்5
சிகிரியாவைப் பார்வையிட வந்த 18 பேர் குளவி கொட்டிய நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிகிரியாவை பார்வையிடுவதற்காக வந்த உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளே குளவித் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். இவர்கள் சிகிரியா மற்றும் தம்புள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். (ச)

## குழுக்களுக்கு இடையே மோதல்: இருவர் கொலை, இருவர் படுகாயம்

நுவரெலியா, ஜூன்5
நுவரெலியா - மாகஸ் தோட்ட கீழ் பிரிவில் இரண்டு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் இருவர் இறந்துள்ளதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த மோதல் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. இந்த மோதலில் படுகாயமடைந்த நால்வர் நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அதில் இருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளனர். மோதலில் சண்முகம் கிருஷ்ண சூடாமணி (வயது-50), தோனசுந்தரி (வயது 25) ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

இந்தக் கொலைகளுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்கள் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இவர்களைக் கைது செய்ய நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)



அம்பாறை, வளத்தாப்பிட்டிகுளம் புனரமைக்கப்பட்டு விவசாயிகளிடம் கையளிக்கப்பட்டது. அந்த நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, சிரேஷ்ட அமைச்சர் பி.தயாரட்ண, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறியாணி விஜேவிக்ரம, கிழக்கு மாகாண நீர்ப்பாசனத்துறை அமைச்சர் எம்.எஸ்.உதுமா லெவ்வை உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)

## ஓட்டோவில் சென்ற குழந்தை விழுந்து சாவு

திருகோணமலை,ஜூன்5
கிண்ணியாவில் ஓட்டோவில் பயணித்த இரண்டரை வயதுக் குழந்தை ஓட்டோவில் இருந்து தவறி விழுந்து காயமடைந்த நிலையில் திருகோணமலையில் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் கிண்ணியா மஹ்ரூப் நகரைச் சேர்ந்த சபிக் நிஸ்கான் என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிண்ணியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## நீர் வீழ்ச்சியில் இருவர் சாவு

நுவரெலியா,ஜூன்5
காசல்ரீ நீர்வீழ்ச்சிக்கு அண்மையிலுள்ள அபேர்தீன் நீர்வீழ்ச்சியில் விழுந்து இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ராகம கிரில்லவெல பிரதேசத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களே மரணமடைந்துள்ளனர்.

15 பேர் கொண்ட குழுவொன்று உல்லாசப் பயணமொன்றை மேற்கொண்டிருந்த போது அபேர்தீன் நீர்வீழ்ச்சிக்கு அண்மையில் உணவு உண்பதற்காக வாகனத்தை நிறுத்தியுள்ளனர்.

அப்போது இருவரும் நீர்வீழ்ச்சிக்கு அருகில் நீராடச் சென்றதாகவும் அவர்களில் ஒருவர் தவறி விழுந்தபோது அவரைக் காப்பாற்ற முனைந்த மற்றொரு இளைஞரும் உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## பொலிஸ் நிலையங்களுக்கு உபகரணங்கள்

மட்டக்களப்பு,ஜூன்5
கிழக்கு மாகாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு கிழக்கு மாகாண முதலமைச்சரின் ஏற்பாட்டில் கணினிகள், போட்டோ கொப்பி இயந்திரங்கள், பக்ஸ் இயந்திரங்கள் ஆகியன நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அபேசிறி குணவர்த்தன, மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் கே.விமலநாதன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பூ.பிரசாந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாணத்திலுள்ள 23 பொலிஸ் நிலையங்களுக்கும் இந்த உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பாதிக்கப்பட்டோருக்கு கூரைத் தகரங்கள்

திருகோணமலை,ஜூன்5
திருகோணமலை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட இடரினால் பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கு இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர கூரைத் தகரங்கள், சமையலறைப் பாத்திரங்களை வழங்கியுள்ளார்.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், இடரினால் பாதிக்கப்பட்ட 11 பிரதேச செயலகங்களுக்கு சமையலறைப் பாத்திரங்கள் மற்றும் அடுப்புகள் என்பவற்றையும் அமைச்சர் வழங்கினார். (ச)

## ஹப்புத்தளையில் ஒருவர் வெட்டிக் கொலை

ஹப்புத்தளை,ஜூன்5
ஹப்புத்தளை - கீனபொத பகுதியில் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 37 வயதுடைய ஒருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தகராறு மோதலில் முடிந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் கொஸ்லந்தை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஹப்புத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். சில பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்கிவிட்டு, அதில் திருப்தி இல்லாமல் போகலாம். ஒருவரிடம் கடனாக வாங்கிய பணத்தை உடனே திருப்பிக் கொடுக்கலாம். சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்யலாம்.

**இடபம்:** அமைதியாகச் செயற்பட்டு, ஆறுதல் அடைய வேண்டிய நாள். சக ஊழியர்கள், உங்களின் யோசனைகளுக்கு பலத்த ஆதரவு தரலாம். விலை உயர்ந்த பொருள்கள் வாங்க நினைத்த திட்டம் நிறைவேறும். தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவு ஒன்று வரலாம். அடமானம் வைத்த பொன், பொருள்களை மீட்கலாம்.

**மிதுனம்:** தடுமாற்றங்களைச் சந்திக்கலாம். நீங்கள் எதிர்பார்த்த சில விடயங்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். பெற்றோரின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். மாமன், மைத்துனர்கள் உதவிகள் கேட்கலாம். எதிர்பாராத திடீர் பணவரவுகளைப் பெறலாம்.

**கடகம்:** உங்களுக்குத் தெரியாத விடயம் ஒன்றை அறிந்து கொள்வதில் அக்கறை காட்டுவீர்கள். நீங்கள் எதிர்பாராத உறவினர் ஒருவர் உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். பிள்ளைகள் விரும்பியவற்றை வாங்கிக் கொடுக்கலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். பரபரப்பாகச் செயற்படலாம்.

**சிங்கம்:** மகிழ்ச்சியான, சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். தொழில் ரீதியான பதற்றம் இல்லாமல் அமைதியாக இருப்பீர்கள். அயலாரிடம் கடனாகக் கொடுத்த பணம் வரலாம். நீண்ட நாள்களாகப் பேசாத நண்பர் ஒருவருடன் பேச நேரிடலாம். அதிகவிலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்கலாம்.

**கன்னி:** அரசியல் தொடர்புடையவர்கள் முன்னேற்றம் காண்பர். வரும் வாய்ப்புகளை நழுவ விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். உறவினர்கள், உங்களுக்கு உதவிக்கரம் நீட்ட முன்வருவர். நீங்கள் செல்லும் இடத்தில், உங்களுக்குப் பிடிக்காத ஒருவரைச் சந்திக்கலாம். உங்களின் வேலை ஒன்றுக்காக, மற்றவர்களையும் கூட்டிக் கொண்டு அலைவீர்கள்.

**நாளை**

வைகாசி 24 புதன்கிழமை 06.06.2012
திதி: துதியை பி.ப 01.07 வரை
நட்சத்திரம்: மூலம் மரண மு.ப 08.46 வரை
சுபநேரம்: 04.22- 05.52 வரை
ராகு காலம்: 11.52- 01.22 வரை

**துலாம்:** பிறரை நம்பி எந்தக் காரியம் செய்வதையும் தவிர்க்க வேண்டும். பண விவகாரங்களில் பிணை கொடுக்க வேண்டாம். குடும்பத்தில் சச்சரவுகள் வராமல் இருக்க, நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். பழமையான விடயங்களில் நாட்டம் செல்லும். சிலரைச் சந்திக்க முற்பட்டு, அது முடியாமல் போகலாம்.

**விருச்சிகம்:** பல நாள்களாக நடைபெறாமல் இருந்த காரியம் ஒன்று, இன்று திடீர் பயண முயற்சிகளில், முன்னேற்றமான திருப்பங்களைக் காணலாம். அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர். மற்றவர்கள் உங்களைப் பார்த்து பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம்.

**தனுசு:** திட்டமிட்ட பணிகளைத் திட்டமிட்டபடி செய்து முடிப்பீர்கள். பணவரவுகள் மகிழ்ச்சி தரும். குழந்தைகளுக்காகச் செலவுகள் இருக்கும். தொழிலில் எதிர்பாராத இடையூறுகள் ஏற்பட்டபோதும், தகுந்த நபர்களின் துணையோடு முடிவுக்குக் கொண்டு வருவீர்கள். பெற்றோருக்காக சில செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

**மகரம்:** பணிகள் மற்றும் அலைச்சல் காரணமாக உடல் நிலையில் சோர்வு காணப்படும். வீட்டுக் காரியம் ஒன்றை சிரமத்தைப் பொருள்படுத்தாது செய்து முடிப்பீர்கள். குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக சிறு பிரயாணம் ஒன்று இருக்கும். அரசியல்வாதிகளின் தொடர்புகள் பயன்தரும். உறவினர்களின் வருகை இருக்கும்.

**கும்பம்:** உங்கள் பிடிவாதப் போக்கை சிறிதளவேனும் மாற்றிக் கொள்வீர்கள். உறவினர்கள், நண்பர்கள் ஆதரவாகப் பேசத்தொடங்குவார்கள். பிரபலங்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் கடமையுணர்வுடன் செயற்படுவார்கள். அலுவலகத்தில் மரியாதை அதிகரிக்கும்.

**மீனம்:** எந்தக்காரியத்தையும் தயங்காமல் உற்சாகமாகச் செய்வீர்கள். கணிசமான பணவரவுகளால் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். பிரியமான உறவினர்களின் பாசமழையில் நனையலாம். சுக துக்கங்களைப் பற்றி நண்பர் ஒருவரிடம் பேசலாம். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 3 | 8 | | 2 | | 4 |
| 9 | 2 | | 7 | | | | 1 | |
| 8 | | 7 | 2 | | 1 | 9 | | |
| | 6 | | | | | | | |
| 5 | 8 | | 9 | 4 | 6 | | 3 | 2 |
| | | | | | | | 4 | |
| | | 4 | 5 | | 8 | 1 | | 7 |
| | 9 | | | | 7 | | 2 | 8 |
| 7 | | 8 | | 3 | 2 | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 3 | 5 | 9 | 6 | 8 | 4 | 2 |
| 9 | 8 | 6 | 1 | 2 | 4 | 3 | 7 | 5 |
| 4 | 2 | 5 | 8 | 7 | 3 | 6 | 1 | 9 |
| 5 | 7 | 8 | 9 | 3 | 1 | 2 | 6 | 4 |
| 1 | 6 | 9 | 4 | 8 | 2 | 7 | 5 | 3 |
| 2 | 3 | 4 | 7 | 6 | 5 | 9 | 8 | 1 |
| 8 | 9 | 1 | 2 | 4 | 7 | 5 | 3 | 6 |
| 3 | 4 | 2 | 6 | 5 | 8 | 1 | 9 | 7 |
| 6 | 5 | 7 | 3 | 1 | 9 | 4 | 2 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்

## சீவரத்தினம் சீவறஞ்சன் (ரஞ்சன்)

(ரஜி ரெஸ்ரோரன்ட் உரிமையாளர்)



வருடங்கள் ஓடி
மறைந்த போதும்
நீங்கள் எம்மை
விட்டு மறைந்தாலும்
எமது இதயங்களில்
என்றும் உமது நினைவு தான்.
உமது ஆத்மா சாந்தி
பெறப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 1973.06.12

இறப்பு 2011.05.17

திதி:- பிரதமை

மனைவி,
பிள்ளைகள்.

ரஜி ரெஸ்ரோரன்ட், இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி.

(1950) (2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேசசபை உறுப்பினர் கடத்தல்; புலனாய்வுப் பிரிவால் 3 பேர் கைது

கொழும்பு,ஜூன்5


புளத்சிங்கள பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் அனுபமா பண்டிதரத்ன கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக பிரதி அமைச்சரின் இணைப்புச் செயலாளர், சாரதியொருவர், வாகன திருத்த நிலையத்தின் உரிமையாளர் ஒருவர் என மூவரை கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர் கடந்த 20ஆம் திகதி விகாரையொன்றில் வைத்து கடத்திச் செல்லப்பட்டிருந்தார்.

பின்னர் இவர் இரத்தினபுரி பிரதேசத்தில் கடந்த 28ஆம் திகதி விடுவிக்கப்பட்டிருந்தார்.

கொரியாவில் வேலை வாய்ப்புப் பெற்றுத்தருவதாகக் கூறி, இந்த ஆளும் கட்சி அரசியல்வாதி பணம் பெற்றுக்கொண்டார் என பொலிஸ் நிலையத்தில் 10 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அனுபமா பண்டிதரத்ன கடத்தப்பட்டு இரத்தினபுரி மாவட்டத்தின் கொடகவெல பிரதேசத்தில் விடுவிக்கப்படுவதற்கு முன்னர் கஹவத்த, கடுவன, கொவல்வல பிரதேசங்களிலுள்ள விடுதிகளில் தடுத்துவைக்கப்பட்டிருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



பொசன் போயா தினத்தை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை களனி விகாரையில் விசேட வழிபாடுகளில் சிங்கள பௌத்த மக்கள் ஈடுபட்டனர்.

# அபராதங்கள் மூலம் பணம் சேகரிக்க அரசு நடவடிக்கை

## ரில்வின் சில்வா தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்5

அபராதங்கள் மூலம் பணத்தைச் சம்பாதிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. கடன் மற்றும் வரி அறவீடுகள் மூலமான மேற்கொள்ளப்படும் பொருளாதாரமே தற்போது உள்ளது. முன்பு வருமான வரி என்ற ஒன்றையே நாம் கேள்விப்பட்டிருப்போம். இன்று அப்படியல்ல. அனைத்துக்கும் வரி செலுத்தி வருகின்றோம் என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

களனி, பொல்லேகல பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொலிஸார் ஒரு நாளில் எவ்வளவு பணத்தை அறவிட வேண்டும் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் தமக்கு வழங்கப்பட்ட நிர்ணயம் காரணமாக அழிந்து போன மஞ்சள் கடவைக்கு அருகில் ஒளிந்திருந்து, அதில் வீதியைக் கடந்து செல்லாத பாதசாரிகளிடம் அபராதத்தை அறவிடுகின்றனர் என்று அவர் கூறினார்.



பொலிஸார் ஒரு நாளில் எவ்வளவு பணத்தை அறவிட வேண்டும் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அரசின் பொறுப்பானது வரி அறவிடுவதும், அபராதம் விதிப்பதுமல்ல. நாட்டின் உற்பத்தியாளர்களை ஊக்குவித்து, உரிய விலையை வழங்க வேண்டும் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ச)

## மரண தண்டனை விதிக்கப்பட்ட ஆறு பேருக்கு விடுதலை

கொழும்பு,ஜூன்5

அநுராதபுரம் நீதிமன்றால் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஆறு பேருக்கு மேன்முறையீட்டின் அடிப்படையில் விடுதலை கிடைக்கப்பெற்றுள்ளது.

மரண தண்டனை விதிதிக்கப்பட்ட ஆறு பேரும் இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்திருந்தனர். இந்த மனுவை பரிசீலனை செய்த மேன்முறையீட்டு நீதிவான்கள் குறித்த ஆறு பேரும் குற்றமற்றவர்கள் என்று தீர்ப்பளித்துள்ளனர்.

இந்த மனுவை ரஞ்சித் பெரேரா மற்றும் நளின் டி சில்வா ஆகிய நீதிவான்கள் பரிசீலனை செய்தனர்.

1995ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி நபர் ஒருவரை கொடூரமான முறையில் தாக்கிப் படுகொலை செய்த குற்றத்துக்காக குறித்த ஆறு பேருக்கும் அனுராதபுரம் நீதிமன்றம் மரண தண்டனை விதித்திருந்தது.

சம்பவம் தொடர்பில் நேரில் கண்ட சாட்சி ஒருவரே எனவும் உயர் நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் அந்த சாட்சியாளரும் உயிரிழந்துள்ளது விட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சாட்சியாளரின் சாட்சியத்தின் அடிப்படையிலேயே மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்தச் சாட்சியை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதற்கமைய மரண தண்டனை விதிக்கப்பட்ட ஆறு பேரும் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (ச)

## போலி மருத்துவப் பட்டம்: பெற்றுக் கொடுத்தால் தண்டனை

கொழும்பு,ஜூன்5

இலங்கையில் போலி மருத்துவர்களின் செயற்பாடுகள் அதிகரித்து வருவதனால், போலி மருத்துவர்களுக்கான பட்டங்களைப் பெற்றுக்கொடுப்போருக்கு தண்டனையை அதிகரிக்கும் வகையில் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படவுள்ளன.

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் காமினி சமரநாயக்கவின் தகவல்படி, இவ்வாறானவர்களுக்கு இதுவரை விதிக்கப்பட்டு வந்த 250 ரூபா அபராதம் இனிமேல் ஒரு லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. இலங்கையில் பல்வேறு நிறுவனங்கள், போலி மருத்துவர்களுக்கான பட்டங்களை வழங்கி வருவதாக தகவல் கிடைத்துள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவைத் தவிர வேறு நிறுவனங்களினால் மருத்துவப் பட்டங்கள் வழங்கமுடியாது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை வெளிநாடுகளுக்குச் சென்று மருத்துவப்பட்டம் பெறுவோர் தொடர்பில் ஆராயப்படவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (ச)

## மதகுருமாருக்கு நாடாளுமன்றத் தடையா? நேரடி விவாதம் நடத்த வேண்டும்

### ஜாதிக ஹெல உறுமய தேரர் கூறுகிறார்

கொழும்பு,ஜூன்5

மதகுருமார் அரசியலில் ஈடுபடுவதைத் தடுக்கும் சட்டமூலம் குறித்து நேரடி விவாதமொன்றை நடத்த வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓபல்பே சோபித்த தேரர் கோரியுள்ளார்.

மதகுருமார் நாடாளுமன்ற உறுப்பினர்களாக வருவதைத் தடுக்கும் வகையிலான சட்டமூல யோசனையை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இந்தநிலையில் இந்த யோசனை விடுதலைப் புலிகளின் அனுதாபிகளினால் கொண்டு வரப்பட்டது என்று சோபித்ததேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பௌத்த மதத்தை காப்பது மற்றும் நாட்டின் பாதுகாப்பை விரும்பாதவர்களே இந்த யோசனையை முன்வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த யோசனைக்கு பின்னால் சிகரெட் விற்பனையாளர்கள், மதுபான விற்பனையாளர்கள் மற்றும் விடுதலைப்புலிகளின் அனுதாபிகளே உள்ளனர்.

இதேவேளை விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கும் போரில் ஜாதிக ஹெல உறுமயவின் பிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு உறுதுணையாக இருந்தனர் என்றும் சோபித்த தேரர் தெரிவித்தார். (ச)

## சவுதி அரசு நிதியுதவி

கொழும்பு,ஜூன்5

இலங்கையில் தாதியர் பயிற்சி நிலையம் ஒன்றை நிறுவ சவூதி அரேபிய அரசு நிதி வழங்கவுள்ளது. இது ஓர் இணைந்த செயற்றிட்டமாக முன்னெடுக்கப்படும் என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்தச் செயற்றிட்டம் தொடர்பான ஒப்பந்தம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் அமல் சேனாலங்காதிகார மற்றும் சவூதி சுகாதார முதலீட்டு நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி மொஹமட் அமீன் ஆகியோருக்கு இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு அமைவாக 40 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வாகன விபத்தில் பிக்கு உயிரிழப்பு

கொழும்பு,ஜூன்5

கொழும்பு - காலி பிரதான வீதியின் கொஸ்கொட பகுதியில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 6.50 மணிக்கு இடம்பெற்ற வாகன விபத்தில் பௌத்த பிக்கு ஒருவர் உயிரிழந்துள்ளார். குறித்த பகுதியில் பயணித்த வான் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியொன்றுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் லொறியின் சாரதி, வானில் பயணித்த மூன்று பெண்கள் மற்றும் 8 வயது சிறுமி ஆகியோர் காயமடைந்துள்ளனர். விபத்து இடம்பெற்ற போது லொறியின் அருகில் நின்ற பௌத்த பிக்குவே உயிரிழந்தவராவார். (ச)

## பொலிஸாரால் சித்திரவதைகள்: மறுக்கிறார் பேச்சாளர்

கொழும்பு,ஜூன்5

பொலிஸார் சித்திரவதைகளை மேற்கொள்வதில்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பொலிஸ் நிலையங்களில் சந்தேகநபர்கள் துன்புறுத்தப்படுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் இல்லை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைப் பொலிஸ் நிலையங்களில் சித்திரவதைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன என்று பொது மக்கள் தவறான ஒரு [illegible] மேற்கொள்கின்றனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தலைமறைவான சந்தேகநபர்களைக் கைது செய்யும்போது பொலிஸார் சில கடுமையான நடவடிக்கைகளை எடுக்க நேரிடும். எனினும், இவற்றைச் சித்திரவதைச் சம்பவங்களாக ஒரு போதும் கருத முடியாது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சந்தேகநபர்களை 48 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து விசாரணை செய்யக் கூடிய வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படுவது ஆரோக்கியமானது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
02.01.1937

ஆண்டவன் அடியில்
08.06.2009

## அமரர் வன்னித்தம்பி சின்னத்துரை

(ஓய்வுபெற்ற அரச நில அளவையாளர்)

திதி:- பிரதமை

ஆண்டுகள் மூன்று மறைகிறது நீங்கள் வானுறை தெய்வமாகி,
ஆனாலும் உங்கள் அன்பு நினைவுகள் மட்டும்
எங்கள் மனதை விட்டு அகலவில்லையே!
அன்புடன் அறிவுரைகள் பல கூறி எமக்கெல்லாம்
வழிகாட்டியாக இருந்த எங்கள் அன்புத் தெய்வமே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் நித்தமும்
உங்கள் நினைவுகள் நிழலென எங்களுடன் தொடர்ந்து வரும்.
தாங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.5, சேர்.பொன்.இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (19001) (2.6.7) – குடும்பத்தினர்.

# நினைவலைகள்

31 ஆம் நாள் நினைவு | 57 ஆம் நாள் நினைவு



04.03.1933
06.05.2012

## யாக்கோப் கஸ்மீர்

மலர்வு
உதிர்வு



10.02.1936
10.04.2012

## கஸ்மீர் மாசிலாமணி

அன்பு அப்பா அம்மாவே உங்கள்
அன்புப் பார்வை எங்கே
அரவணைத்த கரங்கள் எங்கே?
மகிழ்விக்கும் வார்த்தை எங்கே
எல்லாம் மறைந்து ஒரு மாதம் கழிந்ததையா

05.06.2012 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மேற்படி நினைவலைகளிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.132, வன்னேரிக்குளம், கிளிநொச்சி. – குடும்பத்தினர். (19256)(2-6-7)

## தவறிவிட்டது

NPVP 5809 இலக்க மோட்டார் சைக்கிளின் இலக்கத்தகடு நேற்று முன்தினம் (03.06.2012) தெல்லிப்பழையிலிருந்து மல்லாகம் நிலாவரை புத்தூர் வீதி ஊடாக மீசாலைக்கு வரும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0779680040, 0773242817 அல்லது சாவகச்சேரி டச்சுவீதி, திருக்கணித பதிப்பகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(f/2312)(2-6-7)

## வீடு வாடகைக்கு

A- 9 வீதிக்கும், கேரதீவு வீதிக்கும், இடையில் கைதடிப் பிள்ளையார் கோயிலில் இருந்து 1 km தூரத்தில் 5 அறைகளைக் கொண்ட வீடு அலுவலகமாகவும்/களஞ்சியமாகவும் பயன்படுத்த உகந்தது.

தொடர்பு : 0777493841

(18966)(2-6-7)

## தவறிவிட்டது

நெயினா முகமட் முகமட் மன்சூர் என்பவரின் சாரதி அனுமதிப்பத்திரம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 0777679188

(18962)(2-6-7)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
16.01.1936

மறைவு
06.05.2012

## அமரர் சின்னையா பொன்னுத்துரை

கடந்த 06.05.2012 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் சின்னையா பொன்னுத்துரை அவர்களின் மறைவுச் செய்திகேட்டு பல வழிகளிலும் ஆறுதல் கூறி எமது துயரில் பங்கேற்ற அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு வீட்டுக் கிருத்திய நிகழ்வும், மதிய போசன நிகழ்வும் இன்று (05.06.2012) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மட்டுவில் தெற்கு.
சாவகச்சேரி. – குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சரவணமுத்து பரமநாதன்



சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த சரவணமுத்து பரமநாதன் 03.06.2012 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2012) அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி. (14726)(2.6.7) தகவல்: குடும்பத்தினர்.

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 01 - 07 - 1939

உதிர்வு 20 - 05 - 2008



மலர்வு 19 - 09 - 1941

உதிர்வு 04 - 05 - 2008

## அமரர் இராசையா முருகேசு

திதி:- அபரபக்க பிரதமை

## திருமதி கமலாதேவி முருகேசு

திதி:- அபரபக்க சதுர்த்தசி

எமக்கு வழிகாட்டிய தெய்வங்களே...
நீவிர் மறைந்து ஆண்டுகள் நான்கு ஆனதுவோ...
ஆறுதில்லை எமது நெஞ்சம்...
உங்கள் இழப்பைக் கண்டு...

வாழ்வில் இணை பிரியாது வாழ்ந்தது போல்,
சாவிலும் இணைபிரியாமல் இருந்து - எமக்கு
ஒற்றுமை பற்றி வழிகாட்டிய எமது தெய்வங்களே....
உமை நினைக்கும் போது கண்கள் பனிக்கின்றதே...

எமது நல் வாழ்விற்காக விண்ணிலிருந்து
எம்மை ஆசீர் வதியுங்கள்

ஆத்தியடி ஒழுங்கை,
கச்சாய் வீதி, கொடிகாமம். – குடும்பத்தினர். (14725)(2,6,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய வானிலை

31°C

| நகரம் | வானிலை | பகல் | இரவு | காற்று |
|---|---|---|---|---|
| யாழ் | | 31°c | 28°c | |
| மன் | | 30°c | 28°c | |
| வவு | | 33°c | 26°c | |
| முல் | | 32°c | 27°c | |
| கிளி | | 32°c | 27°c | |

பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# கிராம சேவையாளர் நியமன வயது இனி 40 ஆக அதிகரிக்கும்

## பொது நிர்வாக அமைச்சு திட்டம்

அரசு கிராமிய பிரதேசங்களை அபிவிருத்தியில் கட்டியெழுப்பும் துரித நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்ற இந்தக் காலகட்டத்தில் கிராம சேவகர்களின் பணி முக்கியமாகவுள்ளது.

கிராம சேவகர்களாக நியமிக்கப்படுவோரின் வயதெல்லையை 21 முதல் 40 வயது வரை அதிகரிப்பதற்குப் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பில் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளத் தீர்மானித்துள்ளதுடன் அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டு வருவதாக அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார். அத்துடன் புதிதாக கிராம சேவகர்களை நியமிக்கும்போது ஆண்களுக்கு 80 வீத வாய்ப்பையும் பெண்களுக்கு 20 வீத வாய்ப்பையும் வழங்க உத்தேசித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் 3000இற்கும் மேற்பட்ட கிராம சேவகர் வெற்றிடங்கள் நிலவுவதாகப் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்தது. அரசு கிராமிய பிரதேசங்களை அபிவிருத்தியில் கட்டியெழுப்பும் துரித நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்ற இந்தக் காலகட்டத்தில் கிராம சேவகர்களின் பணி முக்கியமாகவுள்ளது. இதனைக் கருத்திற் கொண்டே கிராமசேவகர் வெற்றிடங்களைத் துரிதமாக நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது என்று அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

கிராம சேவகர்களின் வயதெல்லை சம்பந்தமாக கிராம சேவை அதிகாரிகளின் சங்கம் பல்வேறு வேண்டுகோள்களை முன்வைத்தது. அதனைக் கருத்திற் கொண்டே 21 வயது முதல் 40 வயது வரை வயதெல்லையை அதிகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந)

## அதிபர் பதவி வெற்றிடம்

வலிகாமம், ஜூன் 5

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட யா/சண்டிலிப்பாய் அ.த.க. பாடசாலைக்கு அதிபர் பதவி வெற்றிடமாக உள்ளது. இந்தப் பதவிக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 3 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1, 2- I, 2- II பட்டதாரி ஆசிரியரைச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மேற்படி பதவிக்கு வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களே விண்ணப்பிக்க முடியும். விரும்புவோர் விண்ணப்பப்படிவத்தை இன்று செவ்வாய்க்கிழமை வலயக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## யாத்திரிகர்கள் விழிப்புடன் செயற்படக் கோரிக்கை

சமய வழிபாட்டு யாத்திரை காலங்களில், விழிப்புடன் செயற்படுமாறு சுகாதார அமைச்சின் அவசர இடர் தவிர்ப்பு பிரிவு பொது மக்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த காலப்பகுதிகளில், அதிக மான விபத்துக்கள் இடம்பெறுவதைச் சுட்டிக்காட்டியே, அமைச்சு இந்த அவசர கோரிக்கையை விடுத்துள்ளது.

வாகன விபத்துக்கள் மற்றும் நீரில் மூழ்கி மரணமாவது தொடர்பான சம்பவங்கள் கடந்த காலங்களில் அதிகமாகப் பதிவாகியுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில், பொதுமக்களை அவதானத்துடன் செயற்படுமாறு அமைச்சு கோரியுள்ளது. (ந)

## பலாப்பழ வருகை குறைவு

வடமராட்சி, ஜூன் 5

யாழ். குடாநாட்டில் மாம்பழ, பலாப்பழ சீசன் ஆரம்பமாகியுள்ளது. இந்நிலையில் குடாநாட்டுச் சந்தைகளில் மாம்பழ வகைகளைத் தாராளமாக காணக் கூடியதாக இருக்கின்றது. இந்தக் காலம் பலாப் பழச் சீசனுக்குரிய காலமாக இருந்த போதிலும் அவற்றை அதிக அளவில் காண முடியவில்லை. மாம்பழ, பலாப்பழ உற்பத்திகளுக்கு பெயர் பெற்ற தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கொடிகாமம், சாவகச்சேரி பிரதான சந்தைகளிலிருந்து வடமராட்சிப் பிரதேசத்துக்கு இவை எடுத்து வரப்பட்டு சந்தைகளில் தாராளமாக மாம்பழ, பலாப்பழ உற்பத்திகளுக்குபெயர்பெற்ற தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கொடிகாமம், சாவகச்சேரி பிரதான சந்தைகளிலிருந்து வடமராட்சிப் பிரதேசத் துக்கு இவை எடுத்து வரப்பட்டு சந்தைகளில் தாராளமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (ந-8)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, ஜூன் 5

பருத்தித்துறை நாலாம் குறுக்குத்தெரு புனித அந்தோனியார் தேவாலய வருடாந்தத் திருவிழா நேற்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நற்கருணை வழிபாடும், மறுநாள் 13 ஆம் திகதி புதன்கிழமை காலை பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு மௌலிஸ் அடிகளார் தலைமையில் கூட்டுத் திருப்பலியும் திருச்சொரூப சுற்றுப் பிரகாரமும் நடைபெறும். (ந-8)

* * *

வடமராட்சி, ஜூன் 5

புலோலி, காந்தியூர் வற்றாப்பளை கண்ணகை அம்மன்கோயில் பொங்கல் உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. பொங்கலை ஒட்டி கடந்த 7 தினங்களாகப் படிக்கப்பட்டுவந்த கோவலன் கண்ணகி கதை படிப்பு இன்று காலையுடன் நிறைவு பெறும். (ந-8)

* * *

வடமராட்சி, ஜூன் 5

மந்திகை கண்ணகை அம்மன் கோயில் வருடாந்தப் பொங்கல், காவடித் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இதனை ஒட்டி கடந்த 28 ஆம் திகதி முதல் ஆரம்பமான கோவலன் கண்ணகி கதைப்படிப்பு அதிகாலை சிலம்பு கதை கூறலுடன் நிறைவுபெறும்.

தொடர்ந்து காவடிகள், கரகம் என்பன சூழவுள்ள கோயில்களில் ஆரம்பமாகி இங்கு வந்தடைந்ததும், விசேட பூசை வழிபாடுகளுடன் பொங்கல் நிறைவுபெறும். (ந-8)

* * *

தெல். தென்மேற்கு விழிசிட்டி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய விசாகப்பொங்கல் விழா நாளை புதன்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும். (ந)

* * *

நவாலி, ஜூன் 5

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்த நயினார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று பகல் 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பதினைந்து தினங்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 18 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 19 ஆம்திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந-100)


## மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்



செல்வி ஜெயந்திராதேவி சோமசுந்தரம்
(உபஅதிபர் - யா/ஊரெழு கணேச வித்தியாசாலை)

பணி விவரம்
யா/ நுப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாசாலை - 27.11.89 - 04.02.91
யா/ கோப்பாய் ஆசிரியர் கலாசாலை - 05.02.91 - 31.12.92
யா/ ஊரெழு கணேச வித்தியாசாலை - 01.01.93- இன்று வரை
01.01.2006 - 31.12.2010 வரை பகுதித்தலைவர்
01.01.2011 - 04.06.2012 வரை உபஅதிபர்

ஏற்றமுடன் பணிசெய்து ஆசிரியையாக, பகுதித்தலைவராக, உபஅதிபராக மாணவர்களை நல்வழிப்படுத்தி வழிகாட்டியாய் திகழ்ந்த ஆசிரியையின் ஓய்வு காலம் நலமுடன் அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்

யா/ஊரெழு கணேச வித்தியாசாலை — ஆசிரியர் கழகம்
(F/454)(6-7-8)

## பணியாளர்கள் உடன் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல புடைவை நிலையத்துக்கு ஆண் பணியாளர்கள் உடன் தேவை.
தொடர்பு : 0772284235 (f/455)(2-6-7)

## வாகனங்கள் விற்பனைக்குண்டு

01. டாட்டா கப் (TATA CAP)
02. தபே ரக்ரர் (TAFE TRACTOR)
தரமான நிலையிலுள்ள மேற்படி இரண்டு வாகனங்களும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
0778350478, 0779050213
(18857)(2-6-7)

## ஐந்தாவது ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
12.06.1927
ஆண்டவன் மகிமைக்குள்
05.06.2007

அமரர் முருகுப்பிள்ளை விக்ரர் அரியரத்தினம்

அன்பின் உறைவிடமே!
பாசத்தின் பிறப்பிடமே!
குடும்பத்தின் குல விளக்கே!
நீங்கள் இட்ட வழி தொட்ட நாம்
உங்கள் பணி அரவணைக்கின்றோம்.

நீ.மு:- ஆழியவளை, தாளையடி.
த.மு:- தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை.

— குடும்பத்தினர்.
(சி/452) (2.6.7)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
25.07.1940
மறைவு
08.06.2009
திதி:- 05.06.2012

திருமதி ஈஸ்வரி விஸ்வநாதன்

வாழ்க்கை எனும் பாதையிலே
நீ காட்டிய பாசமெல்லாம்
எமைவிட்டுப் பிரிந்து மூன்றாண்டானதோ
உயிரோடும் உணர்வோடும் கலந்து விட்ட
உங்கள் நினைவலைகள் என்றென்றும்
எம்முடன் நிலைத்திருக்கும்

08.06.2009 அன்று இறைவனடி சேர்ந்த அமரர் திருமதி ஈஸ்வரி விஸ்வநாதனின் மூன்றாம் ஆண்டு நினைவு நாள் இன்று (05.06.2012) செவ்வாய்க்கிழமை 23, பிறவுண் வீதி 2 ஆம் ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

23, பிறவுண் வீதி,
2 ஆம் ஒழுங்கை, கந்தர்மடம்.

நா.விஸ்வநாதன் (கணவர்)
T.P.021 2219175
(18791) (2.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 200 பேருக்கு தொழில் வாய்ப்பு

கந்துரட்ட குடை தனியார் கம்பனியானது தனது புதிய தொழிற்சாலையை ஜூன் மாதம் 01ஆந் திகதி நாவலபிட்டியில் திறந்துவைத்துள்ளதுடன் அமைச்சர் மகிந்தானந்த அலுத்கமகே தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வின்போது கருத்து தெரிவித்த கம்பனியின் தவிசாளர் திரு. எம்.ரி.எம். நௌஷட் நாளாந்தம் அதிகரிக்கும் தேவைக்கு ஏற்றவாறு உற்பத்தியை அதிகரிப்பது இந்த புதிய தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கான நோக்கம் என்று குறிப்பிட்டார்.



கந்துரட்ட உற்பத்திகள் தற்போது மலேசியா, மாலைதீவு மற்றும் மத்திய கிழக்கு சந்தைகளை வெற்றி கொண்டிருப்பதுடன் இங்கிலாந்து உட்பட பல நாடுகளில் உலகில் உயர்தரத்திலான வர்த்தக பெயர்களுக்காக தமது உற்பத்திகளை வழங்கி வருகின்றது.

சந்தையில் இருக்கும் ஏனைய பெரும்பாலான உற்பத்திப் பொருள்களுக்கு போட்டி அடிப்படையிலான இறக்குமதிப் பொருள்கள் தாராளமாக இருந்த போதிலும் குடை உற்பத்தியில் முன்னணி வகிக்க எம்மால் முடிந்துள்ளது. அதேபோன்று ஏனைய தேசிய உற்பத்திகளுக்கும் இறக்குமதி பொருள்களுடன் போட்டியிட்டு வெற்றிபெற முடியுமென அவர் தெரிவிக்கின்றார்.

1978ஆம் ஆண்டு எம்.எச்.எம். தாஜூன் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட கந்துரட்ட நிறுவனம் இன்று எம்.ரி.எம். நௌஷட் அவர்களின் தலைமையிலும் மற்றும் எம்.ரி.எம். நௌபல் அவர்களின் முகாமைத்துவ நெறிப்படுத்தலின் கீழும் இலங்கையில் முன்னோடி உற்பத்தி நிறுவனமாக விளங்குகின்றது.

உள்நாட்டு குடை உற்பத்தியில் முன்னோடியாக ஆரம்பிக்கப்பட்ட கந்துரட்ட நிறுவனம் இதுவரை கம்பளை, கெலிஓயா, வெலிகல்ல தொழிற்சாலைகள் ஊடாக எமது நாட்டின் ஆயிரத்திற்கும் அதிகமான இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கியுள்ளது. நாவலப்பிட்டி புதிய தொழிற்சாலையின் மூலம் 200 பேருக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கவுள்ளது.

# நுகேகொடையில் HUTCH வாடிக்கையாளர் சேவை




HUTCH SHOPS திட்டத்தின் கீழ் HUTCH வாடிக்கையாளர் சேவை நிலையமொன்று நுகேகொடையில் அண்மையில் ஐக்கிய தேசிய க் கட்சி நாடாளுமன்ற உறுப் பினர் ரவி கருணாநாயக்கவி னால் திறந்து வைக்கப்பட்டது.

நுகேகொடை பழைய கெஸ்பேவ வீதி இல 571/1 என்ற விலாசத்தில் புதிய HUTCH SHOPS திறந்து வைக்கப்பட்டதுடன் இவ்வைபவத்திற்கு HUTCH நிறுவனத்தின் பிரதம செயற்பாட்டு அதிகாரி ஆனந்த் பிரகாஷ், விற்பனை பிரிவின் பொது முகாமையாளர் அத்துல திசாநாயக்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை காலி வக்வெல்லயிலும் அண்மையில் HUTCH பாவனையாளர் சேவை நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

புதிய இணைப்புகளை மிக விரைவாக பெற்றுக் கொள்ளல், முற்கொடுப்பனவு பிற்கொடுப்பனவு சேவைகள், விசேட சேவைகள், வாடிக்கையாளரின் சந்தேகங்கள், பிரச்சினைகள் போன்றவற்றுக்கு துரித தீர்வுகளை வாடிக்கையாளர் சேவை நிலையம் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

# செலான் வங்கியின் 'பரிசு மேல் பரிசு' சீட்டிழுப்பின் நான்காவது லட்சாதிபதி

செலான் வங்கியின் 'பரிசு மேல் பரிசு' வெகுமதி வழங்கல் திட்டத்தின் பெப்ரவரி மாதத்திற்கான சீட்டிழுப்பில் மிகவுயர்ந்த பரிசான ரூபா 01 மில்லியனை மத்துகம பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதான ஆசிரியை திருமதி ஈ.ஏ.தயாவதி வென்றெடுத்தார்.

'இவ்வாறான பரிசொன்றை வெற்றிகொள் வேன் என்று நான் ஒருபோதும் நினைத்ததில்லை. எவ்வாறிருந்தபோதிலும் இதனையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்' என்று தயாவதி தெரிவித்தார். கற்பித்தலில் 24 வருடகால அனுபவத்தைக் கொண்டவரான திருமதி எல்பட ஆராச்சிகே தயாவதி - தற்போது மத்துகமவிலுள்ள பந்திய மகாவித்தியாலயத்தில் அரசியல் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியையாக கடமையாற்றுகின்றார். தனது சம்பளக் கொடுப்பனவுக்கான காசோலை கூட செலான் வங்கியிலுள்ள தனது கணக்கிற்கே செல்வதாக அவர் பெருமையுடன் குறிப்பிட்டார்.

கடந்த 12 வருடங்களாக செலான் வங்கியின் மத்துகம கிளையின் வாடிக்கையாளராக திகழ்ந்து வரும் இவர், அங்கு சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக் கணக்குகளை பேணி வருகின்றார். அவர் மேலும் கூறுகையில், 'பரிசாக எனக்குக் கிடைத்த பணம், நிலையான வைப்பாக மீண்டும் செலான் வங்கியையே சென்றடையும். செலான் வங்கி மீது நான் உன்னதமான நம்பிக்கையை வைத்துள்ளேன். மத்துகம கிளையினது மிகச் சிறப்பான வாடிக்கையாளர் சேவைக்காகவும் செயற்றிறனுக்காகவும் அக்கிளை ஊழியர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்' என்று குறிப்பிட்டார்.

# பங்கு கொடுக்கல் வாங்கல்களில் கடும் விதிமுறைகள் அறிமுகம்

மூலதனச் சந்தையின் விதிமுறைகளை மீறுபவர்களுக்கெதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகளை இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு மேற்கொள்ள வேண்டுமென இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக் குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அரித்த விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார். கடந்த சில வாரங்களாக மூலதனச்சந்தை எதிர்நோக்கி வரும் தொடர்ச்சியான பின்னடைவுக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக பலராலும் கருதப்படும் சர்ச்சைக்குரிய தேசிய சேமிப்பு வங்கி த ஃபினான்ஸ் பங்கு கொடுக்கல் வாங்கல் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில், பங்குச் சந்தையில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வது தொடர்பாக இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் மூலம் ஜூன் முதலாம் திகதி முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கடினமான நடைமுறைகளை கருத்தில் கொண்டு முதலீட்டாளர்கள் பதற்றமான நிலையில் காணப்படுவதாக பங்கு முகவர்கள் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது.

2010ஆம் ஆண்டு ஜூலை மாதத்தின் பின்னர் முதல் தடவையாக அனைத்து பங்கு விலைச்சுட்டெண் 5000 புள்ளிகளை விட குறைவாக பதிவாகியிருந்தமை அவதானிக்க முடிந்தது. கடந்த வெள்ளிக்கிழமை பங்குச் சந்தை நடவடிக்கைகள் நிறைவடையும் பொழுது, அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 4885.18 ஆகவும், மிலங்கா விலைச் சுட்டெண் 4343.48 ஆகவும் அமைந்திருந்தது.

# திருமலையில் பசுப்பால் பதனிடல் நிலையம் திறப்பு

இலங்கை ஒபர் (OfERR&CEYLON) நிறுவனத்தின் பேண்தகு சமூக வர்த்தக அபிவிருத்தி மையம் திருகோணமலை நகரில் 'உதயம் தூய பசுப்பால் பதனிடல் மற்றும் விற்பனை நிலையம்' ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்த நிலையத்தை திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் திருமதி சசிதேவி ஜலதீபன் திறந்து வைத்தார்.

இலங்கை ஒபர் (OFERR&CEYLON) நிறுவனத்தின் தலைவி செல்வி சி.சூரியகுமாரியும் நிகழ்வில் கலந்து கொண்டார்.

திருகோணமலை நகரில் காலை 6 மணிக்கு வீடுகள் தோறும் தூய பசுப்பால் விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை ஒபர் நிறுவனத்தின் மாவட்ட அபிவிருத்தித்திட்டங்களில் ஒன்றாக 'உதயம் தூய பசுப்பால் பதனிடல் மற்றும் விற்பனை நிலையம்' அமைவதாக அங்குரார்ப்பண நிகழ்வில் தெரிவிக்கப்பட்டது.

# புத்தம் புதிய நிசான் 'சனி'

நிசான் வாகனங்களின் ஏகபோக விநியோகஸ்தர்களான அசோஷியேட் மோட்டார்வேய்ஸ் (AMW) பிரைவேற்லிமிட்டட் இன்று இலங்கையில் தமது 11 ஆவது தலைமுறை நிசான் சனி வாகனத்தின் அங்குரார்ப்பணம் குறித்து அறிவித் தது.

அதுகுறித்து தமது கருத்துகளை பகிர்ந்துகொண்ட AMW பொதுமுகாமையாளர் யொஹான் டி ஸொய்சா கருத்து தெரிவிக்கையில், இலங்கையில் மட்டுமல்லாது உலகமெங்கும் மிகப் பிரபல்யமான நிசான் சனி வாகனத்தின் புத்தம்புதிய 11 வது தலைமுறையை அறிமுகப்படுத்துவதில் பெரு மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகின்றோம். இது எமது 11வது தலைமுறை வாகன வகையாகும். இது தொடர்பான பூர்வாங்க அறிவித்தலை வெளியிட்ட நாள்முதல், அதிசயிக்கத்தக்க அளவில் அதிகளவான பின்னூட்டக் கருத்துகளை பெற்றுள்ளோம். புதிய கார் ஒன்றினைக் கொள்வனவு செய்ய விரும்புவோருக்கு நவநாகரிக, நவீன மற்றும் ஆடம்பர அம்சங்கள் நிறைந்த இந்த வாகனம் மிகச்சிறந்த பெறுமதியினை அளிக்கின்றது என்றார்

இந்த 11வது தலைமுறை வாகனத்தின் வடிவமைப்பு மற்றும் நேர்த்தியினையே அனைவரும் முதலில் கவனத்திற்கொள்ளும் அதேநேரம் பயணிகள் அமரும் இடப்பரப்பின் விசாலம் மற்றும் சொகுசு ஆகியனவற்றை பார்வையிடுவதன் மூலமே அதனை உணர்ந்து நம்பிக்கை கொள்ளலாம்.

தானியங்கி 4 கட்ட வேகம் அல்லது கைமுறை 5 கட்ட வேகம் மற்றும் 1.5 லீற்றர் எஞ்சினுடன் கிடைக்கும் புத்தம் புதிய நிசான் சனி, இரட்டை காற்றுப்பைகள் (airbag), முடங்காத பிறேக் வசதி, உங்கள் பாதுகாப்பிற்கான நுண்ணறிவார்ந்த திறவு கட்டமைப்பு, ஸ்டியரிங் வீலில் கட்டமைக்கப்பட்டுள்ள ஓடியோ கட்டுப்பாடு, மற்றும் இதே ரக வாகனங்கள் எதிலும் காணப்படாத சிறப்பம்சமான தனியான பின்புற எயார் கண்டிஷனிங் சாளரங்கள் ஆகிய விஷேட அம்சங்களுடன் உங்களுக்கு கிடைக்கின்றது.

# வரிக்கு முன்பான இலாபம் ரூ.1.2 பில்லியன் பெற்றுக் கொமர்ஷல் கிரடிட் சாதனை

கொமர்ஷல் கிரெடிட்

கொமர்ஷல் கிரடிட் நிறுவனமானது சொத்துத் தளம், வைப்புத் தளம் மற்றும் வரிக்குப் பின்னரான இலாபம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை வெளிப்படுத்தும் வகையிலமைந்த (அண்மையில் முடிவடைந்த) 2011/2012 நிதியாண்டிற்கான தற்காலிக நிதி அறிக்கைகளை பெருமையுடன் வெளியிட்டுள்ளது.

2010/2011 நிதியாண்டில் ரூபா 0.7 பில்லியனாக காணப்பட்ட தேறிய வட்டி வருமானம், பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிதியாண்டில் ரூபா 1.8 பில்லியனாக அதிகரித்ததன் மூலம் 153% வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.

2010/2011 நிதியாண்டில் ரூபா 0.3 பில்லியனாக பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் வரிக்கு முன்னரான இலாபம், இந்நிதியாண்டில் ரூபா 1.2 பில்லியனாக 320% அசாதாரணமானதொரு வளர்ச்சி [illegible] செய்துள்ளது.

கொமர்ஷல் கிரடிட் நிறுவனத்தின் வரிக்குப் பின்னரான இலாபத்தில் பிரமாண்டமானதொரு அதிகரிப்பு எட்டப்பட்டுள்ளது. அதாவது கடந்த நிதியாண்டில் ரூபா 60 மில்லியனாக இருந்த நிறுவனத்தின் வரிக்குப் பின்னரான இலாபம் இந்த நிதியாண்டில் ரூபா 816.5 மில்லியனாக உயர்வடைந்ததன் மூலம் 1,259% அதிகரிப்பினை பதிவு செய்துள்ளது. இலங்கையின் நிதியியல் துறையில் மறைந்துள்ள சாத்தியக்கூறுகளை கண்டறிந்து செயற்படுவதில் கொமர்ஷல் கிரடிட் நிறுவனம் பெற்றுள்ள வெற்றியினை அடிக்கோடிட்டுக் காட்டுவதாக இந்த நிதிப் பெறுபேறுகள் அமைந்துள்ளன.

கொமர்ஷல் கிரடிட் நிறுவனத்தின் சொத்துத்தளமானது 97% இனால் அதிகரித்துள்ளது. அதேநேரம் நிலையான வைப்புத் தளத்திலும் வளர்ச்சியை நிறுவனம் அனுபவித்துள்ளது. அதாவது 2010/2011 நிதியாண்டில் ரூபா 3.8 பில்லியனாக காணப்பட்ட இதனது பெறுமதி ரூபா 6.8 பில்லியனாக 76% வளர்ச்சியை கண்டுள்ளது. கொமர்ஷல் கிரடிட் நிறுவனத்தின் பங்குகள் மீது முதலீடு செய்துள்ள பங்குதாரர்கள் பங்கொன்றுக்கு ரூபா 3.74 என்ற அடிப்படையிலான தொகையினை பங்கு லாபமாக உழைத்துள்ளனர். இதன்பெறுமதி கடந்த நிதி ஆண்டில் ரூபா 0.28 ஆக காணப்பட்டது.

மிகவுயர்ந்த சர்வதேச தராதரங்களிலான சேவைகள் மற்றும் செயற்பாடுகளை நிலைநிறுத்திச் செயற்படுகின்ற முதன்மையான நிதியியல் நிறுவனம் என்ற நற்பெயரினை மேலும் உறுதிப்படுத்தும் வகையில், கொமர்ஷல் கிரடிட் நிறுவனமானது மலேசியாவில் இடம்பெற்ற UDC Business Awards நிகழ்வின்போது ஆசியாவில் மிகச் சிறந்த நிதிக் கம்பனி என்ற விருதினைப் பெற்றுக் கொண் டது.

கொமர்ஷல் கிரடிட் நிறுவனத்தின் மீதான இலங்கை மக்களின் நம்பிக்கை அதிகரித்த வண்ணமுள்ளது.

நிறு வனத்தின் நிலையான வைப்புத் தளம் 2012 மார்ச் மாத முடிவில் ரூபா 6.8 பில்லியனாக 76% இற்கு கணிசமான அளவினால் அதிகரித் தன் மூலம் இந்த நம்பிக்கை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

கூ.ற்கரை வீதியில், கீழ் வீடு 3 அறை, பெரிய கோல் சகல வசதி களுடன் தனிவாசல் வாகனத் தரிப் பிடம் உண்டு. முற்பணம் 5 லட்சம், 25,000 வாடகை.

மேல் வீடு 2 அறை, 2கோல் சகல வசதி களுடன் வாகனத்தரிப்பிடம் தனி வாசல் முற்பணம் 5 லட்சம், 25,000 வாடகை

தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் :
077 0259877, 021 2227893

(18971)(6-7-8)

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு

advt@uthayan.com
0215671111

## வேலைக்கு ஆள்கள் தேவை

லைடன் புடைவை நிலையம் 410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள புடைவைக்கடைக்கு இரு பெண்பிள்ளைகளும் (பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது) மற்றும் 20 - 40 வயதுக்குட்பட்ட ஆண் ஒருவரும் தேவை.
தொடர்பு: நேரில் சமுகமளிக்கவும்

(சி/460)(6-7-8)

## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட 'A' தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றம் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவு செய்யவும்

தொடர்பு:

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2226944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

(18965)

## பதவி வெற்றிடம் (முகாமையாளர் - காப்புறுதி)

பின்லேஸ் இன்சூரன்ஸ் புரோக்கர் (பிறை) லிமிட்டெட் கம்பனி விரைவில் யாழ்ப்பாணத்தில் அதன் கிளையொன்றைத் திறப்பதற்கு உத்தேசித்துள்ளதால் அதன் முகாமையாளராக சேவையாற்றுவதற்கு ஆளுமையும் அனுபவமும் மிக்க ஒருவரை நியமிப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

**தகைமைகள்**

- ஆரம்பத்தில் யாழ்ப்பாணக் கிளையை ஆரம்பித்து அதன் பின்னர் அதன் முகாமையாளராகத் தலைமை ஏற்று நடாத்துவதற்கான ஆற்றல்.
- காப்புறுதி அல்லது வங்கித்தொழிலில் அனுபவம், ஓய்வுபெற்றவர்களும் கவனத்தில் கொள்ளப்படுவர்.
- யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்ட தமிழில் உரையாற்றும் ஆற்றல் உள்ளவர்.
- காப்புறுதித் துறையில் அனுபவம் இருத்தல் கட்டாயமல்ல. எனினும் அது அனுகூலமானதாக இருக்கும்.
- காப்புறுதி வணிகத்தில் வளமிடுவதற்கான (Sourcing) ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிக்கு பேசித் தீர்க்கப்படும் சம்பளத்தை உள்ளடக்கிய கவர்ச்சிகரமான ஊதியங்களுடன் ஏனைய நன்மைகளும் PERQUISITE வழங்கப்படும்.

கனிஷ்ட நிறைவேற்றுப் பதவியினர் Junior Executive, காப்புறுதி எழுதுவினைஞர் மற்றும் Data Entry Operators ஆகிய பதவிகளுக்கான வெற்றிடங்கள் கம்பனி அதன் கொழும்பு, கண்டி, கட்டுநாயக்க மற்றும் யாழ்ப்பாணக் கிளைகளில் மேலே சொல்லப்பட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்களையும் கோருகின்றது. தேர்ந்தெடுக்கப்படும் இளைஞர்களுக்கு மேலே சொல்லப்பட்ட நுழைவு மட்ட பதவிகளில் தேர்ச்சி பெறுவதற்கான கம்பனி அவர்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சியளிக்கும்.

**தகைமைகள்**

- ஆகக்குறைந்தது க.பொ.த (உ/த) பரீட்சையில் மூன்று சித்திகளைக் கொண்டுள்ள பாடசாலையை விட்டு விலகியோர்.
- சிறந்த தகவல் தொழில்நுட்பத் தேர்ச்சிகளும் ஆங்கிலத்தில் பணிகளை மேற்கொள்வதற்கான ஆற்றலும்.
- 23 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.
- காப்புறுதி உயர் தொழில் துறையில் கற்பதற்கு ஆர்வம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் விண்ணப்பிக்கும் பதவியை தலைப்பிட்டு positions@finlays.lk என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புதல் விரும்பத்தக்கது. இன்றேல், உங்கள் விண்ணப்பங்களை சான்றிதழ்களின் பிரதிகள், இரண்டு உறவினர் அல்லாத Referees களின் பெயர்கள் ஆகியவற்றுடன் இவ்விளம்பரம் பிரசுரிக்கப்படும் நாளிலிருந்து 10 நாட்களுக்குள் எமக்குக் கிடைக்கக்கூடியதாக தபால் மூலம் அனுப்பி வைக்கலாம். விண்ணப்பத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**HEAD OF HUMAN RESOURCE DEVELOPMENT**
**Finlays Colombo PlC**
**186, Vauxhall Street, Colombo 02.**
**www.finlays.lk**

(சி/639)

## வருந்துகின்றோம்



நேற்றைய (04.06.2012) உதயனின் 20 A பக்கத்தில் வெளியான **திருமதி அன்னம்மா ஐயாத்துரை யின்** மரண அறிவித்தல், மற்றும் பக்கம் 4 Aயில் பிரசுரமான அன்னாரின் மறைவு குறித்த கண்ணீர் அஞ்சலி என்பவற்றில் அவரது புகைப்படத்துக்குப் பதிலாக தொழில் நுட்பத் தவறு காரணமாக மற்றொருவரது நிழற்படம் பிரசுரமாகிவிட்டது. இத் தவறு காரணமாக விளம்பரதாரருக்கு ஏற்படக்கூடிய மன உளைச்சலுக்கு எமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலே பிரசுரமாகியுள்ள நிழற்படமே காலஞ்சென்ற **திருமதி அன்னம்மா ஐயாத்துரையின்** நிழற்படமாகும். தகவல் தந்த மகன் திரு.ஐ.கமலநாதன் (ஓய்வு பெற்ற ஆசிரியர், யாழ்.இந்துக்கல்லூரி) என வாசிக்கவும்.

- ஆசிரியர்.

(சி/459)(2.6.7)

## படிவம்

2013 ஆம்ஆண்டில் அனைத்து அரசாங்கப் பாடசாலைகளிலும் முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்தலுக்கான விண்ணப்பப் படிவம் விற்பனைக்கு உண்டு.

பாரதி பதிப்பகம்
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்

(சி/458)(6-7-8)

## காணி விற்பனைக்கு

கச்சாய் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகில், கச்சாய் தோட்டம் மாரியான் காடு என்னும் 17 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட தென்னை பயிரிடக்கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 0775227107

(19963)(2-6-7)

## கோழிப்பண்ணை விற்பனைக்கு (நவாலி வடக்கு)

இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட கோழிகள் வளர்க்கக்கூடிய நவீன வசதிகளுடனமைந்த அலுவலகம், பாதுகாவலர் அலுவலகம் உட்படத் தரமான இடவசதி கொண்ட கோழிப்பண்ணை விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :
0778350478, 0779050213

(18958)(2-6-7)

## வேலைக்கு ஆள் தேவை

*யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள சுய விருப்பத் தெரிவு முறையில்* **(Self Selection)** *எனும் எமது பிரபல ஆடையகத்துக்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை. அனுபவம் தேவையில்லை. யாழ்.மாநகரசபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.*

*தகைமை:- O/L, A/L*

மற்றைய விவரங்கள் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புக்கு: **0775578966**

(18956)(2-6-7)

## மரண அறிவித்தல்

### யோசேப் பேரின்பம்



கோப்பாய் தெற்கு, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப் பேரின்பம் நேற்றுமுன்தினம் (03.06.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(18959)(2.6.7)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| அன்னை மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 28 | 05 |
| ★ | ★ |
| 12 | 06 |
| ★ | ★ |
| 1950 | 2009 |



அமரர் சவிரிமுத்து மரியதாஸ்
(பாலா)

மூன்று ஆண்டுகள் ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும், பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள் நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

சந்திரன், சூரியா
குடும்பத்தினர், ஊர்காவற்றுறை

உங்கள் நினைவுடன்
விமலா (மனைவி ),
பிள்ளைகள்
சுவிஸ்

(18967)(6.7.8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# திருமண அழைப்பு

நிகழும் மங்களகரமான நந்தனவருடம் வைகாசி மாதம் 26 ஆம் நாள் [08.06.2012] வெள்ளிக்கிழமை காலை 09.01 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள உத்தரட்டாதி நட்சத்திரமும் சதுர்த்தியும் கூடிய சுப முகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புதல்வன்
திருநிறை செல்வன்
**அஜந்தகுமார்**
அவர்களுக்கும்



எமது கனிஷ்ட புதல்வி
திருநிறை செல்வி
**சுகந்தினி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு "ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில்" திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்:- மணமகன் இல்லத்தில் 10.06.2012
வரவேற்புபசாரம்:- 11.06.2012 திங்கட்கிழமை 3.00 மணிக்கு மணமகள் இல்லத்தில்
தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

(18976)(2-7-6)

**திரு.திருமதி பாலசிங்கம்,**
**செல்லாச்சி அம்மையார் வீதி,**
**சுன்னாகம்.**
0778012214



(இரு வீட்டார் அழைப்பு)

**திருமதி வெற்றிவேலாயுதம் காந்திமதி**
வெற்றிவேலாயுதம் சுதர்சன்,
திரு. திருமதி கதிர்காமநாதன் சாரதா
விஜயபவான்,இல்லம், நீர்வேலி வடக்கு.

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர் மா.சிறீதரன் அவர்களின் அன்புத்தாய்


## *மார்க்கண்டு சரஸ்வதி*

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள்
மாணவர்கள், ஊழியர்கள்
யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய்

(18975)(6-8)

# கண்ணீர் அஞ்சலி



திருநெல்வேலி பழங்கிணற்றடி அருள்மிகு ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயச் சப்பரத்திருவிழா உபயகாரரும் மேற்படி ஆலயத்தொண்டருமான ஜெகதீஸ்வரன்[ஜெகன்] அவர்களின் அன்புத்தந்தை

## கந்தையா செல்லத்துரை

அவர்கள் இறைபதம் எய்தியமைக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கை ஆக்குகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருநெல்வேலி பழங்கிணற்றடி
ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்.

# கண்ணீர் அஞ்சலி

எமது அன்பு நண்பன் சுதாகரின் பாசமிகு தந்தை

## சுப்பையா குணரட்ணம்

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரது பிரிவினால் ஆழ்ந்த துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



நண்பர்கள்
(கொய்யாத்தோட்டம்)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

வேலைக்கேணி கந்தசாமி கோயில் அருகில் மட்டுவில் தெற்கில் 4 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு
தொடர்பு- 0113137225-
0776647274

## காணி விற்பனைக்கு


காங்கேசன்துறை வீதி, கோண்டாவில் மேற்கில் துரை வீதிக்கு அருகில் உள்ள ஒழுங்கையில் 1½ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. வீடு கட்டுவதற்கு உகந்ததாகும்.

(18977)(6-8)

தொடர்பு : 077 6669962,
077 7158327

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 1966 | | 2011 |
| * | | * |
| 12 | | 05 |
| * | | * |
| 08 | | 18 |



அமரர் சுப்பிரமணியம் அரியரத்தினம்

ஆண்டொன்று கடந்த பின்னும் ஆறவில்லையப்பா எம் துயரம். உங்கள் பாச நினைவுகள் -கண்ணீர் துளிகளாய் விழிகளை நிரப்புகின்றன-

பத்தர் கேணியடி, காரைநகர்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
ஈரவிழிகளோடு குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## *சின்னையா விஸ்வலிங்கம்*

ஓய்வுபெற்ற அதிபர், பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்)
சென்.ஜோன்ஸ் பொஸ்கோ (ஹற்றன் வலந்தலை அமெரிக்கன் மிஷன் (காரைநகர் ஆசிரியர்)



சுழிபுரத்தை பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா விஸ்வலிங்கம் (இளைப்பாறிய அதிபர்) கடந்த 29.05.2012 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா- சீதேவி தம்பதியரின் அருமைப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரி- வைரவி தம்பதியரின் மருமகனும் இளைப்பாறிய ஆசிரியை தெய்வானையின் அன்புக் கணவரும் ஸ்ரீஸ்கந்தராஜா (கனடா), குகதாசன் (கனடா), முருகதாசன் (கனடா), மோகனதாசன் (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும் கலாதேவி, மஞ்சுளா, மேகலா, கலாரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனும் கபிநாத், ஷர்மி, கௌசிக், கௌதம், நரேன், மதன், கஜன், சஹானா, பிரவீன் ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 01.06.2012 (வெள்ளிக்கிழமை), 02.06.2012 (சனிக்கிழமை) மாலை 5-9 மணி வரை பார்வைக்காக வைக்கப்பட்டு Chapel ride Funeral home) இல் (8911 wwddine avenue markham) வைக்கப்பட்டு 03.06.2012 (ஞாயிற்றுக்கிழமை) கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

**கந்தரோடை,**
**சுன்னாகம்**
தொலைபேசி இலக்கம்:-
4167730691(Canada)

(18979)

தகவல்,
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
16.04.1942

மறைவு
06.05.2012

## அமரர் திருநாவுக்கரசு மகேஸ்வரி

**கடந்த 06.05.2012 அன்று இறைபதம் எய்திய எமது குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்தியம் இன்று (05.06.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

69, 5 ஆம் ஒழுங்கை, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**தி.உதயகுமார் (மகன்)**
**- குடும்பத்தினர்-**

(18972) (2.6.7)

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆருயிர் நண்பன் தீனபந்
ரிஷ்யந்தன் அவர்களின் அன்புத் தந்தை

## பஞ்சரத்தினகோபால் தீனபந் (வர்த்தகர்)

அவர்கள் நேற்று (04.06.2012) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு துயரடைவதோடு அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நண்பர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் தாக்கப்பட்ட சம்பவம்; வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஜூன் 5

வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலய அதிபர் எஸ்.நேசராஜா, அலுவலகத்தில் வைத்துத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக உரிய விசாரணைகளை மேற்கொள்வதற்குக் கல்வி அதிகாரிகள் பின்னடிக்கிறார்கள் என்று கூறி நாளை புதன்கிழமை வவுனியாவில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

வவுனியா கல்வி வலயத்துக்கு முன்பாக பிற்பகல் 2 மணிக்கு இந்தக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளதாகச் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

அதிபர் எஸ்.நேசராஜா இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா மாவட்டக் கிளையின் பொருளாளருமாவார். இவர் கடந்த 31 ஆம் திகதி வியாழக்கிழமை அதிபர் அலுவலகத்தில் கடமையிலிருந்த போது பிறிதொரு பாடசாலையின் மாணவர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

வவுனியா கோமரசன்குளம் மகாவித்தியாலய உயர்தர மாணவர்களாலேயே அதிபர் தாக்கப்பட்டார் என்று தெரியவந்துள்ளது. கோமரசன்குளம் மகா வித்தியாலய மாணவர்கள் பத்துப் பேரை அதே பாடசாலை அதிபர் இடைநிறுத்தியுள்ளார்.

இடைநிறுத்தப்பட்ட பாடசாலை மாணவர்களை மீளவும் கற்றல் நடவடிக்கையில் ஈடுபடுத்தக் கோரியும், அதிபருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் வவுனியா வலயக் கல்விப் பணிப்பாளரிடம் முறைப்பாடும் வேண்டுகோளும் விடுக்கப்பட்டன.

ஆசிரியர் தொழிற்சங்கம் என்ற ரீதியில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா மாவட்டக் கிளையின் பொருளாளரான எஸ்.நேசராஜாவே இந்த முறைப்பாட்டைச் செய்திருந்தார்.

இந்தப் பின்னணியிலேயே எஸ்.நேசராஜா மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலின் பின்னணியிலுள்ளவராகக் கருதப்படும் வவுனியா கோமரசன்குளம் மகா வித்தியாலய அதிபருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குக் கல்வி அதிகாரிகள் பின்னடித்து வருகின்றனர் எனக் கூறும் ஆசிரியர் சங்கம், உரிய விசாரணைகள் இதுவரை இடம்பெறவில்லை எனவும் குற்றஞ்சாட்டியுள்ளது.

கோமரசன்குளம் அதிபருக்கு எதிராக ஏற்கனவே உள்ள பல்வேறு முறைப்பாடுகள் உரிய முறையில் விசாரணை மேற்கொள்ளப்படாமல் கிடப்பில் உள்ளன. கல்வி அதிகாரிகள் தமக்கு வேண்டியவர்களைப் பாதுகாத்து வருகின்றனர். அடாத்தாக வன்முறையாக செயற்படுபவர்கள் மீது கல்வி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கத் தவறின் வடக்கின் கல்வி நிலை மேலும் பின்னடைவைக் காணும்.

எனவேதான் அதிபர் எஸ்.நேசராஜா மீது தாக்குதல் நடத்திய விடயம் தொடர்பாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுத் தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதனை வலியுறுத்தியே வவுனியாவில் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளோம் என மேலும் தெரிவித்தார் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின்.

(க-3)

## ஆயருக்கு எதிரான அமைச்சரின் கருத்துக்கள் முக்கிய பகுதிகள் நீக்கப்பட்டு ஒளிபரப்பு

### மக்கள் அதிருப்தியும் ஆத்திரமும்

மன்னார், ஜூன் 5

மன்னார் ஆயருக்கு எதிராக அமைச்சர் றிசாத் பதியுதீனால் தெரிவிக்கப்பட்ட கடுமையான கருத்துக்களின் முக்கிய பகுதிகள் நீக்கப்பட்டுத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யப்பட்டுள்ளமை தொடர்பாக இங்குள்ள பலரும் அதிருப்தியும், ஆத்திரமும் கொண்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் மன்னாரில் கேபிள் தொலைக்காட்சியூடாக சன் தொலைக்காட்சி அலைவரிசையில் அமைச்சரின் உரை ஒளிபரப்புச் செய்யப்பட்டது. அதில் பல வசனங்கள் நீக்கப்பட்டும், மன்னார் ஆயர் தொடர்பில் கடுமையாகக் கூறப்பட்ட விடயங்கள் தணிக்கை செய்யப்பட்டும் ஒளிபரப்புச் செய்யப்பட்டிருந்தது. இந்த ஒளிபரப்பு தொடர்பாகப் பலரும் அதிருப்தியும் ஆத்திரமும் கொண்டுள்ளனர்.


மன்னார் ஆயர் தொடர்பில் கடுமையாகக் கூறப்பட்ட விடயங்கள் தணிக்கை செய்யப்பட்டும் ஒளிபரப்புச் செய்யப்பட்டிருந்தது

உண்மை நிலையை மூடி மறைக்கும் இழி செயல் இது வெனப் பலர் இதற்குக் கண்டனமும் தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க, கடந்த வருடம் மன்னாரில் இடம்பெற்ற வெள்ளம் காரணமாக மன்னார் நகரில் இயங்கி வந்த கேபிள் தொலைக்காட்சிச் சேவையொன்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் எஸ்.வினோநோகராதலிங்கம் ஆகியோரது கருத்துக்களை ஒளிபரப்புச் செய்தது. தற்போது குறித்த ஒளிபரப்புச் சேவை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(க-12)

## மரக் கடத்தலில் ஈடுபட்டோர் மாட்டினர் பொலிஸாரிடம்




வாழைச்சேனை, ஜூன்5

வாகரை - மதுரங்குளம் காட்டில் சட்டவிரோதமாக வெட்டப்பட்டு விற்பனைக்காக எடுத்துச் செல்லப் பட்ட ஒரு தொகை முதிரை மரக் குற்றிகளை வாழைச்சேனைப் பொலி ஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாகத் தறிக்கப்பட்ட மரக்குற்றிகள் கொண்டு செல்லப்படுவது தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலேயே பெறுமதிமிக்க முதிரை மரக்குற்றிகளைச் சுற்றுச் சூழல் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.எஸ்.எம்.காலிதின் தலைமையிலான பொலிஸ் குழுவினர் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை மரக்குற்றிகளுடன் வாழைச்சேனை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

(ச)

## மாணவர்களின் மொழி விருத்தியில் பெற்றோரின் பங்களிப்பு அவசியம்

### ஆரம்பப்பிரிவு ஆசிரிய ஆலோசகர் கருத்து

அக்கராயன், ஜூன் 5

மாணவர்களின் மொழி விருத்தியில் பெற்றோர்களின் பங்களிப்பு அதிகளவில் இருக்க வேண்டும் எனக் கிளிநொச்சிக் கல்வி வலய ஆரம்பப்பிரிவு ஆசிரிய ஆலோசகர் திருமதி வசந்தா சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில் நடைபெற்ற மொழித் திறன் விருத்திப் பாசறை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தின் கற்றல் செயற்பாடுகள் நன்றாக அமைந்திருப்பதையிட்டு மகிழ்வடைகின்றோம். கிளிநொச்சியில் உள்ள பாடசாலைகளுக்கு நாம் செல்கின்ற போது அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்குச் சென்று கற்றல் செயற்பாடுகளைப் பாருங்கள் என்று ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களிடம் கூறுவோம். அந்த அளவுக்கு இங்கு கற்றல் செயற்பாடுகள் நன்றாக உள்ளன.

மேலும் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தின் கல்விச் செயற்பாடுகள் வளர்ந்து வருவதையிட்டு வலயத்தின் சார்பாக நான் பாராட்டுகின்றேன்.

இன்றைய நிகழ்வைப் பொறுத்தவரையில் மாணவர்கள் எவ்வாறு வகுப்பறையில் செயற்படுகின்றார்கள் என்பதைப் பெற்றோர்கள் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். மொழி விருத்திக்காக ஆசிரியர்கள் இப்பாசறையை உருவாக்கியிருந்தார்கள். மொழிவிருத்தியில் மாணவர்கள் எவ்வாறு செயல்படுகிறார்கள் என்பதை பெற்றோர்கள் அறிந்து கொள்வதற்கும் இது வொரு நல்ல நிகழ்வு என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-18)

## யோகபுரம் மகா வித்தியாலயத்தில் சிறப்பான பொன்விழா நிகழ்வுகள்



முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

துணுக்காய், ஜூன் 5

முல்லைத்தீவு மாவட்டம் யோகபுரம் மகாவித்தியாலயத்தின் 50 ஆம் ஆண்டு பொன்விழா நிகழ்வுகள் கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் ஆரம்பமாகிச் சிறப்பாக நடைபெற்றன.

பாடசாலை அதிபர் த.யோகானந்தராசா நிகழ்வுக்குத் தலைமை வகித்தார். முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக துணுக்காய் உதவி அரச அதிபர் சி.குணபாலன், வவுனியா கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி சிதம்பரநாதன், துணுக்காய்ப் பிரதேச செயலகத்தின் உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி சா.சிறிஸ்கந்தராசா, சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் பாறூக், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சுந்தரமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.

தேசியக் கொடியை அரச அதிபரும், பாடசாலைக் கொடியைப் பாடசாலை அதிபரும் ஏற்றி வைத்தனர். துணுக்காய் உதவி அரச அதிபர் நாடாவை வெட்டி பிரதான நுழைவாயிலைத் திறந்து வைத்தார்.

பழைய மாணவர் சங்க உறுப்பினர்களான த.ஜெயந்தன், திருமதி ம.சின்னத்துரை ஆகியோர் பழைய மாணவர்களால் அமைக்கப்பட்ட மதிலைத் திரைநீக்கம் செய்து வைத்தனர்.

சுவிஸ் பழைய மாணவர்களால் நிர்மாணிக்கப்பட்ட நுண்கலை மண்டபத்தை வவுனியா கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதி சிதம்பரநாதன் திரை நீக்கம் செய்து திறந்து வைத்தார். தலைமையுரையைத் தொடர்ந்து வரவேற்புரையை உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சா.சிறிஸ்கந்தராசா நிகழ்த்தினார்.

ஆசிரியர்களை [illegible] குருக்களான [illegible] உருத்திரமூர்த்தி அருட்தந்தை தயாபரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரைகளைத் துணுக்காய் உதவி அரச அதிபர் சி.குணபாலன், ஓய்வு பெற்ற அதிபர் புவனேஸ்வரி நடராசா, பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆ.சுந்தரமூர்த்தி ஆகியோர் நிகழ்த்தினர். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் இராணுவ அதிகாரிகளான மேஜர் சம்பத், மல்லாவி இராணுவ அதிகாரி அபயக்கோன் உட்படப் பழைய மாணவர் சங்கத்தினர், அயல்பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொது மக்களெனப் பலர் கலந்து கொண்டனர்.

(க-415)

## மட்டு. காளி கோயிலில் அம்மன் நகைகள் திருட்டு



மட்டக்களப்பு, ஜூன்5

வாழைச்சேனை, புதுக்குடியிருப்பு பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் அம்மனுக்கு அணியும் பெறுமதிமிக்க தங்க ஆபரணங்கள் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. குறித்த ஆலயத்தின் உட்புற பூட்டுக்கள் உடைக்கப்பட்டு மூல விக்கிரகத்தில் அணியப்பட்டிருந்த நகைகளே திருடப்பட்டுள்ளன.

108 நவரத்தினம் பதிக்கப்பட்ட தங்க கிரீடம், தங்கத்தாலி, தங்கமாலை, ஓம் தங்கப் பதக்க மாலை போன்றவை திருடப்பட்டுள்ளன என்று ஆலய பூசகர் பி. மகேந்திரராஜா வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் பிரதேச மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை சம்பவதினம் புதுக்குடியிருப்பு கோராவெளி கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த திருக்குளிர்த்தி திருச்சடங்கு விழா இடம்பெற்றதால் பிரதேச மக்களில் பலர் குறித்த ஆலயத்தின் பூசை வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

இவ்வாறான சந்தர்ப்பத்திலேயே திருட்டு இடம் பெற்றுள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ச 31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அவையும் பல்கலைக்கழக கரம் அணியும் இணைந்து நடத்தும் ஆண்களுக்கான கரம் சுற்றுப்போட்டிகள் யாழ்.பல்கலைக்கழக உள்ளக விளையாட்டு அரங்கில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியது. லீக் முறையில் நடத்தப்படும் இந்தப் போட்டியில் பல்கலைக்கழக அணியுடன் பாடசாலை அணிகள் மற்றும் கழக அணிகளும் பங்குபற்றின. சனிக்கிழமை ஆரம்பமான போட்டியில் வீரர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

(த-86)

## சுவிஸ் நாட்டு அணியுடன் யாழ்.நகரில் மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 5

சுவிற்சர்லாந்து நாட்டின் சூரிச் சர்வதேசப் பாடசாலையின் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் உதைபந்தாட்ட அணி இன்று செவ்வாய் கிழமை யாழ். துரைப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் உதைபந்தாட்டப் போட்டியில் பங்கு கொள்ளவுள்ளது.

இன்று மாலை 4 மணியளவில் இடம் பெறும் ஆட்டத்தில் சூரிற் சர்வதேச பாடசாலை 19 வயதுப் பிரிவு பெண்கள் அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட 19 வயதுப் பிரிவு பெண்கள் அணி மோதவுள்ளது.

மாலை 5 மணியளவில் இடம் பெறும் ஆட்டத்தில் சூரிச் சர்வதேசப் பாடசாலை 19 வயதுப் பிரிவு ஆண்கள் அணியுடன் மன்னார் மாவட்ட 19 வயதுப் பிரிவு ஆண்கள் உதைபந்தாட்ட அணி மோதவுள்ளது.

**இந்த ஆட்டங்களில் மன்னார், யாழ்ப்பாணம் ஆண், பெண் உதைபந்தாட்ட அணிகள் பங்குபற்றுகின்றன.**

நாளை புதன்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் சூரிச் சர்வதேச பாடசாலை 19 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்கள் உதைபந்தாட்ட அணியுடன் யாழ்.மாவட்ட 19 வயதுப் பிரிவின் ஆண், பெண் உதைபந்தாட்ட அணி மோதவுள்ளது. (த-23 )

## உதைபந்தாட்டப் போட்டிகள் அடுத்த வாரம் வவுனியாவில்

வலி.வடக்கு, ஜூன் 5

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 11, 12,13 ஆம் திகதிகளில் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு;-

யாழ்ப்பாணம் கரவெட்டி தேவரயாளி இந்துக் கல்லூரி எதிர் மன்னார் சென்.லூசியா மகாவித்தியாலயம்.

கிளிநொச்சி நாச்சிக்குடா அரசினர் தமிழ் கலவன் பாடசாலை எதிர் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி.

கிளிநொச்சி பிரமானந்தனாறு மகாவித்தியாலயம் எதிர் யாழ்ப்பாணம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

மன்னார் முருங்கன் மகா வித்தியாலயம் எதிர் நொச்சிமோட்டை ஜெ.எஸ். கல்லூரி.

யாழ்ப்பாணம் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை எதிர் முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் மகா வித்தியாலயம்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் எதிர் கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயம் மன்னார் உடுப்புக்குளம் மகா வித்தியாலயம் எதிர் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம்

இரண்டாம் சுற்றில் இருந்து கடந்தாண்டு சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி மோதவுள்ளது. (த-86)

# பெருவிளையாட்டுப் போட்டிகள் நாளை வவுனியாவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் மூன்று கட்டமாக வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் மாவட்டங்களில் இடம்பெறவுள்ளன இதில் முதலாம் கட்டப் போட்டிகள் நாளை புதன்கிழமை வவுனியாவில் ஆரம்பமாகின்றன.

**பெரு விளையாட்டுப் போட்டிகள் மூன்று கட்டமாக வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் மாவட்டங்களில் இடம் பெறவுள்ளன.**

அதில் புதன்கிழமை 19 வயதுப் பிரிவு ஆண்,பெண் இருபாலருக்குமான உடற்பயிற்சிப் போட்டி இடம் பெறவுள்ளது. ஆண்களுக்கான போட்டி வவுனியா நகரசபை மைதானத்திலும் பெண்களுக்கான போட்டி வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது .

19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலருக்குமான கிரிக்கெட் போட்டி 7 ஆம், 8 ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளது. இதில் ஆண்களுக்கான போட்டி வவுனியா நகரசபை மைதானத்திலும் பெண்களுக்கான போட்டி ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலருக்குமான ஹொக்கிப் போட்டி 9 ஆம், 10 ஆம் திகதிகளில் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

15 வயது, 17 வயது, 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியும், 19 வயது பிரிவு பெண்களுக்குமான உதைபந்தாட்டப் போட்டி 11ஆம், 12ஆம், 13 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

15 வயது ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்திலும்,17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி வவுனியா முஸ்லிம் மகாவித் தியாலயத்திலும் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி வவுனியா நகரசபை மைதானத்திலும் 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான உதைபந்தாட்ட போட்டி வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயத்லும் இடம் பெறவுள்ளது.

(த-23)



யாழ். மாவட்ட பிரதேச செயலகங்க்ள் ,உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கிடையே இடம் பெற்ற விளையாட்டுப் போட்டியில் தெல்லிப்பளை பிரதேச செயலக மாவட்ட சம்பியனாகக் தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபிணி வரதலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இறுதி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற தெல்லிப்பழை பிரதேச செயலக அணிகளுக்காக வெற்றிக் கிண்ணத்தை தெல்லிப் பழை பிரதேச செயலாளர் ஸ்ரீமோகன் மற்றும் வீரர்கள் இணைந்து விருந்தினர்களிடம் இருந்து பெற்றுக் கொள் வதைப்படத்தில் காணலாம். (த-86)

# வலிகாம வலய தடகள முடிவுகள்

வலி.வடக்கு, ஜூன் 5

வலிகாமம் கல்வி வலயத்தால் கோட்டமட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 11, 13 வயதுப் பிரிவு பெண்களுக்கு இடையே நடைபெற்ற தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

75 மீற்றர்

ஸ்ரீகாந்தன் கார்த்திகா (மானிப்பாய் விவேகானந்தா பாடசாலை). சற்குணராசா ஹம்சினி (அளவெட்டி அருணோதயக் கல்லூரி)

பொன்ராசா கஜனி (ஆனைக் கோட்டை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை.

100 மீற்றர்

ஸ்ரீ காந்தன் கார்த்திகா (மானிப்பாய் விவேகானந்தா பாடசாலை). சற்குணராசா ஹம்சினி (அளவெட்டி அருணோதயக் கல்லூரி)

உயரம் பாய்தல்

எஸ்.சிரோமி (உடுவில் மகளிர் கல்லூரி) யோகானந்தன் பிரந்திகா (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), சக்தி ஜீஸ்வரன் றோகினி (ஈவினை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை

நீளம் பாய்தல்

மோகன்ராஜ் மரின்சியா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி)

யோகானந்தன் டயனி (மானிப்பாய் விவேகானந்தா பாடசாலை)

ஜெயசீலன் கிருசாந்தினி (பண்டத்தரிப்பு பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்)

13 வயதுப் பிரிவு

100 மீற்றர்

நாகேஸ்வரன் சபிதா (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி) பிரமத் ஆசா றொசாயினி (சுழிபுரம் வடக்கு ஆறுமுகம் வித்தியாலயம்)

பாஸ்கரன் சாணு (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)

200 மீற்றர்

பிரமத் ஆசா றொசாலினி (சுழிபுரம் வடக்கு ஆறுமுகம் வித்தியாலயம்)

பாஸ்கரன் சாணு (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)

நாகேஸ்வரன் சபிதா (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)

உயரம் பாய்தல்

இராசரத்தினம் கல்சியா (நவாலி மகா வித்தியாலயம்) பாஸ்கரன் சாணு (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)

எஸ். கனிஸ்ரா (உடுவில் மகளிர் கல்லூரி)

நீளம் பாய்தல்

நீக்கிலப்பிள்ளை லக்சனா (பண்டத்தரிப்பு ஜெசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை) தயாபரன் ஜான்சி (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி) ஆர். மோவிதா (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி)

4×100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி உடுவில் மகளிர்கல்லூரி அளவெட்டி அருணோதயக் கல்லூரி.

(த-86)




## மாணவி ஜனுசா மாகாணத்துக்கு தெரிவானார்

யாழ்ப்பாணம், ஜூன் 5

2012 ஆம் ஆண்டுக்கான மெய்வன்மை தடகளப் போட்டியில் கோட்டம், வலயம், மாவட்டம் ஆகியவற்றில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மாணவி ஜனுசா குமாரராசா 21 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் 500 மீற்றர், 800 மீற்றர் ஓட்டங்களில் முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். (14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வொஸ்னியாக்கி

# தீர்ப்புகள் சரியில்லை!


இடம்பெற்றுவரும் பிரெஞ்சுப் பகிரங்க ரென்னிஸ் சுற்றுத் தொடரில் நடுவர்களின் தீர்ப்புகள் இழுக்கைத் தேடித் தருவதாக பிரபல ரென்னிஸ் வீராங்கனை கரோலின் வொஸ்னியாக்கி தெரிவித்துள்ளார். அத்தோடு ஆடுகளத்தில் தனது நடத்தை குறித்து கவலையேதும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

டென்மார்க்கைச் சேர்ந்த வீராங்கனையான கரோலின் வொஸ்னியாக்கி தற்போது உலக ரென்னிஸ் தரப்படுத்தலில் 9 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளார். நேற்று முன் தினம் இடம்பெற்ற பிரெஞ்சுப் பகிரங்க ரெனிஸ் சுற்றுத் தொடரின் ஆட்டத்தில் அவர் 1-6, 7-6, 3-6 என்ற கணக் கில் 23 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ள எஸ்தோனிய வீராங்கனையான கையா கனேப்பியிடம் தோல்வியடைந் தார்.

இந்தப் போட்டியில் மேற்கொள்ளப்பட்டது போன்ற மத்தியஸ்தத் தவறுகள் இழுக்கானவை எனத் தெரிவித்த கரோலின் வொஸ்னியாக்கி, சில முடிவுகள் மிக மோசமானவையாக அமைந்ததாகத் தெரிவித்தார். ஒரு பந்து எல்லையைத் தாண்டி வீழ்ந்தது தெளிவாகத் தெரிந்த போதிலும், அந்தப் பந்து எல்லைக்குள் வீழ்ந்ததாகத் தீர்ப்பு வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.


இதேவேளை, மற்றுமொரு போட்டியில் ரஷ்ய வீரரான மிகைல் யோஷ்னி 6 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ள டேவிட் பெரரிடம் தோல்வியடைந்தார். இந்தப் போட்டியில் அவர் 6-0, 6-2, 6-2 என்ற கணக்கில் தோல்வியடைந்திருந்தார்.

இந்தத் தோல்வியை அடுத்து அவர் ரென்னிஸ் ஆடுகளத்தில் தனது சப்பாத்தினால் Sorry என்று எழுதி பார்வையாளர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அங்கிருந்த பார்வையாளர்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் போல் உணர்ந்ததாகத் தெரிவித்த அவர், அவர்களுக்கு சிறந்த போட்டியொன்றைப் பார்வையிடும் வாய்ப்பைத் தான் வழங்கியிருக்கவில்லை எனவும் தெரிவித்தார். [5]



© AFP/GETTY IMAGES

# தகுதிச் சுற்றில் வென்றது ஆர்ஜென்ரீனா



ஆர்ஜென்ரீனா, ஈகுவடார் அணிகள் மோதிய தகுதிச் சுற்று ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா வீரர்கள் சிறப்பாக விளையாட 4-0 என்ற கணக்கில் ஈகுவடாரை இலகவாக வீழ்த்தியது.

உலகக் கிண்ண தகுதி சுற்று ஆட்டங்களின் 'ஜி' பிரிவில் ஆர்ஜென்ரீனா, உருகுவே, சிலி, வெனிசூலா, ஈகுவடார், கொலம்பியா, பெரு, பொலிவியா, பாரகுவே அணிகள் இடம் பெற்றுள்ளன.

இதில் ஆர்ஜென்ரீனா, ஈகுவடார் அணிகள் மோதிய தகுதிச் சுற்று ஆட்டம் பியூனஸ் அயர்சில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

போட்டி தொடங்கிய 20 ஆவது நிமிடத்தில் மான்செஸ்டர் சிட்டி கழக வீரர் செர்ஜியோ அகுவரா ஆர்ஜென்ரீனாவுக்கான முதல் கோலை அடித்தார். தொடர்ந்து 30 ஆவது நிமிடத்தில் ரியல்மாட்ரிட்டின் கழக வீரர் கன்சாலோ ஹீகுவான் 2 ஆவது கோலையும், 32 ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்சி தனது பங்குக்கு ஒரு கோல் அடித்தார்.

ஈகுவடார் அணி வீரர்களால் பதில் கோல் அடிக்க முடியவில்லை இதனையடுத்து, முதல்பாதியில் ஆர்ஜென்ரீனா 3-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

பிற்பாதியில் 76 ஆவது நிமிடத்தில் ரியல்மாட்ரிட் கழகத்தின் விங்கர் ஏஞ்சல் டி மரியா ஆர்ஜென்ரீனாவுக்கான 4 ஆவது கோலை அடித்தார். இறுதியில் ஆர்ஜென்ரீனா 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று 'ஜி' பிரிவில் முதலிடத்தை பெற்றுள்ளது.

ஆர்ஜென்ரீனா 5 ஆட்டங்கள் மூலம் 10 புள்ளிகளை ஈட்டியுள்ளது. சிலி 5 ஆட்டங்கள் மூலம் 9 புள்ளிகள் பெற்று 2 ஆவது இடத்தில் உள்ளது. [5]

# துருப்புச் சீட்டு நரைன்

இங்கிலாந்து அணியுடனான கடைசி டெஸ்ட் ஆட்டத்தில், இளம் சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைன் துருப்புச் சீட்டாக இருப்பார் என்று மேற்கிந்திய தீவுகள் அணி தலைமை பயிற்சியாளர் ஒற்றிஸ் கிப்சன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து, மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையில் 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது.

முதல் 2 டெஸ்டிலும் அபாரமாக வென்ற இங்கிலாந்து அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிப்பதுடன் தொடரையும் ஏற்கனவே கைப்பற்றிவிட்டது. இந்த நிலையில், கடைசி டெஸ்ட் ஆட்டம் பர்மிங்காமில் 7 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.


இந்த டெஸ்ட் ஆட்டத்துக்காக மேற்கிந்திய தீவுகள் அணியில், காயம் அடைந்துள்ள வேகப்பந்து வீச்சாளர் கமர் ரோச்சுக்கு பதிலாக, சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைன் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த கடைசி டெஸ்ட் ஆட்டத்தில், தங்கள் அணியின் துருப்புச் சீட்டாக நரைன் இருப்பார் என்று மேற்கிந்திய தீவுகள் அணியின் பயிற்சியாளர் கிப்சன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர்கூறுகையில், நரைன் வருகையால் எங்கள் பந்துவீச்சு பலமாகி இருக்கிறது. இங்கிலாந்து மண்ணில் அவர் முதல் முறையாக சர்வதேச ஆட்டத்தில் விளையாட உள்ளார். அவரது பந்துவீச்சு பற்றி இங்கிலாந்து வீரர்களுக்கு அவ்வளவாகத் தெரியாது என்பது எங்களுக்கு சாதகமாக இருக்கும். கடைசி டெஸ்டில் எங்களின் துருப்புச் சீட்டாக நரைன் விளங்குவார்.

ஐ.பி.எல். தொடரில் அசத்தியது போல டெஸ்ட் தொடரிலும் அவர் சிறப்பாகப் பந்துவீசி இலக்குகளை வீழ்த்துவார் என்று நம்புகிறேன் என்றார். [5]




சுனில் நரைன்



# பதவியேற்றார் சச்சின் எம்.பி.

நாடாளுமன்ற உறுப்பினராக,பிரபல இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் நேற்று பதவியேற்றார்.கடந்த ஏப்ரல் 27 ஆம் திகதியன்று நாடாளுமன்ற உறுப்பினர்களாக கிரிக்கெட் வீரர் சச்சின், பொலிவூட் நடிக்கை ரேகா ஆகியோர் காங்கிரஸ் கட்சி சார்பில் நியமிக்கப்பட்டனர். இதில் நடிகை ரேகா முன்னதாக பதவியேற்று நாடாளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.ஆனால், சச்சின் டெண்டுல்கர் ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடி கொண்டிருந்ததால், அவர் பதவியேற்க முடியவில்லை. இந்த நிலையில் நாடாளுமன்றத்துக்கு நேற்று வந்த சச்சின் டெண்டுல்கர்,ராஜிவ்சுக்லாவை சந்தித்துப் பேசினார். அதன் பின்னர் நாடாளுமன்றத்தில் மாநிலங்களவை உறுப்பினராக சச்சின் பதவியேற்றார். அவருக்கு ஹமீத் அன்சாரி பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

புதிதாக நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்ற பின்பு சச்சின் கூறியதாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன். என்னை நாடாளுமன்ற உறுப்பினராக தேர்வு செய்ய ஆதரவு அளித்த சக நண்பர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.நாடாளுமன்ற உறுப்பினராக நான், கிரிக்கெட் மட்டுமல்ல மற்ற விளையாட்டுத்துறைகளை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்க என்னால் முடிந்த முயற்சிகளை மேற்கொள்வேன். நாடாளுமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டதன் மூலம் மற்ற விளையாட்டுத்துறைகளுக்கு என்னால் உதவி செய்திட வாய்ப்பு கிடைத்துள்ளது என்றார். இந்திய கிரிக்கெட் அணியில் இருந்து ஓய்வு பெற்ற முன்னாள் வீரர்கள் தான் இதுவரை நாடாளுமன்ற உறுப்பினர்களாகியுள்ளனர். ஆனால் இந்திய கிரிக்கெட் அணியில் இன்னும் இடம் பெற்று தொடர்ந்து விளையாடி வரும் சச்சின் டெண்டுல்கார், முதன்முறையாக நாடாளுமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டக்வேர்த் முறை வேண்டாம்



மழையால் பாதிக்கப்படும் மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட போட்டிகளுக்கு டக்வேர்த் லூயிஸ் முறையைத்தொடர்ந்து பயன்படுத்த சர்வதேசக் கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் செயற்குழு மேற்கொண்ட முடிவுக்கு இந்திய அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரரும் நேர்முகவர்ணனையாளருமான சுனில் கவாஸ்கர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் லண்டன் லோர்ட்ஸில் ஒன்றுகூடிய சர்வதேசக் கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் செயற்குழு மழையால் பாதிக்கப்படும் மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட போட்டிகளுக்கான வெற்றி தோல்விகளைத் தீர்மானிக்க, ஓட்ட இலக்குகளைத் தீர்மானிக்க டக்வேர்த் லூயிஸ் முறையைத் தொடர்ந்தும் பயன்படுத்தத் தீர்மானித்தது. அத்தோடு அதற்கு மாற்றீடாகப் பரிந்துரைக்கப்பட்ட ஜெயதேவன் முறை எந்தவிதமான அதிக அனுகூலங்களையும் டக்வேர்த் லூயிஸ் முறையை விடத் தரவில்லை எனவும் அந்தக் குழு தெரிவித்திருந்தது.

இந்த முடிவுக்காகவே சுனில் கவாஸ்கர் சர்வதேசக் கிரிக்கெட் சபையை சாடியுள்ளார். சர்வதேசக் கிரிக்கெட் சபை ஆகக்குறைந்தது ஒரு வருடத்திற்காவது ஜெயதேவன் முறையை பரீட்சார்த்தமாகப் பயன்படுத்த வாய்ப்பு வழங்கியிருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். ஏனைய விதிகள், நடைமுறைகளை நடைமுறைப்படுத்தும் போது அவற்றிற்கு பரீட்சார்த்தமாக வாய்ப்பு வழங்குவதைப் போல் ஜெயதேவன் முறைக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

தென் இந்தியாவின் கேரளாவைச் சேர்ந்த பொறியியலாளரான ஜெயதேவன், ஒரு தசாப்தகாலமாக முயன்று டக்வேர்த் லூயிஸ் முறைக்கு மாற்றீடான இந்த முறையைக் கண்டுபிடித்துள்ளார். இந்த முறையே இந்தியாவின் உள்ளூர் தொடர்களில் 2007 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முறையை உள்ளூர் தொடர்களில் பயன்படுத்துமாறு சுனில் கவாஸ்கரே பரிந்துரைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு ஜெயதேவன் முறைக்கு போதிய வரவேற்பைப் பெற்றுக் கொடுக்க இந்திய ஊடகங்கள் முயற்சிக்கவில்லை எனவும் சுனில் கவாஸ்கர் குற்றஞ்சாட்டினார். இந்திய ஊடகங்கள் ஐ.பி.எல். போட்டிகளோடு காணப்பட்டதாகவும், தேவையான ஆதரவைப் பெற்றுக் கொடுக்கத் தவறியிருந்ததாகவும் தெரிவித்தார்.

(5)

CRICKET AUSTRALIA

# சம்பளம் தராவிட்டால் புறக்கணிப்போம்

போதிய சம்பளம் தரவில்லை என்றால், இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை புறக்கணிப்பது என்று ஆஸ்திரேலிய வீரர்கள் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

போட்டிகளில் வீரர்கள் வெளிப்படுத்தும் திறமையின் அடிப்படையிலேயே இனிமேல் சம்பளம் வழங்குவது என கிரிக்கெட் ஆஸ்திரேலியா (சி.ஏ.,) முடிவு செய்துள்ளதாக தெரிகிறது. இதற்கு வீரர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு நிலவுகிறது. இதனால், இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடர் அல்லது '20/20' உலகக்கிண்ணத் தொடரின் போது புறக்கணிப்பல் ஈடுபட, ஆஸ்திரேலிய வீரர்கள் திட்டமிட்டுள்ளனர். இதுகுறித்து 'ஆஸ்திரேலியன்' என்ற பத்திரிகையில் வெளியான செய்தியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

தற்போது சி.ஏ.,யின் வருமானத்தில் 26 சதவீதத்தை, வீரர்கள் சம்பளமாகப் பெற்று வருகின்றனர். புதிதாகக் கொண்டு வரப்படவுள்ள ஒப்பந்தத்தின் படி இந்தச்சம்பளம் குறைய வாய்ப்புள்ளது. இதன் மூலம் சி.ஏ., அதிக வருமானத்தை எடுத்துக் கொள்ளப் பார்க்கிறது. வீரர்கள் தங்களுக்கு அதிக சம்பளம் வேண்டும் என்று கேட்கவில்லை. அதேநேரம், போதிய வருமானம் உள்ள நிலையில், இப்போது உள்ளதை விட குறைவான அளவு சம்பளம் கிடைக்கக்கூடாது என்று தான் எதிர்பார்க்கின்றனர். இதனால் வீரர்கள் சங்கத்துக்கும் கிரிக்கெட் ஆஸ்திரேலியாவுக்குமிடையில் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது.- என்றுள்ளது.

இதுகுறித்து ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் சங்கத்தின் (ஏ.சி.ஏ.,) தலைவர் மார்ஷ் கூறுகையில், ''இன்னும் 27 நாள்கள் உள்ளன. இதற்குள் அனைத்து வழி முறைகளிலும் பேச்சுவார்த்தை நடத்துவோம். ஒருவேளை ஜூலை 1க்குள் சம்பளம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் முடிவுக்கு வரவில்லை என்றால், என்ன செய்வது என்பது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும்'' - என்றார்.

(ந)

# ஆஷஷ் தொடருக்கு முன்னர் ஆஸி. வீரர்கள் பகிஷ்கரிப்பு

ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் வீரர்கள் இடம்பெறவுள்ள இங்கிலாந்துத் தொடருக்கு முன்னதாகப் பணிநிறுத்தத்தில் ஈடுபட வாய்ப்புக்களுள்ளதாக அந்த நாட்டின் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. அந்த நாட்டுக் கிரிக்கெட் சபையுடன் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை காரணமாகவே இந்த நிலை ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபை அண்மையில் தயாரித்து முடித்த திறமை வெளிப்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஊதியம் என்ற புதிய வகை ஒப்பந்தத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள முரண்பாடுகளே இந்த நிலையைத் தோற்றுவித்துள்ளன. இந்தப் புதிய வகை ஒப்பந்தம் தொடர்பாக ஆஸ்திரேலியக் கிரிக்கெட் வீரர்கள் திருப்தியின்மையையும் வெளிப்படுத்தியுள்ளதாக அந்தச் செய்தியறிக்கை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஆஸ்திரேலியக் கிரிக்கெட் வீரர்கள் அமைப்பின் தலைவர் போல் மார்ஷ், ஜூலை முதலாம் திகதிக்கிடையில் இரு தரப்பினரிடையே இணக்கப்பாடொன்று எட்டப்படாவிடில் அதன்பின்னர் போட்டிப் பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் வீரர்கள் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாகத் தெரிவித்தார்.

இதனடிப்படையில் வீரர்கள் அடுத்ததாக இடம்பெறவுள்ள இங்கிலாந்துக்கான ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரையோ அல்லது இலங்கையில் இடம்பெறவுள்ள 'ரி-20' உலகத் தொடரையோ வீரர்கள் பகிஷ்கரிப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாக அந்தப் பத்திரிகை மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

(5)


முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனமான

## திசைகாட்டி

யாழ். குடாநாட்டில் விசா மோசடியால் பாதிப்புற்ற எங்கள் இளந்தலைமுறையினருக்கு கை கொடுக்க தயாராகின்றது

- யாழ். குடாநாட்டில் அண்மித்த காலப்பகுதியில் போலி விசா முகவர்களிடம் சிக்கி தங்கள் வாழ்வையும், பணத்தையும் தொலைத்துவிட்ட எம் இளையோரே நீங்கள்.
- இழந்த பணத்தை மீட்டுக் கொள்ள சட்டரீதியான அருகதை இருப்பின் போலிகளை குற்றவாளிகள் என நிரூபிப்பதற்கு வியாக்கியானப்படுத்த வழக்குரைக்க நாங்கள் நிதிஉதவி புரிவோம். நீங்கள் இழந்துவிட்ட நிம்மதியை நீங்கள் பெற நாம் உதவிக் கரம் நீட்டுகின்றோம்.

**இது வியாபார ரீதியான சங்கதி அல்ல.**

உங்களது சட்ட சம்மதமான அத்தனை ஆவணங்களுடன் எங்களிடம் வாருங்கள்.

புதன்கிழமை 06.06.2012 முதல் தொடர்பு கொள்ளலாம்.

*விசேட ஆற்றுப்படுத்தும் அலுவலர்:*

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட் (PV 82703)

முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்.

தலைமைக் காரியாலயம்-
37, சிவகுருநாதர் லேன்,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016, 0756574136.

உதவுதொகை,
உதவுவகை, உதவுகாலம்
எம்மைப் பொறுத்ததே.

இவ் விவரணம் திசைகாட்டியின் கௌரவ இயக்குநர் சபையின் கட்டளைப்படியே பிரசுரமாகின்றது.


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| கண் மகிழ | | கண் நெகிழ |
|---|---|---|
| 12 | | 06 |
| * | | * |
| 12 | | 05 |
| * | | * |
| 1937 | | 2012 |



## அருளப்பு (f)பினியன் அரியநாயகம் (அரியம்)

*''சீவியத்தில் என்னை நேசித்தவர்களே*
*மரணத்திலும் என்னை மறவாதீர்கள்''*

கடந்த 06.05.2012ஆம் திகதியன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவரின் திடீர் மரணச் செய்தி கேட்டு நேரிலும் தொலைத் தொடர்பு மூலமும் ஆறுதல் கூறி, மலர் வளையம், துண்டுப் பிரசுரம், பதாதைகள் மூலமும் அஞ்சலி செலுத்தி மேலும் பல்வேறு வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன சகல துறை ஊழியர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள் மற்றும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகள்.

இரவது நினைவுத் திருப்பலி இன்று (05.06.2012) செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு பாண்டியன்தாழ்வு யாழ்ப்பாணம், புனித அன்னாள் ஆலயத்திலும், (09.06.2012) சனிக்கிழமை லண்டன் Harrow on the Hill Roxborough Park, the Our lady and St.Thomas of Canterbury ஆலயத்தில் மாலை 6 மணிக்கும் ஒப்புக் கொடுக்கப்படும்.

திருப்பலியின் பின் எமது இல்லத்தில் நடைபெறும் உபசரணையில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

54/3, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்- மனைவி,
மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்
மற்றும் குடும்பத்தினர்.


ரூபா 19999.00 செலுத்தி கணணியொன்றினை வீட்டிற்கு எடுத்துச் செல்லுங்கள்.....

MARSHA SYSTEMS (PVT) LTD www.marshasystems.lk
SOLUTION TO THE PEOPLE

CLASSIC

Intel 3.0 Ghz (1 year)
Asrock G41 (3year)
2 GB DDR III (3year)
Hard Disk 80 GB (1year)
20" LCD compaq (3year)
UPS DCP (2year)
ATX Casing (1year)
DVD Writer (1year)
KEY Board
Mouse

ரூ.40000/- ஜாதாரந்தன் ரூ.5000

Camera Phone இலவசம் Conditions Apply

## விற்பனைக்கு

செங்கல், கருங்கல் சல்லி,
அத்திபாரக் கற்கள்,
நிலப்பதிப்புக் கற்கள் குறைந்த விலையில் விற்பனைக்கு.
தொடர்புக்கு
0773818799

## வேலைக்கு ஆள்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல புத்தகசாலைக்கு விற்பனை உதவியாளர் தேவை. சுயவிவரக் கோவையுடன் அணுகவும். (பெண்கள் விரும்பத்தக்கது)
தொடர்புக்கு -0212222573

## Brilliant International Studies

சங்கத்தானை சாவகச்சேரி
"French" மொழி வகுப்புக்கள்
புதிய பிரிவு ii
ஆரம்பம்; 06.06.2012 புதன்
காலை 7 மணி
Contact;- 0776679544

## PERSONAL CLASS

123/2, Temple road, Jaffna.
Science
by- MAHENDRAN

O/L- 2012 பிரிவுக்கான 'வினா விடை' வகுப்புகள் நடைபெறுகிறது.
* 30 வருட வினாக்கள் ஆராயப்படும் 'A' சித்தி பெறுவதற்கானவிசேட செயற் திட்டம்.
* யாழ், தென்மராட்சி புகழ் ஆசிரியரின் வழிகாட்டல்.
திங்கள், புதன்- 6.30pm- 7.30pm
T.P- 0776679544

CIMA UK Free Passing Advice, Degree holders Exemption Processing Convenience time Class, Bank Loan Arrangements
மேலதிக விபரங்களுக்கு தயக்கம் இன்றி MCAI CAMPUSடன் நேரில்
MCAI CAMPUS
SMS Your name & Course to 775520940 & Get Schol.
243, Adiyapatham Road, Kalviyankadu
Www.mcaicampus.info
(கல்வியங்காடு சந்தி அருகில், Bus Route 750/751)
Qualified Lectures panel, Passing Guarantee, 12 Years Experience
Supported by Jaffna Computer Society


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட[illegible]ர் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org